400 லொறிகள்
பக்கம் 07

24 பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

உதயன்

சுடர்: 29 கதிர்: 223 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆனி 23, திங்கள் 07.07.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

32°C
தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுக்கம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

# உள்நாட்டிலும் சாட்சிகளை பதிவதில் ஐ.நா. திட்டவட்டம்

## தயாராகி வருகின்றது அதற்கான பொறிமுறை

ஜெனிவா, ஜூலை 7
இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை செய்யவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக விசாரணைக் குழு நாட்டுக்குள் வருவதற்கு கொழும்பு அரசு தடை விதித்துவிட்டாலும் கூட உள்நாட்டிலிருந்தும் சாட்சியங்களை நேரடியாகப் பதிவு செய்வதில் விசாரணைக் குழு திட்டவட்டமாக இருக்கின்றது என்று 'உதயன்' அறிந்தது.
அரசு தடைவிதித்து விட்டால் விசாரணைக் குழுவினர் நேரடியாக நாட்டுக்குள் வந்து சாட்சியங்களைப் பதிவு செய்ய முடியாது. இது விசாரணையின் நம்பகத் தன்மையையும், அதன் காத்திரத்தையும் பாதித்து விடக்கூடாது என்பதில் விசாரணைக் குழுவினர் உறுதியாக உள்ளனர். எனவே இலங்கைக்குள் சாட்சியங்களைப் பதிவு செய்வதற்கான சாத்தியங்களையும், அதற்கான பொறிமுறைகளையும் அவர்கள் தற்போது உருவாக்கி வருகின்றனர். இது தொடர்பான சில நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பமாகி விட்டன என ஜெனிவா வட்டாரங்கள் 'உதயனுக்கு' உறுதியாகத் தெரிவித்தன. விசாரணை முடியும் வரை அந்தப் பொறிமுறை பற்றிய விடயங்களை வெளிப்படுத்த முடியாது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.
"விசாரணையின் உண்மைத் தன்மையையும் நேர்மையையும் உறுதிப்படுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் ஐ.நா. மேற்கொள்ளும். அதில் பாதிக்கப்பட்ட நேரடியான சாட்சிகளின் வாக்குமூலத்துக்கு பெரும் பங்களிப்பு இருக்கின்றது."- என்று அந்த வட்டாரங்கள் 'உதயனுக்குத்' தெரிவித்தன.(உ)

## விசாரணை விட்யத்தில் பாக். அரசு தலையிடமுடியாது



கொழும்பு, ஜூலை 7
இலங்கையில் நடைபெற்ற போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் இடம்பெறும் விசாரணைகளில் பாகிஸ்தான் அரசு தன்மீது எத்தகைய தலையீடுகளையும் மேற்கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நியமித்துள்ள மூன்று நிபுணர்களில் ஒருவரான அஸ்மா ஜெஹாங்கீர்.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்காவால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையைத் தோற்கடிப்பதற்கு பாகிஸ்தான் பெரும் பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்தது. ஆயினும் அவற்றையெல்லாம் தாண்டி பிரேரணை நிறைவேற்றப்பட்டது. இந்தநிலையில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நியமித்துள்ள நிபுணர்கள் மூவரில் ஒருவரான அஸ்மா

22 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு ரயில் சேவைகள் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூலை 7
கொழும்பு கோட்டையிலிருந்து பளை வரை சேவையில் ஈடுபடும் ரயில் தடம் புரண்டுள்ளது. அநுராதபுரம், பரசன்கஸ்வெவ பிரதேசத்தில் இந்த ரயில் தடம் புரண்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

22 ஆம் பக்கம் பார்க்க



நேற்று முல்லைத்தீவில் நடைபெற்ற காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாகச் சாட்சியமளித்த பெண்.

## இந்திய மீனவர்கள் 20 பேர் கைது

மன்னார், ஜூலை 7
கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்கள் 20 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த மீனவர்கள் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் 4 படகில் மீன்பிடியில் ஈடுபட்டனர் என்றும் மேலும் கூறப்பட்டுள்ளது.
கைது செய்யப்பட்ட மீனவர்கள் மன்னார் வளைகுடா கடற்படை முகாமில் வைத்து விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டு நேற்றுக் காலை நீரியல் வளத்துறை அமைச்சு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும், அவர்கள் அனைவரும் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## இன்று கொழும்பு வரும் ரமபோஷ இரவு மஹிந்தவை சந்திக்கின்றார்

### நாளை காலை கூட்டமைப்புடன் பேசுவார்

கொழும்பு, ஜூலை 7
இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் தொடர்பில் தென்னாபிரிக்க அரசால் நியமிக்கப்பட்டிருக்கும் சிறப்புத் தூதுவரும், தென்னாபிரிக்க அரசின் துணை ஜனாதிபதியுமான சிறில் ரமபோஷ இன்று இலங்கை வந்தடைவார். அவர் உடனடியாக இன்று காலையே வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை தனித்தனியே சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.
அதன்பின்னர் இன்றிரவு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இரவு நேர உணவுடன்

22 ஆம் பக்கம் பார்க்க



## இராணுவத்தின் ஷெல்களே மக்களை காவு கொண்டன

### முல்லைத்தீவில் மக்கள் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஜூலை 7
இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலிலேயே ஆயிரக்கணக்கான மக்கள் இறுதிக் கட்டப் போரில் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டு வீதிகளில் சிதறுண்டு கிடந்ததைக் கடந்தே, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்றோம் – இவ்வாறு ஆணைக்

22 ஆம் பக்கம் பார்க்க

## பீரிஸ் இந்தியா பயணம்

### மீனவர் பிரச்சினை குறித்து பேசுவாராம்



யாழ்ப்பாணம், ஜூலை 7
நாளை மறுதினம் இந்தியா பயணமாகவுள்ள வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், புதுடில்லியில் இந்திய மத்திய அரசின் உயர்மட்ட அதிகாரிகளுடன் சந்திப்பை மேற்கொள்ளவுள்ளார்.

22 ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேசத்துடன் இணைந்து செயற்படவேண்டும் இலங்கை

### மீண்டும் வலியுறுத்துகின்றது ஐ.நா.

நியூயோர்க், ஜூலை 7
சர்வதேசசமூகத்துடன் இலங்கை இணைந்து செயற்பட வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தியுள்ளது ஐக்கிய நாடுகள் சபை.
இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ-மூனின் பேச்சாளர் பர்ஹான் ஹக், "உள்ளக விசாரணைப் பொறிமுறைமைகளை இலங்கை அரசு மேலும் வலுப்படுத்திக் கொள்ள வேண்டும்" – என்று தெரிவித்துள்

22 ஆம் பக்கம் பார்க்க

## ஓர் அரசின் இராணுவத்திடமே என் கணவரை ஒப்படைத்தேன்

### ஒப்படைத்தவாறு திரும்பத் தாருங்கள் என மனைவி ஆணைக்குழுவிடம் கதறல்

யாழ்ப்பாணம், ஜூலை7
பொறுப்பான அரசின் இராணுவத்தினரிடம் எனது கணவரைக் கையளித்தேன். மனிதாபிமானமுள்ள அரசு என்றால் நான் உயிருடன் கையளித்த கணவனை என்னிடம் அப்படியே திருப்பித் தர வேண்டும். எனது கணவர் காணாமல் போகவில்லை. அவரை நான் இராணுவத்தினரிடமே கையளித்தேன் - இவ்வாறு நேற்று ஆணைக்குழு முன்பாக இளம் தாய் ஒருவர் கண்ணீருடன் சாட்சியமளித்தார்.
காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்

22 ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ரமபோஷ இலங்கை வந்தால் வீரவன்ஸ வெளியேறுவாராம்

கொழும்பு, ஜூலை 7

இலங்கையில் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்காக தென்னாபிரிக்கப் பிரதி ஜனாதிபதி சிறில் ரமபோஷ தலைமையிலான உயர்மட்டக் குழு ஒன்று கொழும்பு வரவுள்ள நிலையில், ஆளும் கட்சியிலிருந்து வெளியேறப் போவதாக விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி அறிவித்துள்ளது.

“இலங்கை விவகாரத்தில் தலையிடுவதற்கான அதிகாரத்தை தென்னாபிரிக்காவுக்கு இலங்கை அரசு கொடுத்திருப்பது ஒன்றே இந்த அரசிலிருந்து வெளியேறுவதற்கு தமக்குப் போதுமானது" - என்று தெரிவித்துள்ளார் தேசிய சுதந்திர முன்னணியின் பேச்சாளர் முகமத் முசாமில்.

"ரமபோஷவின் இலங்கைப் பயணத்துக்கு அரசு பச்சைக் கொடி காட்டியிருக்கின்றது. இது கவனிக்கப்பட வேண்டிய மிகவும் முக்கியமானதொரு விடயமாகும். அரசிலிருந்து விலகுவதா இல்லையா என்பது தொடர்பில் இறுதித் தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கான நிர்ப்பந்தத்தை அது ஏற்படுத்தியிருக்கின்றது"- என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

"உள்நாட்டுப் பிரச்சினையில் மூன்றாவது நாடு ஒன்று தலையிடுவதை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். அரசுக்கு தாம் ஏற்கனவே முன்வைத்திருக்கும் 12 அம்சக் கோரிக்கைக்கு இது முரணானது எனவும். இது குறித்து ஊடகவியலாளர் மாநாடு ஒன்றைக் கூட்டி எமது நிலைப்பாட்டை விளக்கவுள்ளோம்.

எம்மால் முன்வைக்கப்பட்ட 12 அம்சக் கோரிக்கையை அரசு கொள்கையளவில் ஏற்றுக் கொண்டிருக்கின்றது. அதில் நான்காவது அம்சம், மூன்றாவது தரப்பு ஒன்று உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதை எதிர்ப்பதாக உள்ளது. இராணுவ வழிமுறைகள் மூலம் பிரச்சினை ஏற்கனவே தீர்க்கப்பட்டுள்ள நிலையில், மூன்றாவது தரப்பு ஒன்றின் அனுசரணையுடன் பேச்சு அவசியம் இல்லை"- என்று தெரிவித்துள்ளார்.(ற)

# சர்வதேச விசாரணை பிளவை ஏற்படுத்தும்

### திலங்க சுமதிபால எம்.பி. தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசாரணைகள் இனங்களுக்கு இடையிலான பிளவினையே ஏற்டுத்தும் என்று தெரிவித்துள்ளார் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால. அண்மையில் நெதர்லாந்தில், சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் தலைவர் சாங் ஹையுன் சொங்கின் முன்னிலையிலேயே இவ்வாறு விளக்கமளித்துள்ளார் சுமதிபால.

"சர்வதேச விசாரணைகளின் மூலம் நாட்டின் நல்லிணக்க முனைப்புக்களுக்கு பாதக நிலைமைகள் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுகின்றது. விசாரணைகளின் மூலம் தமிழ் சிங்கள மக்களுக்கு இடையிலான நம்பிக்கை வலுவிழந்து மீண்டும் முரண்பாடுகள் உருவாகக் கூடிய சாத்தியங்கள் ஏற்படக்கூடும்.

நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் களில் பெரும்பான்மையானவர்கள் சர்வதேச விசாரணைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர். சர்வதேச தலையீடுகளினால் நாட்டுக்கு நன்மை ஏற்படக்கூடிய சாத்தியம் கிடையாது" - என்று அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ற)

# கடலில் மூழ்கி மாணவர்கள் சாவு

மட்டக்களப்பு, ஜூலை 7

மட்டக்களப்பு முகத்துவாரக் கடலில் மூழ்கி மாணவர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுக் காலை நடந்த இந்தச் சம்பவத்தில் முறக்கொட்டான் சேனை கஜமோகன் வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்கள் இருவரே உயிரிழந்தவர்களாவர்.

சுற்றுலாவின் நிமித்தம் ஆசிரியர் மற்றும் பெற்றோர் ஒருவருடன் 14 மாணவர்கள் மட்டக்களப்பு வெளிச்ச வீட்டுக்கு சென்றுள்ளனர். அங்கிருந்து அவர்கள் படகு மூலமாக முகத்துவாரம் பகுதிக்குச் சென்றபோது அங்கு மட்டிபிடிக்கச் சென்ற இரு மாணவர்களே கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். அவ்விருவரையும் காப்பாற்றுவதற்காக கடலில் இறங்கிய ஐவரும் கரையிலிருந்தவர்களால் காப்பாற்றப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதேவேளை, உயிரிழந்த மாணவர்களான பிரவின் மற்றும் செல்வராணி ஆகிய இருவரினதும் சடலங்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன என்றும், சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)



வலி.மேற்கு பிரதேச சபையின் இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொண்டார். நிகழ்வின் இறுதியில் விளையாட்டு உபகரணங்களையும் அவர் பாடசாலை மற்றும் விளையாட்டு கழகங்களுக்கு அன்பளிப்பாக வழங்கிவைத்தார்.

# பொதுபலசேனாவின் குற்றச்சாட்டை எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்கமுடியாது

### வன்முறைகளுக்கு அவர்களே காரணம் என்கிறார் ஹக்கீம்

கொழும்பு, ஜூலை, 07

பேருவளை, அளுத்கம வன்முறைச் சம்பவங்களுக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசிற்கும் தொடர்பிருக்கின்றது என்று பொதுபலசேனா அமைப்பு கூறும் கருத்தை எக்காலத்திலும் ஏற்க முடியாது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர்மேலும் தெரிவித்ததாவது,

பொதுபலசேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பிலான கவனத்தைத் திசை திருப்ப முயற்சிக்கிறார். அதன் வெளிப்பாடாகவே முஸ்லிம் காங்கிரஸ் மீது குற்றம் சுமத்துகிறார்.

பொதுபலசேனா என்ற பேரினவாத பௌத்த இயக்கமே அண்மைய வன்முறைகளின் பின்னணியில் செயற்பட்டுள்ளது என்பது வெளிப்படையாகத் தெரிந்த விடயம்.

வன்முறைச் சம்பவங்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சியோ அல்லது கட்சி உறுப்பினர்களோ பங்கேற்கவில்லை. அனைவரதும் கவனத்தைத் திசைதிருப்பி தம் மீதான குற்றச்சாட்டுக்களில் இருந்து தப்பித்துக்கொள்ளும் நோக்கிலேயே ஞானசார தேரர் எம்மீது குற்றஞ்சுமத்துகிறார். ஒட்டுமொத்த வன்முறைச் சம்பவங்களும் நன்றாகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதில் எத்தகைய மாற்றுக் கருத்தும் கிடையாது. பொதுபலசேனா இயக்கமே குற்றச் செயல்களை புரிந்து வருகின்றது என்பது வெட்ட வெளிச்சமான உண்மை - என்றார். (ஐ-10)

# ஜயவர்தனபுர மாணவருக்கு நிபந்தனையற்ற மன்னிப்பு

கொழும்பு, ஜூலை 7

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தில் ஒழுக்க மீறல் குற்றச்சாட்டில் வகுப்புத் தடை விதிக்கப்பட்ட மாணவர்கள் உட்பட அனைத்து மாணவர்களுக்கும் நிபந்தனையற்ற மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 3ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழகத்தின் ஊடகப் பேச்சாளர் பேராசிரியர் பிரணீத் அபேசுந்தர வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த மாணவர்களின் பெற்றோரின் வேண்டுகோளை கவனத்தில் கொண்டு இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த தீர்மானத்தை மேற்கொள்ளும்போது மாணவர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் உடல் உள நலன்களும் கருத்தில் கொள்ளப்பட்டன என்றும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# எலும்புக் கூடுகள் மீட்கப்பட்ட பகுதியில் அகழ்வுப் பணிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 07

யாழ்ப்பாணம் முகாமாலைப் பகுதியில் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்ட பகுதியிலுள்ள பற்றைக்காடுகளைத் துப்பரவு செய்து அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அந்தப் பகுதியில் மிதிவெடிகள் அதிகம் காணப்படுவதால் மிதிவெடி அகற்றும் பணியாளர்களின் மூலம் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபடும் பணியாளர்கள் குறித்த பகுதியில் பணிகளை மேற்கொள்ளும்போது, மனித எலும்பு எச்சங்களைக் கண்ணுற்று பளைப் பொலிஸாரிற்கு அறிவித்தனர். அதைத் தொடர்ந்து பளைப் பொலிஸாரின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு நடவடிக்கைகளில் 3 எலும்புக் கூடுகளும் 2 எலும்பு எச்சங்களும் மீட்கப்பட்டதுடன், வெடி பொருள்களும் இதர பொருள்களும் மீட்கப்பட்டன. அவ்விடத்தில் மீட்கப்பட்ட ஆடைகளைக் கொண்டு, அந்த எலும்புக்கூடுகள் விடுதலைப் புலிகளின் பெண் உறுப்பினர்களின் எலும்புக்கூடுகளாக இருக்கலாம் எனப் பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பகுதுயில் தொடர்ந்து அகழ்வு மேற்கொள்வதற்கு பற்றைக்காடுகள் தடையாகவிருந்தமையினால் அவற்றினை அகற்றும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற)

# புலிகள் தலைவர்களை அழித்ததாலேயே பழிதீர்ப்பதற்கு முற்படுகிறது சர்வதேசம்

### அமைச்சர் டளஸ் அலகப்பெரும கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 7

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் உட்பட இயக்கத்தின் முதல் மட்ட தலைவர்களை இறுதிப் போரின் போது தப்பிச் செல்ல அனுமதி அளிக்காத காரணத்தாலேயே மேற்குலக நாடுகள், மஹிந்த ராஜபக்ஷவை பழி தீர்க்க முயற்சிக்கின்றன என்று தெரிவித்துள்ளார் இளைஞர் விவகார அமைச்சர் டளஸ் அலகப்பெரும.

கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியர் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற ஹாரிஸ்பத்துவ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"2005ஆம் ஆண்டு 183,000 வாக்குகளால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றிருக்காவிடில் இந்த நாடு இப்போது எங்கே இருந்திருக்கும் என்று மக்கள் சிந்திக்க வேண்டும். நாடு சுதந்திரம் பெற்று 62 வருடங்கள் சென்றே ஒரு அதிவேக நெடுஞ்சாலையை அமைக்க முடிந்தது. மலேசியா, சிங்கப்பூர் இந்தியா ஆகிய நாடுகள் 25 வருடங்களில் சாதித்ததை சாதிக்க எங்களுக்கு 62 வருடங்கள் சென்றன.

நான் அறிந்த காலத்தில் புதிதாக இரண்டு பிரதான வீதிகளே அமைக்கப்பட்டன. ஒன்று டட்லி சேனநாயக்காவின் ஆட்சி காலத்தில் அமைக்கப்பட்ட எல்ல - வெல்லவாய வீதி, மற்றையது ஜே.ஆர்.ஜயவர்தனவின் ஆட்சி காலத்தில் அமைக்கப்பட்ட, பதுளை - கண்டி ரஜமாவத்தை. அதன் திறப்பு விழாவுக்கு பிரத்தானியாவின் எலிசபத் மகாராணி வந்ததிலிருந்து அதன் முக்கியத்துவம் தெரிகிறது.

மஹிந்த ராஜபக்ஷ இன்று தேசிய தலைவர் மட்டுமல்ல அவர் ஒரு சர்வதேச தலைவராக ஆகி உள்ளார். பஹரேன், பலஸ்தீன், பொலிவியா போன்ற நாடுகளுக்கு சென்ற போது அதி உயர் விருதுகளை வழங்கினார்கள். இலங்கை வரலாற்றில் இவர் போன்று ஒரு தலைவர் உருவாகி உள்ளாரா என்று நாங்கள் எங்களையே கேட்டுக் கொள்ள வேண்டும்.

இறுதிப்போர் இடம்பெற்ற போது பிரபாகரன் உட்பட முதல் மட்ட தலைவர்களை தப்பிக்க வைக்க மேற்கத்திய உலகம் பெரும் முயற்சிகளை எடுத்தது. முல்லைத்தீவை அண்மித்த கடலில் போர்க் கப்பல்களை நிறுத்தி வைத்திருந்தனர். இவர்கள் புலிகளுக்கு உறுதி அளித்திருந்தார்கள். எவ்வாறாவது தலைவர்களை இறுதி நேரத்தில் காப்பாற்றுவதாக. அவர்களுக்கு அது முடியாது போனது. நீங்கள்தான் எங்கள் தலைவர்களை கொலை செய்வதற்கு காரணமாக இருந்தீர்கள் என்று தமிழ் டயஸ்போரா மேற்கத்திய உலகத்தைக் குற்றம் சாட்டுகிறது. அதன் காரணமாகத் தான் இவ்வளவு கஷ்டங்களை அவர்கள் எமது நாட்டுக்கு கொடுக்கின்றனர்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

பக்கங்கள்: இருபத்துநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா யாழ். 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆனி 23 திங்கட்கிழமை (07.07.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 223

## கட்டணம் செலுத்திக் கச்சதீவில் தமிழகமீனவர் மீன்பிடிக்கலாம்

### இந்திய மத்திய அரசு புதிய யோசனை தமிழக மீனவர் அமைப்புக்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம்.ஜூலை.7
கச்சதீவு கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு ஒரு நாளைக்கு 10 ஆயிரம் ரூபா கட்டணமாக இலங்கை அரசுக்கு வழங்கலாம் என இந்திய மத்திய அரசு தீர்மானம் ஒன்றை முன்வைத்துள்ளது.
எனினும் இந்த தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று தமிழக மீனவர் சங்கங்கள் தெரிவித்துள்ளன.
கச்சதீவு கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன் பிடிப்பதால் இலங்கைக் கடற்படை அவர்களைக் கைது செய்கிறது.
இந்த கைதை நிறுத்துவதற்கு ஏற்றவழியாக, இலங்கை அரசுக்கு மீனவர்கள் கட்டணத்தை செலுத்தி மீன்பிடிக்கமுடியும். ஒரு நாளுக்கு 10 ஆயிரம் ரூபாவை படகு உரிமையாளர்கள் செலுத்தி மீன்பிடியை மேற்கொள்ளலாம் என்பதே அந்த தீர்மானம்.
ஆனால் இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தமிழக மீனவர் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.
ஆழ்கடலில் மீன்பிடிப்பவர்களுக்கு வருமானம் கிடைக்கும். இந்தக் கட்டண முறை அவர்களுக்கு சாத்தியப்படும், சாதாரண மீனவர்களுக்கு அவ்வாறான வசதி இல்லைஎன மீனவர் சங்கங்கள் மறுத்துள்ளன.
இதே வேளை இந்திய மத்திய அரசின் இந்த தீர்மானத்தை இலங்கை மீனவர்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். பேச்சின்போது, தமது கடற்பரப்பில் ஒரு நிமிடம் கூட மீன்பிடிக்க அனுமதிக்க மாட்டோம் என மறுத்துள்ள மீனவர்கள் எதிர் காலத்தில் கச்சத்தீவு பகுதியில் கட்டணம் செலுத்தி தமிழக மீனவர்கள் மீன்பிடிக்க எவ்வாறு அனுமதிக்கப் போகிறார்கள் என்று இந்திய மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.
தமிழக மீனவர்கள் பிரச்சினை நிரந்தரமாகத் தீர்க்கப்பட வேண்டுமானால் கச்சதீவை

(22 ஆம் பக்கம் பார்க்க)

# செட்டிகுளத்தில் 6348 ஏக்கர் காணியை இராணுவத்தினருக்கு வழங்க முடியாது

### அந்தப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு

வவுனியா, ஜூலை 07
வவுனியா, செட்டிகுளம் பிரதேசத்தில் இராணுவ தேவைக்காகச் சுவீகரிக்கக் கோரப்பட்டுள்ள 6348 ஏக்கர் காணியையும் அவர்களுக்கு வழங்க முடியாது என செட்டிகுளம் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.
வவுனியா, செட்டிகுளம் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை செட்டிகுளம்



பிரதேச செயலகத்தில் வர்த்தக கைத்தொழில் அமைச்சரும் வன்னி அபிவிருத்திக்குழு தலைவருமான றிசாத் பதியுதீன் தலைமையில் நடைபெற்றது.
இந்த கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,
செட்டிகுளம் பிரதேச மக்களின் காணிகள் உள்ளடங்கலாக 6348 ஏக்கர் காணியை இராணுவத் தேவைக்காக வழங்கு

(22 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளுக்கு எதிராக 20 இராணுவத்தினருக்கு எதிராக 24

### முறைப்பாடுகள் முல்லைத்தீவில் பதிவு

யாழ்ப்பாணம், ஜூலை 07
புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் காணாமற்போனோர் தொடர்பான விசாரணை ஆணைக் குழுவின் இரு நாள் அமர்வுகளிலும், இராணுவத்தினருக்கு எதிராகவும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டன. இரு நாள்களிலும் 20 பேர் வரையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும், எஞ்சியோரில் 24 பேர் வரையில் இராணுவத்தினருக்கு எதிராகவும் தமது முறைப்பாடுகளைப் பதிவு செய்தனர்.
தமிழீழ விடுதலைப் புலிகள் எமது பிள்ளைகளைப் பலவந்தப்படுத்தி கொண்டு சென்றனர். அதன் பின்னர் எமது பிள்ளைகள் வீடு வரவில்லை.

(22 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி விசாரணைக் குழு இவ்வாரம் நியமிக்கப்படும்

அளுத்கம சம்பவம் உட்பட நாட்டில் அண்மைக்காலங்களில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கான உயர்மட்டக் குழுவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாரம் நியமிக் கவுள்ளார்.
குறித்த குழுவில் இடம்பெறவுள்ள உறுப்பினர்களுக்கான தேர்வு, விசாரணைக்குரிய காலவரையறை மற்றும் அதன் ஆயுட்காலம் உள்ளிட்ட ஆரம்பகட்டப் பணிகள் யாவும் நாளையுடன் நிறைவுபெறவுள்ளன எனவும், அதன் பின்னரே, உயர்மட்டக் குழு குறித்து ஜனாதிபதி செயலகம் உத்தியோக பூர்வ அறிவிப்பை விடுக்கவுள்ளது எனவும் அறியமுடிகின்றது.
அளுத்கம சம்பவத்தையடுத்து, நாட்டில் அசம்பாவித சம்பவங்கள் இடம்பெறுவதற்கான காரணங்களைக் கண்டறிவதற்கு உயர்மட்டக் குழு வொன்று நியமிக்கப்படும் என்று கடந்த

(22 ஆம் பக்கம் பார்க்க)

## கடந்த இருநாள்களில் 122 பேருக்கு அழைப்பு 53 பேர் மட்டுமே சாட்சியங்களைப் பதிந்தனர்

### பயங்கரவாத தடுப்பு பிரிவினர் அச்சுறுத்தியதாகவும் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஜூலை 07
ஜனாதிபதி ஆணைக்குழுவின் நேற்றைய அமர்வில் சாட்சியமளிக்க 61 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதும், 29 பேரே ஆணைக்குழு முன்பாகச் சாட்சியமளித்தனர். கடந்த இருநாள்களிலும் மொத்தமாக 122 பேருக்கு அழைப்பு விடுத்திருந்த நிலையில் 53 பேரே ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்துள்ளனர்.
ஆணைக்குழுவின் அமர்வில் சாட்சியமளிக்க வேண்டாம் என்று புலனாய்வாளர்கள் என்று சொல்லிக் கொள்வோரால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்த நிலையிலேயே, மிகக் குறைவானோர் சாட்சியமளித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் ஆரம்பமானது. இதற்கான கடிதங்கள் இருவாரத்துக்கு முன்னரே சாட்சியமளிப்பவர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தன.
கிளிநொச்சியில் ஆணைக் குழுவின் அமர்வு கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற போது, ஆணைக்குழு அமர்வு நடைபெற்ற இடத்துக்கு அருகில், அதே நாளில், பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் காணாமற்போனோரின் உறவுகள் அழைக்கப்பட்டு இறப்புச் சான்றிதழ் பெறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தனர்.
இது போன்று முல்லைத்தீவில் அமர்வு ஆரம்பமாவதற்கு முன்னர், சாட்சியமளிக்க உள்ள உறவினர்களுக்கு தொலை

(22 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு தொழில் முயற்சியாளர்களுக்கு சர்வதேச விருது

யாழ்ப்பாணம்.ஜூலை.7
வடக்கு மாகாணத்தில் முதற்தடவையாக தொழில் முயற்சியாளர்களுக்கான சர்வதேச தரத்திலான விருது வழங்குவதற்கு வர்த்தக தொழில் துறை மன்றம் ஏற்பாடு செய்துள்ளது.
யாழ்ப்பாண வர்த்தக தொழில் துறை மன்றமும் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் தேசிய தொழில் முயற்சி அதிகார சபையும் இணைந்து இந்த விருதை வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளன.

(22 ஆம் பக்கம் பார்க்க)

## உயிரோடு சரணடைந்த என் கணவருக்கு இறப்புசான்றிதழ் பெற வற்புறுத்தப்பட்டேன்

### இளம் தாயொருவர் நேற்றுச் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஜூலை 07
காணாமற்போன எனது கணவருக்கு இறப்புச் சான்றிதழைப் பெறுமாறு பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் பலவந்தப்படுத்தியபோது, அதனை நான் நிராகரித்தேன். இந்த விடயத்தை ஊடகங்களுக்கு தெரிவிப்பேன் என்று நான் கூறிய போது, என்னை கைது செய்து விடுவோம் என்று பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் மிரட்டினர் என்றுஆணைக் குழுவினர் முன்பாகச் சாட்சியமளித்தார் இளம் தயார்.
கடந்த இரு நாள்களாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில், காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வு இடம்பெற்றது.
இதில் நேற்று சாட்சியமளித்த சுபத்திரா,
எனது கணவர் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்தவர். 2009 மே 17 ஆம் திகதி அவர் இராணுவத்தினரிடம் சரணடைந்து இறம்பைக் குளம் மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தார். அவர் இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் போது, வவுனியா வைத்தியசாலையில் 2009 ஜூன் மாதம் 22 ஆம் திகதி சேர்க்கப்பட்டார்.
மறுநாள் 23 ஆம் திகதி காலையில் எனது மாமா, அவரைச் சென்றுபார்த்து உணவு கொடுத்து விட்டுவந்தார். மாலையில் திரும்பிச் சென்றபோது எனது கணவர் அங்கு இல்லை. இராணுவத்தினரின் பொறுப்பில் இருந்த

(22 ஆம் பக்கம் பார்க்க)

## சந்தேகமாக நடமாடியவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்.ஜூலை.7
வடமராட்சி நெல்லியடி பகுதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடினார் என்ற குற்றச்சாட்டில் குடத்தனையை சேர்ந்த ஒருவரை தாம் கைது செய்தனர் என்று நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.
கடந்த 3ஆம் திகதி இரவு 10 மணியளவில், நெல்லியடி கிழக்கு பகுதியில் தாம் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் என்றும் அப்போது அந்த

(22 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைதானவருக்குப் புனர்வாழ்வு

## யாழ்.மேல் நீதிமன்றம் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர் தன் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டதனால் அவருக்கு ஒரு வருடம் புனர்வாழ்வளிக்க யாழ்.மேல்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புனர்வாழ்வின் பின்னர் சட்டதிட்டங்களைப் பேணி நடக்கவும் நீதிமன்று அறிவுரை கூறியுள்ளது.

யாழ்.மேல் நீதிமன்றில் நீதிபதி அ.பிரேம் சங்கர் முன்னிலையில் தீர்ப்புக்காக வெள்ளிக்கிழமை இந்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

உடுப்பிட்டியைச் சேர்ந்த குறித்த நபர் 2006 ஆம் ஆண்டு வடமராட்சியில் பூபால் மாமா என்பவரின் கீழ் நடந்த ஆயுதப் பயிற்சி தொடர்பான தகவல்களைத் தெரிந்திருந்தும் அது தொடர்பான தகவல்களைத் தகுதி வாய்ந்த பொலிஸாருக்கு அறிவிக்கத் தவறியதாக அவருக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டது.

அவர் மீதான வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தால் யாழ்.மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கின் போது அவர் எதிரிக் கூண்டில் ஏற்றப்பட்டு குற்றச்சாட்டுப் பத்திரம் வாசிக்கப்பட்டது. அதன்போது அவர் தன் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டார். அதனையடுத்து அவருக்கு யாழ். சிறைச்சாலையில் இரண்டு வார காலச் சாதாரண சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதோடு வவுனியா பூந்தோட்டமுகாமில் எதிர்வரும் 19 ஆம் திகதியிலிருந்து அடுத்த வருடம் ஜூலை மாதம் 18 ஆம் திகதி வரை புனர்வாழ்வளிக்கப்படவேண்டும் என்றும் நீதிமன்று உத்தரவிட்டது.

புனர்வாழ்வின் பின்னர் சட்டதிட்டங்களைப் பேணி சமூகத்தில் நற்பிரஜையாக வாழவேண்டும் என்றும் மேல்நீதிமன்று அறிவுரை வழங்கியது. (த-4)

## சமய சந்நிதியில்

புலோலி, ஜூலை 7

தென்புலோலியூர் குரும்பைகட்டி சாமுண்டிகாதேவி சமேத ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று திங்கட்கிழமை அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறவுள்ளது.

21 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு சங்காபிஷேகம் ஆரம்பமாகி பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூசை இடம்பெறும். அதனைத் தொடர்ந்து மாலை 5 மணிக்கு சுவாமி சாமுண்டிகாதேவி ஞான வைரவப் பெருமான் முத்துச் சப்பரத்தில் வீதியுலா வருதல் இடம்பெறும். (ஒ-78)


### வருடாந்த மகாசபைக் கூட்டம்

அல்வாய் வேவிலந்தை
ஸ்ரீ முத்துமாரி அம்மன்
தேவஸ்தான வருடாந்த
மகாசபைக் கூட்டம்
13.07.2014 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணிக்கு
மேற்படி ஆலய மண்டபத்தில் நடைபெறும்.
புதிய பரிபாலன சபை
தெரிவுசெய்யப்பட இருப்பதால் உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டுகின்றோம்.

வே.பரராஜசிங்கம்
செயலாளர்.

(சி.14912) (45.3)

### பசு மாடுகள் விற்பனைக்கு

நல்ல இன பசு மாடுகள்
கன்றுகளுடனும் கன்றுகள்
இல்லாமலும் விற்பனைக்குண்டு.
சண்டிலிப்பாய் பிரதேசசபைக்கு அருகில்
தொடர்பு: 078 880 3483

### வீடு விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு நகுலேஸ்வரி வீதியில் (ஓமான் சந்தி அருகில்) 5 பரப்புக் காணியுடன் ஐந்து அறைகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 021 721 0059
075 068 7434

(49556) (7.6.3)

### விற்பனையாகின்றது

'நீருயிர் வளம்' நூல்
O/L மீன்பிடியும், உணவுத் தொழிநுட்பமும்
A/L உயிர்வளத் தொழில்நுட்பம்
சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.
தொடர்பு : தி.தவரத்தினம்
077 153 8126

(49576) (7.6.3)

### அரியாலை வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரீ அம்பாள் தேவஸ்தான சப்பறத் திருவிழா



இன்று
(07.07.2014)
திங்கட்கிழமை
இரவு 7.30
மணிக்கு
நடைபெறும்.
திருவிழா உபயகாரர்
அம்பலம் குடும்பத்தினர்.

(49476)(5.6.4)

### கிரபிக்ஸ் • அனிமேஷன் • மல்டிமீடியா

புலமைப்பரிசில் பரீட்சை July 19th & 20th (Sat & Sunday)

- Graphics
- Animation
- Multimedia
- Web Design
- Special Effects
- 3D Max, MAYA
- Media Technology

மேலதிக விபரங்களுக்கு
CSC-ASIAN
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION
யாழ்.நகரில்
2G, ஸ்ரான்லி வீதி,
T.P : 021-222 5677



உ

புங்குடுதீவு மேற்கு குறிகாட்டுவான் பேச்சிஅம்மன்
என வழங்கப்படும் ஸ்ரீ ஜெகன் மாதா
மனோன்மணி அம்பாள் ஆலய
சித்திரத்தேர் வெள்ளோட்ட
சிறப்பு மலர் -2014

வெள்ளோட்டம் 07.07.2014 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு
இரதோற்சவம் 08.07.2014 செவ்வாய்க்கிழமை



மகோற்சவ பிரதம குரு
சிவஸ்ரீ சாத சங்கரதாஸ்
சிவாச்சாரியார்

விழா சிறப்புற வாழ்த்துக்கள்

இவ்வாண்டு புதிய சித்திர தேரில் குறிகாட்டுவான் மனோன்மணி அம்பாள் வீதிவலம் வரவுள்ளார். இவ்வாலயம் பல நூறு ஆண்டுகள் பழைமை வாய்ந்தது. இங்கே தற்போதைய சித்திரத்தேர் மூன்றாவது தேராகும். காலச் சிதைவுகளால் சேதம் அடைந்ததால் இவ்வாண்டு தேர்த் திருவிழா உபயகாரர்களால் புதிய சித்திரத்தேர் நிர்மாணிக்கப்பட்டு நாளை செவ்வாய்க்கிழமை (08.07.2014) வீதியுலா வருகின்றது. வெள்ளோட்டம் சிறப்புற அமைய வாழ்த்துகின்றோம்.

ஆலய தர்மகர்த்தாக்கள்

ஆலய
பிரதமகுரு
சிவ.
இரமேஸ்
சர்மா

மதுரா
வீடியோ போட்டோ
106/7, ஜம்பட்டா வீதி,
கொழும்பு - 13
தொ.பே. 077 674 9614

(39634) (45.3)

சாயி போட்டோ
1010/11, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 226 3864

## Community Development Organization (CDO) – Mullaitivu Vacancy Announcement

**I. Position Information**

Job Title: Programme Officer
Position Number: CDO/2014/04
Duty Station: Mullaitivu
Duration: 1 year (with possibility of extension)

**II.Organizational Context**

The Community Development Organization (CDO) is a registered voluntary, non-profitable, non-religious, and non-governmental organization working in Mullaitivu district

*Our Mission*
Enrich life of the vulnerable communities through empowerment.

*Our Vision*
To be the most innovative, trusted and best quality development service provider in the region

**III. Summary of Key Functions**

- ☐ Lead and support a consultative planning process for the CDO's project in the District and effective implementation of project work plans, in close consultation and collaboration with Government and other development partners.
- ☐ Assume responsibility for implementation of the CDO's project at the district level and ensure the achievement of the CDO's results framework at the district level through successful management of the project portfolio, in accordance with the strategies and work-plans approved by the Executive Committee and in line with the programme and operations procedures of CDO.
- ☐ Preparation of project proposals, project strategies, work-plans and progress reports.
- ☐ Support Project implementation and monitoring focusing on the achievement of the results.
- ☐ Support resource mobilization and utilization focusing on the achievement of the project objectives
- ☐ Support the project's institutional capacity building
- ☐ Support communication and knowledge management of CDO

**V. Competencies**

Corporate Competencies:

- ☐ Demonstrates integrity by modelling the CDO's values and ethical standards
- ☐ Promotes the vision, mission, and strategic goals of CDO
- ☐ Displays cultural, gender, religion, race, nationality, and age sensitivity and adaptability
- ☐ Treats all people fairly without favouritism

Functional Competencies:

Knowledge Management and Learning

- ☐ Promotes knowledge management in CDO and a learning environment in the office through leadership and personal example
- ☐ Actively works towards continuing personal learning and development in one or more Practice Areas, acts on learning plan and applies newly acquired skills

Development and Operational Effectiveness

- ☐ Ability to lead strategic planning, results-based management and reporting
- ☐ Ability to lead formulation and monitoring of management projects
- ☐ Solid knowledge in financial resources and human resources management, contract, asset and procurement, information and communication technology, and general administration
- ☐ Ability to lead business processes re-engineering, implementation of new systems (business side), and affect staff behavioural/ attitudinal change

Management and Leadership

- ☐ Builds strong relationships with clients, focuses on impact and result for the client and responds positively to feedback
- ☐ Consistently approaches work with energy and a positive, constructive attitude
- ☐ Demonstrates openness to change and ability to manage complexities
- ☐ Leads teams effectively and shows mentoring as well as conflict resolution skills
- ☐ Demonstrates strong oral and written communication skills
- ☐ Remains calm, in control and good humoured even under pressure

**VI. Recruitment Qualifications**

| | |
|---|---|
| Education | • Bachelor's Degree in Business Administration, Management, Economics, Development studies, Soci ology or other Social Sciences from an accredited University is required |
| Working Experience | •Minimum 5 years' experience in the area of project management. |
| Language Requirement | • Demonstrates strong oral and written communication skills in English, along with Tamiland/orSinhala |

How to apply:
Interested candidates should submit their applications(a cover letter and CV) via e-mail, indicating in the subject line the title of the position applied for, to cdomullaitivu@gmail.com on or before 4.00 pm 16th July 2014.
Only short-listed candidates will be contacted for a written test and interview.
For more information about community development organization (CDO) visit our website www.cdolanka.org

(சி/14907)(4.6.3)


# சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரிப்பு; கட்டுப்படுத்த விழிப்புணர்வு மாநாடு

## பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் வியாழனன்று

பருத்தித்துறை பிரதேச செயலகம் சிறுவர் துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு மாநாடு ஒன்றை எதிர்வரும் வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடத்தவுள்ளது.

அண்மைக்காலங்களில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இதனைக் கட்டுப்படுத்தும் முகமாகவே இந்த விழிப்புணர்வு மாநாடு நடத்தப்படவுள்ளது.

வடமராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் தரம் 11, தரம் 12 வகுப்புக்களில் கல்வி கற்கும் தலா 10 மாணவர்கள் இந்த மாநாட்டுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதில் இளமையடையும் போது ஏற்படும் மாற்றங்கள் மற்றும் தனித்தன்மை, புதிய தொழில்நுட்பம் மாறும் சிறுவர்தாக்கங்களும் துஷ்பிரயோகங்களும் என்னும் தொனிப்பொருளில் கருத்துரைகள் இடம்பெறவுள்ளன. (ஒ-108)

# நிறுவை, அளவைகள் கருவிகளுக்கு இன்று முதல் முத்திரையிடல் பணி

யாழ்ப்பாணம், ஜூலை 7

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை உப அலுவலகங்களில் பின்வரும் திகதிகளில் யாழ். மாவட்ட செயலக அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தால், நிறுவைகள், அளவைகள் நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிடப்பட இருப்பதால் வர்த்தகர்கள், வியாபாரிகள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பின்வரும் திகதிகளில் வலி. கிழக்குப் பிரதேச சபை உப அலுவலகங்களில் முத்திரையிட்டுக் கொள்ளுமாறு பிரதேச சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது.

வலி. கிழக்குப் பிரதேச சபை அச்சுவேலி உப அலுவலகத்தில் இன்று 7 ஆம் திகதி, 8 ஆம் திகதி, 10 ஆம் திகதி ஆகிய 3 தினங்களிலும் காலை 8.30 மணி முதல் 4 மணி வரையும்-

வலி. கிழக்குப் பிரதேச சபை கோப்பாய் உப அலுவலகத்தில் 14 ஆம், 15 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி முதல் 4 மணி வரையும்-

வலி. கிழக்குப் பிரதேச சபை உரும்பிராய் உப அலுவலகத்தில் 21ஆம், 22 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி முதல் 4 மணி வரையும் முத்திரையிடல் பணிகளை மேற்கொள்ளலாம் என்று நீர்வேலி உப அலுவலகப் பொறுப்பதிகாரி தி.தவராஜா தெரிவித்தார். (ஒ)

# கலந்துரையாடல்

கரணவாய், ஜூலை 7

கரவெட்டிப் பிரதேசத்தைச் சேர்ந்த கலை இலக்கியவாதிகள் மற்றும் பண்பாட்டுத் துறை வல்லுநர்கள் ஆகியோருக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கரவெட்டிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் கரவெட்டிப் பிரதேசத்தில் கலை, இலக்கியங்களை வளர்ப்பது, பாதுகாப்பது என்பன தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது. இதில் பங்குபற்றி எதிர்காலத் திட்டங்கள், சமகாலத் தேவைகள் முதலான பல்வேறு விடயங்கள் தொடர்பான ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைக்குமாறு பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ கேட்டுள்ளார். (ஒ-108)

# பிடிபட்ட கட்டாக்காலி மாடு கமக்கார அமைப்பிடம்

தென்மராட்சி, ஜூலை 7

கல்வயல் விளைநிலங்களில் சேதம் விளைவித்த கட்டாக்காலி மாடு விவசாயிகளால் பிடிக்கப்பட்டு கமக்கார அமைப்பிடம் கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஒப்படைக்கப்பட்டுள்ளது. m s குறியுடைய இந்த சிவப்பு நிற மாட்டின் உரிமையாளர் அமைப்பின் செயலாளருடன் தொடர்பு கொண்டு பெற்றுச் செல்லுமாறும் எவரும் உரிமை கோராத பட்சத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்று அமைப்பின் செயலாளர் கா.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஒ-9)

# பொதுக் கூட்டம்

வலி.வடக்கு, ஜூலை 7

கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் வ.இரத்தினம் தலைமையில் இடம்பெறும். இதில் ஆலய புனருத்தாரண நிர்வாக சபைத் தெரிவு உட்பட வேறு பல விடயங்கள் இடம்பெறவுள்ளன. (க)

# சித்திரப் போட்டியில் தெரிவானோர்

தென்மராட்சி, ஜூலை 7

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் தரம்-I, தரம்-II பிரிவு மாணவர்கள் இடையே நடத்தப்பட்ட வலய மட்டச் சித்திரப் போட்டியின் முடிவுகள் வலயக் கல்வி அலுவலகத்தினரால் வெளியிடப்பட்டுள்ளன.

போட்டிகளில் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

தரம்-I

வ.தனிஷா(கைதடி விக்னேஸ்வரா வித்தி.), இ.கிஷான்ஜா (மட்டுவில் கமலாசனி வித்தி.), ஜெ.லக்ஷிகா(கொடிகாமம் அ.த.க.பாடசாலை), ஈ.கனிஸ்ரிகா(வரணி வடக்கு அ.த.க. பாடசாலை), ச.பரிதியா (கைதடி குருசாமி வித்தி.)

தரம்-II

வ.காவேரி (சாவகச்சேரி றோ.க.த.க.பாடசாலை), கே.நிதர்சனா(கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தி.), த.டிசானா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), மோ.கஜராஜ்(கைதடி நவீல்ட் பாடசாலை), க.அபிஷேசன் (மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை. (ஒ-9)

# தென்மராட்சி மாணவருக்கு பயிற்சிப் பட்டறைகள்

தென்மராட்சி, ஜூலை 7

தென்மராட்சி பிரதேச செயலக கலாசாரப் பிரிவினர் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கவிதை, இசை, நடனம், நாடகம் ஆகிய துறைகளில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறைகளை ஆரம்பித்துள்ளனர்.

பிரதி வெள்ளிக்கிழமைகளில் மரபுக் கவிதைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும்-

பிரதி சனிக்கிழமைகளில் மரபு வழி கூத்துகள், இசை நாடகங்கள் போன்றவை தொடர்பான பயிற்சிப்பட்டறையும்-

பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் நடனம் தொடர்பான பயிற்சிப் பட்டறையும், தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்திலும் நடைபெற்று வருகின்றன.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன் இந்தப் பயிற்சி வகுப்புகள் 4 வாரங்கள் நடத்தப்படவுள்ளதாக பிரதேச செயலக கலாசாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (வ-9)

# தேவாலயம் துரிதமாக புனரமைப்பு



குருநகர், ஜூலை 7

குருநகர் தூய கார்மேல்மாதா அன்னை ஆலயம் குருநகர் மக்களால் துரிதமாகப் புனரமைக்கப்பட்டு வருகிறது. இந்தச் சிற்றாலயம் கடந்த வருடம் இடிமின்னல் தாக்கத்தினால் சேதமடைந்தது.

எதிர்வரும் 9 ஆம் திகதி இந்த ஆலயத்தின் வருடாந்த திருவிழாவுக்கான ஆயத்த வழிபாடுகள் ஆரம்பமாகவுள்ளன. இதனால் புனரமைப்பு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருவதைக் காண முடிகிறது. (க-51)

# ஆறு மாதங்களில் 7 லட்சம் சுற்றுலா பயணிகள் வருகை

## லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன கூறுகிறார்

கொழும்பு.ஜுலை 7

இந்த ஆண்டின் கடந்த 6 மாத காலத்தினுள் 7 லட்சத்து 27 ஆயிரத்து 253 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருப்பதாக முதலீடுகள் மற்றும் அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன் தெரிவித்துள்ளார்.



லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன

கடந்த ஆண்டின் முதல் 6 மாத காலத்துடன் ஒப்பிடும்போது அது, 24.6 வீதமான வளர்ச்சியெனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 3 ஆம் திகதியன்று கொழும்பு உலக வர்த்தக மையத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற ஊடகச் சந்திப்பில் வைத்து அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக் கையில்;

இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் தொகை அதிகரித்து வரும் அதேவேளை அவர்களுக்கு அவசியமான அடிப்படை வசதிகளும் அதிகரிக்கப்பட்டு வருகின்றன.

சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து வருவதைக் கவனத்தில் கொண்டு அடுத்த ஆண்டில் புதிதாக 8 ஆயிரம் ஹோட்டல் அறை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அவற்றுள் 400 வரையிலான ஹோட்டல் அறைகள் முதலீடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

ஆயினும் சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் போது ஒரு போதும் கஸினோ வலயங்கள் நிர்மாணிக்கப்பட மாட்டாது எனவும் ஹோட்டல் கட்டட தொகுதிகள் மாத்திரம் நிர்மாணிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (க-22)



கொழும்பு, பம்பலப்பிட்டிய ரயில் நிலையத்துக்கு அருகில், இரு ரயில் பெட்டிகள் நேற்றுமுன்தினம் தடம்புரண்டதையடுத்து தண்டவாளங்களில் ஏற்பட்ட சேதங்களை ரயில்வே திணைக்கள ஊழியர்கள் சீர் செய்வதையும் தடம்புரண்ட இரு பெட்டிகளையும் தண்டவாளங்களில் தூக்கி வைப்பதில் ஈடுபட்டுள்ளனர். (வ)

# மாகாண சபையின் பதுளைக்குரிய ஆசனங்கள் 21 இல் 3 ஆசனங்கள் மொனராகலைக்கு

கொழும்பு.ஜுலை 7

ஊவா மாகாண சபையின் பதுளை மாவட்டத்துக்குரிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை மூன்றினால் குறைத்து மொனராகலை மாவட்டத்துடன் சேர்த்து விடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக ஊவா மாகாண சபையின் பதுளை மாவட்டத்துக்குரிய உறுப்பினர்கள் என்ற எண்ணிக்கை 18 உறுப்பினர்களாக குறைக் கப்படுவதோடு மொனராகலை மாவட்டத்தின் 11 உறுப்பினர்கள் என்ற 21 உறுப்பினர்களின் எண் ணிக்கை 14 ஆக அதிகரித்துள்ளது.

இது தொடர்பாகக் கொழும்பின் சிங்கள ஊடகமொன்றுக்குக் கருத்து வழங்கியிருந்த தேர்தல்கள் செயலகத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர், மொனராகலை மாவட்டத்தின் சனத் தொகை அதிகரிப்பு மற்றும் அதன் நிலப்பரப்பு என்பவற்றைக் கவனத்தில் கொண்டே உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்து விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

ஊவா மாகாண சபையானது பதுளை மற்றும் மொனராகலை ஆகிய இரு மாவட்டங் களைக் கொண்டிருப்பதோடு ஊவா மாகாண சபைக்கான மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 32 ஆகும். (க-22)



ஓம் முருகா துணை

வட்டு மேற்கு

அருள்மிகு செந்தில் முருகையா தேவஸ்தானம்

புனருத்தாரண அஷ்டபந்தன ஷட்கோண குண்டபக்ஷ மஹா யாகநூதன துவிதள இராஜகோபுர பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம்

குகனேயச் செல்வர்களே! 09.07.2014

எண்ணெய்க்காப்பு: 08.07.2014 ஆனித்திங்கள் 24 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை சூரிய உதயத்தின்முன்

மஹாகும்பாபிஷேகம்: 09.07.2014 ஆனித்திங்கள் 25 ஆம் நாள் புதன்கிழமை அதிகாலை 5.30 மணி முதல் ஆரம்பமாகும்.

எல்லோரும் வருகை தந்து அருள்பெற பேரன்போடு அழைக்கின்றோம்.

'சுபம்' ஆலய அறங்காவலர்கள்.

URUMPIRAI KIDS' PARK FURTHER EDUCATION UNIT

Kopay Road, Urumpirai

ENGLISH TEACHERS TRAINING PROGRAMME

Pre School

(Full time - One year programme)

உரும்பிராய் கிட்ஸ் பார்க் புற கல்வி அலகு

கோப்பாய் வீதி, உரும்பிராய்.

முன்பள்ளி ஆங்கில ஆசிரியராவதற்கான பயிற்சி நெறி

(ஒரு வருடம் - முழு நேரம்)

நீங்கள் முன்பள்ளி ஆங்கில ஆசிரியராக விரும்புகின்றீர்களா?

- க.பொ.த. (உ/த) சித்தி.
- க.பொ.த. (சா/த) இல் ஆங்கிலத்தில் குறைந்தது "சி" சித்தி
- அப்படியானால் நீங்கள் விண்ணப்பிக்கலாம்.
- பயிற்சியாளர் தெரிவு எழுத்துப் பரீட்சை மூலம் நடைபெறும்.
- பயிற்சியில் சித்திபெறுவோருக்கு வேலை வழங்கப்படும்.
- விண்ணப்பப் படிவத்தினை காரியாலயத்தில் பெற்று விண்ணப்பிக்கலாம்.

- விண்ணப்ப முடிவுத் திகதி : 17.07.2014
- தெரிவுப் பரீட்சை : 26.07.2014
- தொலைபேசி : 021205 4626, 077 6565 258
- பயிற்சி நெறி ஆரம்பம் : 04.08.2014

(49676)

# ஆயிரம் கிராமங்களின் அபிவிருத்திக்கு 906 மில். டொலர் செலவிடப்படும்

## *அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவிப்பு*

கொழும்பு.ஜுலை 7

906 மில்லியன் டொலர்கள் செலவில் நாடு முழுவதிலுமுள்ள 1000 கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.



கெஹலிய ரம்புக்வெல

இதில் தெற்கு, சப்ரகமுவ, மத்திய, வடமத்திய மற்றும் வடமேல் ஆகிய ஐந்து மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்டுள்ள கிராமங்களின் வீதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதோடு இது தொடர்பாக ஆசிய அபிவிருத்தியினால் 800 மில்லியன் அமெ. டொலர்களும் இலங்கை அரசினால் 106 மில்லியன் டொலர்களும் செலவிடப்படவுள்ளன.

கடந்த 4 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்றிருந்த அமைச்சரவைத் தீர்மானங்களை வெளிப்படுத்தும் செய்தியாளர்கள் சந்திப்பில் வைத்து அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும், அளவீட்டுச் செயற்பாடுகள் தொடர்பாக புதிய கட்டணங்களை நிர்ணயித்து அவற்றை அறவிட்டுக்கொள்வது தொடர்பான புதிய சட்டங்களை ஆக்குவதற்கும் அமைச்சரவையின் அனுமதி கிடைத்திருப்பதாகவும் அதன் போது அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையத்திலிருந்து கழிவுப்பொருளாக அகற்றிவிடப்படும் நிலக்கரிச் சாம்பலை ஐந்து நிறுவனங்களுக்கு விற்பனை செய்வது தொடர்பாகவும் அமைச்சரவையின் அனுமதி கிடைத்திருப்பதாக அமைச்சர் ரம்புக்வெல மேலும் தெரிவித்துள்ளார்.

ஆண்டொன்றில் நுரைச்சோலை அனல்மின் நிலையத்திலிருந்து 1.50 ,000 மெற்றிக் தொன்கள் வரையிலான நிலக்கரிச் சாம்பல் வெளியேற்றப்படுவதோடு அவற்றை சிமெந்து மற்றும் வேறுவகை உற்பத்தித் தொழில்துறைகளின் பயன்பாட்டுக்கு விற்பனை செய்யும் யோசனையை மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி அமைச்சரவைக்கு முன்வைத்திருந்தார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை-ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஜப்பானின் சர்வதேச ஒத்துழைப்புக்கள் செயற்பாட்டுப் பிரிவின் கடன்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த அபிவிருத்திகளில் எஞ்சியுள்ள தொகைகள் அந்த அபிவிருத்திகளின் கருமங்களை விரிவுபடுத்துவது தொடர்பாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (க-22)



யாழ். கலாலயா

பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.

(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

மகளிருக்கான துரித 1 மாத கால பயிற்சிகள் வெளிநாடுகளிலிருந்து விடுமுறையில் வந்திருப்பவர்களுக்கும் விரைவில் வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்கும் மற்றும் ஆர்வமுள்ளவர்களுக்கும் உகந்ததொரு பயிற்சிநெறி.

கேக் ஐசிங் உணவு தயாரித்தல் கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும், Facials உடன் மணப் பெண் அலங்காரம், பலவித சேலை அணியும் முறைகள், Saree (B)பிளவ்ஸ் தைத்தல் ஆகிய பயிற்சிகள்.

ஆரம்பம்:-14.07.2014 திங்கட்கிழமை காலை 9.30

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.

- இயக்குநர் -

# 400 எண்ணெய் லொறிகள் தீயிட்டு எரிப்பு

## ஆப்கனில் தலிபான்கள் கைவரிசை

காபூல், ஜூலை 7
ஆப்கனில் தலிபான்களின் தாக்குதலில் 400க்கும் மேற்பட்ட எண்ணெய் லொறிகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன. காபூல் நகருக்குச் செல்வதற்குத் தயார் நிலையில் சாவக்-இ- அர்காண்டி எனும் இடத்தில் அவை தரித்து நின்றபோதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குறித்த லொறிகள் தனியார் நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமானவை என்றும், தாக்குதலுக்கு காந்த வகை வெடிகுண்டுகளைத் தலிபான்கள் பயன்படுத்தியுள்ளனர் என்றும் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆயினும் குறித்த லொறிகள் ஆப்கனில் தங்கியுள்ள நேட்டோ படைகளுக்கான எண்ணெயை ஏற்றிச் சென்றனவா என்பது குறித்து அவர்கள் உறுதிப்படுத்தவில்லை.

அதேவேளை, நேட்டோ படைக்கு உணவு மற்றும் எரிபொருள்களை எடுத்துச் சென்ற நூற்றுக்கும் மேற்பட்ட லொறிகளை, தமது முஜாஹிதீன் தீவிரவாதிகள் சாதுரியமாகத் தாக்கி தீ வைத்தனர் என்று தலிபான் இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## தீயில் கருகி 4 குழந்தைகள் சாவு

### அமெரிக்காவில் பரிதாபம்

பிலடெல்பியா, ஜூலை 7
அமெரிக்காவில் உள்ள பிலடெல்பியா நகரில் ஏற்பட்ட தீ விபத்தில் 4 குழந்தைகள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

அதிகாலை 3 மணி ஏற்பட்ட தீ விபத்தில் 8 வீடுகள் முற்றாக நாசமாகியுள்ளன. தீயணைப்பு வீரர்களின் 4 மணி நேரப் போராட்டத்தின் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. விபத்தில் 4 குழந்தைகள் உயிரிழந்துள்ளதுடன் பலர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ற)

## உக்ரேன் இராணுவம் கடும் தாக்குதல்

### நிலைகுலைகின்றனர் கிளர்ச்சியாளர்கள்

கீவ், ஜூலை 7
உக்ரேன் இராணுவம் தனது தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ள நிலையில், கிளர்ச்சியாளர்கள் நிலைகுலைந்து பின்வாங்கி வருகின்றனர் என்று அந்த நாட்டின் உள்துறை அமைச்சர் ஆர்சென் அவாகோவ் தெரிவித்துள்ளார்.

"உளவுத்துறை தகவலின்படி, கிளர்ச்சியாளர்களின் தலைவரான கிர்கின் என்ற இகோர் ஸ்டிரெல்கோவ் மற்றும் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களில் கணிசமான ஒரு பகுதியினர், ஸ்லாவ்யான்ஸ்க் நகரின் தென்கிழக்கே 50 கி.மீ. தொலைவில் உள்ள கோர்லிவ்கா நகருக்கு தப்பி ஓடிவிட்டனர். 2 லட்சத்து 20 ஆயிரம் மக்கள் தொகையைக் கொண்ட ஸ்லாவ்யான்ஸ்க் நகரை கடந்த ஏப்ரல் 6ஆம் திகதி கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றினர். அந்த நகரின் பெரும் பகுதி இன்னும் கிளர்ச்சியாளர்களின் வசமே உள்ளது"- என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தற்போது தப்பி ஓடியதாகக் கூறப்படும் கிளர்ச்சியாளர் டிரெல்கோவ், ரஷ்ய இராணுவத்தின் உளவுத் துறை பிரிவைச் சேர்ந்தவர் என்று உக்ரைன் குற்றஞ்சாட்டியுள்ளது. ஆனால், அந்தக் குற்றச்சாட்டை டிரெல்கோவும், ரஷ்ய அதிகாரிகளும் மறுத்துள்ளனர். (ற)



## விபத்துக்குள்ளானது விமானம்

### போலந்தில் 11 பேர் சாவு

வார்சா, ஜூலை 7
போலந்தின் தெற்குப் பகுதியில் உள்ள செஸ்டோசோவா பாராசூட் கழகத்துக்கு அருகில் நடந்த விமான விபத்தில் 11 பேர் உயிரிழந்துள்ளனர். ஒருவர் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பைபர் நவஜோ என்ற அந்த விமானம் 11 பரசூட் வீரர்கள் மற்றும் ஒரு விமானியுடன் பறப்பில் ஈடுபட்டிருந்தது என்றும், விபத்துக்குள்ளாவதற்கு முன்னர் அதன் இயந்திரத்தில் இருந்து விநோதமான சப்தங்கள் வந்துகொண்டிருந்தன என்றும் கூறப்படுகின்றது.

விமானம் கீழே விழுந்தவுடன் கிராமத்து மக்கள் விரைந்து சென்று அதிலிருந்து இரண்டு சடலங்களையும், உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த ஒருவரையும் மீட்டுள்ளனர்.

விபத்துக்குள்ளான இந்த லகுரக விமானம் செஸ்டோசோவா அருகில் உள்ள ருட்னிகி விமான தளத்திலிருந்து கிளம்பியுள்ளது. இந்த விபத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை என்றபோதும் அதில் அதிக எண்ணிக்கையானோர் பயணம் செய்ததே விபத்து ஏற்படக் காரணமாக இருந்திருக்கும் என்று கூறப்படுகின்றது. (ற)

## எகிப்து அரசுக்கு எதிராக போராட்டம் நடத்திய 37 பேருக்கு ஆயுள் சிறை

கெய்ரோ, ஜூலை 7
எகிப்தில் முன்னாள் ஜனாதிபதி முகமது மூர்ஸி தலைமையிலான ஆட்சி கடந்த ஆண்டு அகற்றப்பட்ட பின்னர், அந்த நாட்டில் அபாயகரமான போராட்டங்களில் ஈடுபட்டனர் என்று தெரிவித்து முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத் தலைவர் உட்பட 37 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்து அந்த நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

முன்னதாக அபாயகரமான போராட்டங்களில் ஈடுபட்டனர் என்று கூறி 2 வழக்குகளில் சகோதரத்துவ இயக்கத் தலைவர் முகமது பாடீக்கு 2 முறை தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் நிலையிலேயே இந்தத் தீர்ப்பும் வெளியாகியுள்ளது.

கடந்த ஆண்டு நடைபெற்ற போராட்டங்களின்போது சன்னி முஸ்லிம் பிரிவினரின் தடை செய்யப்பட்ட அரசியல் மற்றும் சமூக இயக்கமான, சகோதரத்துவ இயக்கத்தினர் வன்முறைகளில் ஈடுபட்டனர் என்றும், வீதிகளில் தடுப்புகளை ஏற்படுத்தியதாகவும் 48 பேர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர். அவர்களில் 37 பேருக்கு தற்போது தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 11 பேரில் 10 பேருக்கு தூக்குத் தண்டனையும், ஒருவருக்கு 3 ஆண்டு சிறை தண்டனையும் அந்த நாட்டு நீதிமன்றம் கடந்த மாதம் விதித்தது. (ற)



சிலியில் போக்குவரத்து பணியாளர்களின் பனிச்சூழலை மேம்படுத்த வலியுறுத்தி தலைநகர் சாண்டியாகோவில் அரச பஸ் ஒட்டுநர்கள் பேரணி நடத்தியபோது வன்முறைகள் ஏற்பட்டுள்ளன. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸார் மீது கற்களை வீசித் தாக்குதல் நடத்தியதை அடுத்தே பதற்ற நிலை தோன்றியது என்று கூறப்படுகின்றது. (ற)

## சுமாத்திராவில் நிலநடுக்கம்



லண்டன், ஜூலை 7
இந்தோனேஷியாவின் சுமாத்திரா, சிமியுலூ உள்ளிட்ட தீவுகளில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டுள் ளது.

ரிச்டர் அளவுகோளில் 6 ஆகப் பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கத்தால் எத்தகைய சேதம் ஏற்பட்டது என்பது குறித்த தகவல் இதுவரை வெளியாகவில்லை.

இந்த நிலநடுக்கத்தை அமெரிக்க நிலநடுக்கத் துறையினரும் உறுதிபடுத்தியுள்ளனர். சினாபங் பகுதியில் இருந்து 88 கிலோ மீற்றர் தொலைவில், உள்ளூர் நேரப்படி பிற்பகல் 3 மணி அளவில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது. எனினும், இந்த நிலநடுக்கத்தால், சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை. (ற)



இந்தியாவின் இமயமலை பிரதேசங்களில் தீய சக்திகளை விரட்டி மகிழ்ச்சியைக் கொண்டுவரும் புத்த திருவிழா ஒன்று கோலாகலமாகக் கொண்டாடப்பட்டுள்ளது. இந்தியாவின் வடக்கு பகுதியில் உள்ள தவாங் கிராமத்தில் ஆடல் பாடலுடன் டோர்கியா திருவிழா கொண்டாடப்பட்டுள்ளது. (ற)

## ஜம்முவில் தீவிரவாதி சுடப்பட்டார்

ஸ்ரீநகர், ஜூலை 7

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் இந்திய இராணுவத்தினருக்கும், 'ஜெய்ஷ்-இ-முகமது' இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சூட்டில் தீவிரவாதி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

தெற்கு காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தில் உள்ள அரிபால் கிராமத்தின் வனப்பகுதியில் தீவிரவாதிகள் இருப்பதாக தகவல் கிடைத்ததை அடுத்து, பாதுகாப்புப் படையினர் அங்கு சோதனை மேற்கொண்டனர். அப்போது, அந்தப் பகுதியில் இருந்த தீவிரவாதிகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டது. அந்த சண்டையில் உயிரிழந்த மதானி பாய் என்ற தீவிரவாதியின் உடலும், ஒரு ஏ.கே-47 ரக துப்பாக்கியும் மீட்கப்பட்டுள்ளன. இந்தச் சண்டையில் இராணுவ வீரர் ஒருவருக்கு காயம் ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. தற்போது குறித்த பகுதி சுற்றி வளைக்கப்பட்டுக் கடும் தேடுதல் நடத்தப்பட்டு வருகின்றன என்று இந்திய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ற)

## சுவர் வீழ்ந்து 11 பேர் சாவு

### திருவள்ளூரில் பரிதாபச் சம்பவம்

திருவள்ளூர், ஜூலை 7

திருவள்ளூர் மாவட்டம், செங்குன்றம் அருகே உப்பரப் பாளையத்தில் உள்ள களஞ்சியம் ஒன்றின் சுவர் இடிந்து விழுந்ததில் 11 பேர் உயிரிழந்தனர். நள்ளிரவு வேளை நடந்த இந்த விபத்தில், ஆந்திராவைச் சேர்ந்த கட்டடத் தொழிலாளர்களே உயிரிழந்துள்ளனர். அவர்கள் விபத்து நடந்தசமயம் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்துள்ளனர்.

குறித்த களஞ்சியத்தைச் சுற்றி 60 அடி நீளம், 11 அடி உயரம் கொண்ட சுவர் கட்டப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் பெய்த மழையால் இடிந்த சுவர், குடிசைகள் மீது இந்த சுவர் விழுந்துள்ளது.

விபத்து நள்ளிரவு 2 மணியளவில் நடந்திருக்கும் என கூறப்படுகிறது. இந்த விபத்து நடந்து அதிகாலை விடியும் வரை யாருக்கும் சுவர் இடிந்தது தெரியவில்லை. காலையில் கட்டட பணி தொடர்பாக வந்தவர்கள் விபத்து குறித்து அறிந்துள்ளனர். அதன்பிறகே பொலிஸாருக்கும், தீயணைப்புப் படையினருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. உரிய நேரத்தில் தெரிய வந்திருந்தால், உயிருக்கு போராடியவர்களை மீட்டிருக்க முடியும் என்று கூறப்படுகின்றது.



மீட்புப் பணிகள் நடைபெறும் இடம்

விபத்தில் 4 பெண்கள், 6 ஆண்கள், ஒரு குழந்தை உட்பட 11 பேர் சம்பவ இடத்திலேயே இறந்துள்ளனர். இடிபாடுகளில் சிக்கிய ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார். 11 உடல்களும் மீட்கப்பட்டுள்ளன. இடிபாடுகள் அகற்றும் பணி நடந்து வருகிறது. (ற)

## எதிர்க்கட்சி அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்

### காங்கிரஸ் கட்சி கோருகின்றது

புதுடில்லி, ஜூலை 7

எதிர்க்கட்சி அந்தஸ்து வழங்கப்படவில்லை என்றால் நீதிமன்றத்தை நாடப்போவதாக காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது. காங்கிரஸ் கட்சியின் உயர் மட்ட குழுக் கூட்டம் கட்சியின் தலைவர் சோனியா காந்தியின் வீட்டில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், குலாம் நபி ஆசாத் உட்பட மூத்த நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர். நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் நாளை தொடங்கவுள்ள நிலையில், நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட வேண்டிய பிரச்சினைகள் குறித்து இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. முந்தைய ஆட்சிக்காலம் குறித்து ஆளுங்கட்சியினர் முன்வைக்கும் விமர்சனங்களை எவ்வாறு எதிர்கொள்வது என்பது பற்றியும் உயர் மட்டக் குழுக் கூட்டத்தில் தலைவர்கள் ஆலோசித்தனர். அத்துடன் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் பதவியை காங்கிரஸ் கட்சிக்கு கேட்டுப்பெறுவது தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டது.

இதுபற்றி செய்தியாளர்களிடம் பேசிய குலாம் நபி ஆசாத், "எதிர்க்கட்சித் தலைவர் அந்தஸ்தை பெறுவதற்கான அனைத்து நடைமுறைகளையும் பின்பற்றித் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார். எதிர்க்கட்சி அந்தஸ்து காங்கிரஸ் கட்சிக்கு அளிக்கப்படவில்லை என்றால் நீதிமன்றத்தை நாடவுள்ளோம்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## ஐக்கிய ஜனதா தளத்துடன் கூட்டணி அமைக்கப்படும்

### லாலு பிரசாத் கூறுகின்றார்



லாலு பிரசாத்

புதுடில்லி, ஜூலை 7

பீஹார் சட்ட சபைத் தேர்தலில் ஐக்கிய ஜனதா தளத்துடன் ராஷ்ட்ரீய ஜனதா தளக் கட்சி கூட்டணி அமைத்துப் போட்டியிடும் என்று லாலு பிரசாத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அண்மையில் நடைபெற்று முடிந்த மக்களவைத் தேர்தலில் ராஷ்ட்ரீய ஜனதா தளம் மற்றும் ஐக்கிய ஜனதா தளம் வாங்கிய வாக்கு சதவீதத்தைக் கூட்டினால் 45 சதவீதம்வரை வரும். அது, எதிர்வரும் சட்ட சபைத் தேர்தலில் பா.ஜ.கவைத் தோற்கடிக்கப் போதுமானதாக இருக்கும்.

நானும் நிதீஷ்குமாரும் அடுத்த சில தினங்களில் கூட்டாக அமர்ந்து, தேர்தலில் இரு கட்சிகளும் கூட்டணி அமைப்பது குறித்து விவாதிப்போம். மாற்றத்துக்கான தேவை ஏற்பட்டுள்ளதால் நாங்கள் அது குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது. அனைவரையும் அரவணைத்துச் செல்வோம்."- என்று தெரிவித்துள்ளார். (ற)

## தேர்தல் தோல்வியால் துவண்டுவிட மாட்டோம்

### மக்களுக்காகத் தொடர்ந்து போராடுவோம் என்று வைகோ தெரிவிப்பு

விருதுநகர், ஜூலை 7

நாடாளுமன்றத் தேர்தலில் அடைந்த தோல்வியை கண்டு துவண்டு போய் விடமாட்டோம் என ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

நாடாளுமன்ற தேர்தலில் ம.தி.மு.க. தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து, அக்கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ தொண்டர்களை நேரில் சந்தித்து ஆய்வு நடத்தி வருகிறார். இந்த நிலையில், விருதுநகர் மாவட்ட ஆய்வுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது.



அதற்கு முன்பாக வைகோ செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

"நாடாளுமன்ற தேர்தலில் ஆளுங்கட்சியான அ.தி.மு.க. ஓட்டுக்கு பணம் கொடுத்து தான் வெற்றி பெற்றது. அ.தி.மு.க. அதிகார துஷ்பிரயோகம் செய்து காவல்துறையினர் மூலம் ஊர் ஊராக கோடிக் கணக்கில் பணம் எடுத்து சென்று, வீடுகள் தோறும் விநியோகித்தார்கள். நடவடிக்கை எடுக்க வேண்டிய தேர்தல் ஆணையகம் அ.தி.மு.கவுக்கு ஆதரவாக நடந்து கொண்டது. அதனால்தான் நாங்கள் தோற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனாலும் ம.தி.மு.கவினர் சோர்ந்து போய் விடவில்லை.

தேர்தல் தோல்வி எங்களை பாதிக்கவில்லை. தோல்வியைக் கண்டு துவண்டு போய் விடமாட்டோம். ம.தி.மு.கவினர் எப்போதும் போல் உற்சாகமாகத்தான் இருக்கின்றனர். இதே உற்சாகத்தோடு மக்கள் பிரச்சினைக்காக ம.தி.மு.க. தொடர்ந்து போராடும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# நாட்டின் புலனாய்வுப் பிரிவுக்கு தனியான சட்டங்கள் கிடையா

## ஐ.தே.கட்சி எம்.பி. கிரியெல்ல தெரிவிப்பு



கொழும்பு,ஜூலை 7

நாட்டில் புலனாய்வுப் பிரிவுக்கு என்று தனியான சட்டங்கள் கிடையாது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நாட்டின் சட்டம் அனைவருக்கும் சமமான வகையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். புலனாய்வுப் பிரிவினரும் நாட்டின் சட்டத்துக்கு கட்டுப்பட்டவர்களே.

நாட்டில் சிவில் நிர்வாகமே முன்னெடுக்கப்படுகின்றது. இராணுவ ஆட்சி நடைபெறவில்லை. எனவே, புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த எவரேனும் சட்டத்துக்குப் புறம்பாக செயற்பட்டால் அது குறித்து தெரியப்படுத்துவது சட்ட விரோதமானதல்ல.

அச்சம் காரணமாக, சாதாரண பொதுமக்கள் இது பற்றி கருத்து வெளியிடமாட்டார்கள், எனவே நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரேனும் இது பற்றிய தகவல்களை வெளியிட வேண்டும்.

நாட்டில் இனவாதப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்க அரசு புலனாய்வுப் பிரிவின் சிலரைப் பயன்படுத்திக்கொள் கின்றது. உதாரணமாக அளுத்கமவில் பொதுபல சேனா கூட்டம் நடத்திய மேடையை பாதுகாப்புப் பிரிவினரே செய்து கொடுத்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் இனவாதத்தை தூண்டியதில்லை. ஐக்கிய தேசியக் கட்சி அனைத்து இன சமூகங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சியாகும். எனினும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 95 வீதம் சிங்கள பௌத்தர்களைக் கொண்ட கட்சியாகும்.

நாட்டில் முஸ்லிம் கடும்போக்குடைய அமைப்புக்கள் இருப்பதாக வெளியாகும் தகவல்கள் பொய்யானவை. அரசு வேண்டுமென்றே இவ்வாறான பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றது. சர்வதேச சமூகத்திடம் ஒரு வாக்குறுதியை அளித்துவிட்டு, உள்நாட்டில் வேறு வகையில் அரசு செயற்பட்டு வருகின்றது என லக்ஸ்மன் கிரியெல்ல ஞாயிறு வார பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை புலனாய்வுப் பிரிவினர் பற்றிய தகவல்கள் வெளியிடப்பட்டமைக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர அண்மையில் புலனாய்வுப் பிரிவினர் தொடர்பிலான தகவல்களை வெளியிட்டிருந்தார்.

இவ்வாறு தகவல்கள் வெளியிடப்பட்டமைக்கு கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு கிளம்பத் தொடங்கியுள்ளது. குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களாக சஜித் பிரேமதாச, புத்திக்க பத்திரண ஆகியோர் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

புலனாய்வுப் பிரிவினர் தொடர்பில் வெளியிட்ட கருத்துக்களுக்கு மங்கள சமரவீர பகிரங்க மன்னிப்பு கோர வேண்டுமென இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் வலியுறுத்தி வருகின்றனர். பகிரங்க மன்னிப்பு கோரத் தவறினால் கட்சியை விட்டு வெளியேற வேண்டுமென கோரியுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (ஒ)

## 15 பேர் கைது

கொழும்பு,ஜூலை 7

சூரியவெவ மற்றும் குட்டிகல பிரதேசங்களில் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட 15 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சூரியவெவ பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சட்டவிரோதமான முறையில் மாணிக்கக் கல் அகழ்வதற்காக தோண் டப்பட்ட குழிகள் 5 பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களுக்கு மாணிக்கக் கற்கள் மற்றும் ஆபரண அதிகார சபையினால் தண்டப்பணம் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தப் பணத்தை செலுத்தியதன் பின்னர் இவர் கள் பிணையில் விடுதலை செய்யப்படுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ)

## இத்தாலி வேலைவாய்ப்பு மோசடி; எவரும் நம்பி ஏமாற வேண்டாம்

### அமைச்சர் டிலான் அறிவுறுத்தல்



டிலான் பெரேரா

கொழும்பு,ஜூலை7

இத்தாலியில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி மோசடியில் ஈடுபடுபவர்களிடம் ஏமாற வேண்டாம் என வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் டிலான் பெரேரா கோரிக்கை விடுத்துள்ளார்.

இத்தாலியில் வேலை வாய்ப்பு பெற்றுக் கொடுப்பதற்காக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் மற்றும் இத்தாலி அரசுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்துக்கு அமைவாகச் செயற்பட வேண்டும் எனவும் இவ்விடயத்தில் இரண்டாம் தரப்பினரது தலையீடு இல்லை எனவும் அமைச்சர் கூறினார்.

இந்த ஒப்பந்தத்தின்படி தெரிவு செய்யப்பட்ட இலங்கை பெண்கள் 8 பேர் நாளை செவ்வாய்க்கிழமை இத்தாலிக்கு பயணமாகவுள்ளனர்.

இவர்களுக்கான பயணச்சீட்டு வழங்கும் நிகழ்வு அமைச்சர் டிலான் பெரேரா தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பேசும்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இத்தாலியில் வேலை வாய்ப்புக்காகத் தெரிவு செய்யப்பட்ட இவர்கள் 4 வருட காலத்தை அங்கே கழிக்க முடியும் எனவும் தேவை ஏற்படின் அதன் இடையே நாடு திரும்ப முடியும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ஒ)



நமக்காக நாம் திட்டத்தின்கீழ் அநுராதபுரத்தில் முப்படையினருக்காகக் கட்டப்பட்ட 104 வீடுகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் உரியவர்களிடம் கையளித்தார்.

இந்தத் திட்டத்தில் இராணுவத்தினருக்காக 68 வீடுகளும் விமானப்படையினருக்காக 23 வீடுகளும் கடற்படையினருக்காக 13 வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன. வீடுகளை கையளித்த பின்னர் ஜனாதிபதி ஹொரவப்பொத்தான ரன்வெலி மத்திய மகா வித்தியாலயத்துக்குச் சென்று மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களைக் கையளித்தார். அமைச்சர்களான துமிந்த திஸாநாயக்க, எஸ்.எம். சந்திரசேன, வட மத் திய மாகாண ஆளுநர் கருணாரத்ன திவுல்கனே, முதலமைச்சர் எஸ்.எம். ரஞ்சித் ஆகியோர் உட்பட முக்கிய பிரமுகர்கள் இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டனர். (ஒ)

## பொலிஸாருக்கு எதிராக 335 முறைப்பாடுகள் பதிவு

கொழும்பு,ஜூலை7

கடந்த ஆறு மாதங்களில் 335 முறைப்பாடுகள் மட்டும் பொலிஸாருக்கு எதிராக பொது மக்களிடம் இருந்து கிடைத்துள்ளது என்று தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவற்றுள் 227 முறைபாடுகள் தொடர்பிலான விசாரணைகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளதாக ஆணைக்குழு வின் செயலாளர் பண்டார தென்னக்கோன் கூறியுள்ளார்.

பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் 145 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததாக தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் செயலாளர் சுட்டிக் காட்டினார்.

பக்கச் சார்பாக செயற்பட்டமை தொடர்பில் 86 முறைபாடுகளும், அதிகார துஷ்பிரயோகம் குறித்து 67 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்ட உடனடி தொலைபேசி அழைப்புப் பிரிவுக்கு வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் 1,129 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இவற்றுள் 554 முறைப்பாடுகள், பொலிஸார் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்காமை தொடர்பிலேயே பதிவாகியுள்ளன.

பொலிஸார் தொடர்பில் 071036 10 10 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும் என தேசிய பொலிஸ் ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஒ)

## நாடெங்கும் தேடுதல் வேட்டை; சட்டவிரோத ஆயுதங்களை மீட்க

### பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண அறிவிப்பு




கொழும்பு,ஜூலை 7

பாதாள உலகக் குழுக்களிடையே காணப்படும் துப்பாக்கிக் கலாசாரத்தை இல்லாதொழிக்கும் நோக்கில் நாடு முழுவதிலும் உள்ள சட்ட விரோத ஆயுதங்களை மீட்கும் நடவடிக்கையாக தேடுதல் வேட்டை முன்னெடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். சட்டவிரோத ஆயுதங்களைப் பயன்படுத்தி கொலைகள், கொள்ளைகள், போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்கள் இடம்பெற்று வருகின்றன.

நாட்டில் அண்மைக்காலங்களில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலர் உயிரிழந்துள்ளனர்.

சட்டவிரோத ஆயுதங்களைப் பயன்படுத்தியே இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன. புலனாய்வுப் பிரிவினரின் ஒத்துழைப்புடன் ஆயுதக் குழுக்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (ஒ)

## அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கம் அரச சேவையிலிருந்து விலக தீர்மானம்

அரச சேவையிலிருந்து விலகத் தீர்மானித்துள்ளதாக அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

மகப்பேற்று பயிற்சி தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படாமையே இந்த தீர்மானத்துக்கு காரணமாக அமைந்துள்ளதாக அரச சேவை ஐக்கிய தாதியர் சங்க செயலாளர் அசோக்கா அபேநாயக்க தெரிவித்துள்ளார்.

தமது பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவது குறித்து அதிகாரிகள் இதுவரை கவனம் செலுத்தவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மகப்பேற்று பயிற்சி தொடர்பிலான பிரச்சினைக்கு ஒரு மாத காலத்துக்குள் தீர்வு வழங்காவிட்டால், தமது சங்க உறுப்பினர்கள் அனைவரும் பதவி விலகல் கடிதங்களை சமர்ப்பிக்கவுள்ளதாக அரச சேவை ஐக்கிய தாதியர் சங்க செயலாளர் கூறுகின்றார்.

**அரச சேவை ஐக்கிய தாதியர் சங்க உறுப்பினர்கள் பதவி விலகுவார்களாயின், அதன் ஊடாக வைத்தியசாலை நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட இடமளிக்கப் போவதில்லை.**

அரச சேவை ஐக்கிய தாதியர் சங்க உறுப்பினர்கள் பதவி விலகுவார்களாயின், அதன் ஊடாக வைத்தியசாலை நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்பட இடமளிக்கப் போவதில்லை என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்க ஊடகப் பேச்சாளர் டொக்டர் நலிந்த ஹேரத் தெரிவித்துள்ளார். (ஒ)

# ஒரு வகை ஒற்றைத் தலைவலியை போக்கும் தாம்பத்திய உறவு



தாம்பத்திய உறவை மறுப்பதற்கு தலைவலியை காரணமாக காட்டாமல், காதலில் ஈடு படுவது சிறந்ததென ஆய்வொன்றில் கண்டறியப்பட்டுள்ளது.

ஒரு சில வகையான ஒற்றைத் தலைவலிகளுக்கு உடலுறவு முழுமையான அல்லது பகுதியளவிலான நிவாரணத்தைத் தரலாமென நரம்பியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளார்கள்.

தாம்பத்திய உறவை மறுப்பதற்கு தலைவலியைக் காரணமாகக் காட்டாமல், காதலில் ஈடுபடுவது சிறந்ததென ஆய்வொன்றில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த ஆய்வை ஜேர்மனியை சேர்ந்த முன்ஸ்டர் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் நடத்தியிருக்கிறார்கள். தலைவலி ஏற்பட்ட சமயத்தில் தாம்பத்திய உறவில் ஈடுபட்ட அரைப்பங்கினருக்கு நோய் அறிகுறிகள் நீங்கியதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

உடலுறவின்போது உடற்தொகுதிக்குள் இயற்கை வலி நிவாரணியான என்டோர்பின்ஸ் என்ற பதார்த்தம் வெளியிடப்படுகிறது. இது தலைவலியைக் குறைப்பதாக அல்லது முற்றிலும் நீக்கி விடுவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.



# எனக்கு இன்னமும் திருமணம் ஆகவில்லை என்கிறார் அஞ்சலி

நான் யாரையும் திருமணம் செய்யவில்லை என்று நடிகை அஞ்சலி தெரிவித்துள்ளார். சுராஜ் இயக்கத்தில் ஜெயம்ரவி, அஞ்சலி இணைந்து நடிக்கும் படத்தின் படப்பிடிப்பு வெள்ளி காலை சென்னையில் நடைபெற்றது.

சேட்டை படத்துக்கு பின்னர் அஞ்சலி ஒப்பந்தமாகி இருக்கும் படம் இது தான். அஞ்சலி மட்டுமே இந்தப்படத்துக்கு நாயகி அல்ல. இன்னொரு நாயகித் தெரிவு நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் வெள்ளிக்கிழமை காலை நடைபெற்ற இன்னமும் பெயரிடப்படாத இந்தப் படத்தின் ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டு அஞ்சலி கருத்துத் தெரிவிக்கையில்,

நான் யாரையும் திருமணம் செய்யவில்லை. எனக்குத் திருமணம் நடந்து விட்டதாக வதந்திகள் பரவி வருகின்றன. எப்போது எனக்குத் திருமணமானது என்று எனக்கே தெரியவில்லை. எனக்கு நண்பர்கள், சினிமாத் துறையினர் பலர் துணையாக இருக்கின்றனர். தமிழில் இன்னும் நிறைய படங்கள் நடிக்க வேண்டும் என நினைக்கிறேன் என்று அவர் தெரிவித்தார்.

நான் யாரையும் திருமணம் செய்யவில்லை. எனக்கு திருமணம் நடந்துவிட்டதாக வதந்திகள் பரவி வருகின்றன. எப்போது எனக்கு திருமணமானது என்று எனக்கே தெரியவில்லை. எனக்கு நண்பர்கள், சினிமாத் துறையினர் பலர் துணையாக இருக்கின்றனர்.

# பேஸ்புக்கால் பிரியும் குடும்பங்கள்

சமூக இணையத்தளமான பேஸ்புக்கை உபயோகிப்பவர்களில் 32 சதவீதத்தினர் தமது வாழ்க்கைத் துணையை விட்டு விலகுவது தொடர்பில் சிந்திப்பதாக புதிய ஆய்வு ஒன்று கூறுகின்றது.

அமெரிக்க போஸ்டன் நகரைச் சேர்ந்த பேராசிரியர் ஜேம்ஸ் ஈ காட்ஸ் தலைமையிலான ஆய்வாளர்களால் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.




இரு ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் பேஸ்புக்கு களை உபயோகிக்கும் 43 நாடுகளைச் சேர்ந்த விவாகரத்துப் பெற்ற, திருமணம் செய்து கொண்ட18 வயதுக்கும் 39 வயதுக்கும் இடைப்பட்ட வயதுடைய 1160 தனி நபர்களிடம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பேஸ்புக்கை அதிகளவில் உபயோகிப்பவர்கள் விவாகரத்து தொடர்பில் 2.18 சதவீத வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்துள்ளதாக இந்த ஆய்வு கூறுகிறது.

# 12 மொழிகளில் குர் ஆனை வாசிப்பதற்கான தொழில்நுட்பம்

புனித ரம்ழான் மாதத்தில் குர் ஆனை 12 மொழிகளில் வாசிப்பதற்கான புதிய டிஜிட்டல் தொழில்நுட்பம் விற்பனைக்கு வந்துள்ளது.

முதல் முறையாக இந்தத் தொழில்நுட்பம் அறிமுகப் படுத்தப்பட்டிருப்பதாக டைம்ஸ் ஒப் இந்தியா பத்திரிகை நேற்றுத் தெரிவித்துள்ளது. ஈ--பென், இயர்போன் வசதிகளைக் கொண்டதாக 3500 ரூபாவுக்கு(இந்திய ரூபாய்கள்) இந்த டிஜிட்டல் குர் ஆன் கிடைக்கின்றது.

இளம் தலைமுறையினரைக் கவரும் விதத்தில் இது உள்ளது. இந்த இலத்திரனியல் குர் ஆனைப் பயன்படுத்துபவர் பேனையால் சாதாரணமாகத் தொடுவதன் மூலம் விரும்பிய குர் ஆன் வாசகங்களை எந்தவொரு பக்கத்திலும் வாசிக்கக்கூடியதாக இருக்கும்.

ஹிந்தி, ஆங்கிலம், உருது, மராட்டி, தமிழ் மற்றும் பல மொழிகளில் பேனாவினால் வசனங்களை மொழி பெயர்க்கக் கூடியதாக இருக்கின்றது. வாசிப்பவர்களுக்கு இலகுவானதாக இந்த புனிதநூலின் டிஜிட்டல் வடிவம் அமைந்திருக்கின்றது.



அரபு அல்லது பாரசீக மொழிகளை அறிந்திராதோர் இந்த டிஜிட்டல் கருவியைப் பயன்படுத்துவதன் மூலம் குர் ஆனை வாசிக்க முடியும்.

# சிம்பன்ஸிகளின் சைகை மொழிக்கு அர்த்தம் கூறும் விஞ்ஞானிகள்



சிம்பன்ஸி குரங்கு அதிக மூளைத் திறன் கொண்ட விலங்கினம் ஆகும். காடுகளில் வாழும் சிம்பன்ஸி குரங்குகள் தாம் நினைப்பதை ஏனைய குரங்குகளுக்கு தெரியப்படுத்த பயன்படுத்துகின்ற சைகைகளுக்கு ஸ்கொட்லாந்து ஆராய்ச்சியாளர்கள் அர்த்தம் கண்டுபிடித்துள்ளனர்.

உகாண்டாவிலுள்ள சிம்பன்ஸிகளைத் தொடர்ந்து அவதானித்த செயிண்ட் அண்ட்ரூஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், அவை வெவ்வேறு செய்தியைப் பரிமாறிக்கொள்வதற்காக குறைந்த பட்சம் 66 சைகைகளைப் பயன்படுத்துகின்றன என்று கூறுகின்றனர்.


சிம்பன்ஸி பாஷையில், ஒரு இலையை எடுத்துக் கடித்தால் அது ஜோடியை ஈர்ப்பதற்குரிய சைகையாம். குத்தப் போவது போல் செய்தால், அது மற்றைய குரங்கை நகர்ந்து போகச் சொல்வதற்கான சைகையாம்.

நினைப்பதை வெளிப்படுத்துவதற்கான வழியை உருவாக்கியது மனிதர்கள் மட்டுமே என்றில்லை. வேறு சில விலங்குகளிடத்திலும் அது உண்டு என்பதற்கான ஆதாரம் இந்த ஆராய்ச்சி என்று அதனை மேற்கொண்டவர்கள் சொல்கின்றனர்.

சிம்பன்சிகளின் சம்பாஷணைகளுக்கு முழுமையாக அர்த்தம் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சி அல்ல இதுவென்று வேறு சில நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.



# கல்வியால் உயர்வாய் பெண்ணே



பூங்கொடி

மானிட வரலாற்றின் பின்னால் ஒரு பெண் இருப்பது தெரியவரும்.

வரலாற்றோடு, வாழ்வோடு, இயற்கையோடு என்று எல்லாவற்றிலும் மிக முக்கியமாக கலந்திருப்பவள் பெண். அன்று தொட்டு இன்றுவரை மண்ணில் பிறந்து பெரும் சாதனை படைத்த பெண்கள் பலர் உள்ளனர். ஆண்களைப் போல அறிவிலும் ஆற்றலிலும் உழைப்பிலும் உயர்ந்து நிற்பவள் பெண். குழந்தையைப் பெற்றெடுக்க மட்டுமே பயன்படுத்தப்பட்ட பெண் சமூகத்தின் எல்லாத் துறைகளிலும் ஆணுக்கு சமமாக வாழ நினைத்ததன் விளைவுதான் பெண் ணியத்தின் தோற்றம். குடும்பம் என்ற குறுகிய வட்டத்தை விடுத்து சமூகம் என்ற பரந்த நாட்டைப் பற்றிச் சிந்தித்ததன் விளைவுதான் பெண் ணியத்தின் தோற்றம்.

சமுதாயச் சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டித் திருத்த விரும்பும் முற்போக்குச் சிந்தனைகளை முன்னிறுத்தி இலக்கியம் படைக்கும் படைப்பாளிகளே, இன்னும் பெண் வாழ்வு ஆணைச் சார்ந்திருப்பதாய் மனச் சிந்தனையில் கொண்டிருப்பது ஆதிக்க மனோ பாவங்களும் அடிமைச் சிந்தனைகளும் நமக்குள் புரையோடிப் போயிருப்பதை எடுத்துரைக்கின்றன.

இன்றைய நடைமுறையில் இருக்கின்ற ஆணாதிக்க சமுதாயக் கட்டமைப்பில் பெண் தனக்கான இயல்புகளோடு வாழ்வது ஒரு புறம் இருக்கட்டும். தனக்கான இயல்பு இதுவென்று உணரக்கூடிய தருணங்களை யாவது சிந்திக்கிறாளா? மிகப்பெரிய கேள்வி முதலில் எழுகின்றது. உண்மைகளை உணருகின்ற தருணங்களுக்குப் பிறகுதான் வாழ்வியல் பற்றிய சிந்தனைகளை அவள் எண்ணத் தொடங்குகிறாள்.

**இந்த சமுதாயத்தில் மேலோட்டமாகப் பார்த்தால் பெண்கள் சமஉரிமை பெற்றது போன்று தோற்றும். ஆனால் அந்த ம்ாயத்தோற்றத்தின் பிடியில் பல கசப்பான உண்மைகள் ஒளிந்து இருக்கின்றன. பெண் குழந்தை கடன், ஆண் குழந்தை வரவு என்ற பார்வை மேலோங்கிக் காணப்படுகிறது.**

இந்தச் சமுதாயம் பெண்ணுக்கான இயல்புகள் என்று தீர்மானித்து வைத்திருக்கின்ற இயல்புகளை ஒட்டியே ஒவ்வொரு பெண்ணின் பாதைகளும் பயணங்களும் இருக்கின்றன. தன் பயணங்களைத் தன் இயல்பில் தீர்மானிப்பதும் பாதைகளைத் தேடிச் செல்வதும் என்பதை ஒரு பெண் சிந்திக்க இயலாததாகவே உள்ளது.

இந்தத் தருணத்தில் பெண் கல்வி, வேலை வாய்ப்பு என்பன சமுதாய முன்னேற்றத்தையும் ஆணாதிக்க சமுதாயத்தையும் உடைத்தெறிய வழிவகுக்கும் என்பதில் ஐயப்படவே தேவையில்லை.

பெண் என்பவள் குடும்பத்தில் முக்கிய பங்கு வகிக்கிறாள். குறிப்பாகத் தன்னுடைய குழந்தைகளின் அறிவுக்கு அடித்தளம் இடுபவள் பெண்தான். கல்வி ஒருவரை அறிவுடையவராகவும் பண்புடையவராகவும் மாற்றுகின்றது. வளர்ந்து வரும் நவீன உலகில் கல்வி முக்கியத்துவம் வகிக்கிறது. கல்வி நிறுவனங்களோ நாள்தோறும் பல்கிப் பெருகி வருகின்றன. மருத்துவம், பொறியியல், கணினி, கணிதம், வர்த்தகம், இலக்கியம் எனப் பல துறை வாரியாக கல்வி போதிக்கப்படுகிறது.

மனித குலத்தின் அகக் கண்ணைத் திறந்து விடும் கல்வி அனைவருக்கும், குறிப்பாக பெண்களுக்கு அவர்கள் இந்த சமுதாயத்தின் அடிமைத்தனங்களிலிருந்து மீண்டுவர மிக அவசியமான ஒன்றாகும்.

கல்வியின் முக்கியத்துவத்தை பாமரரும்அறியும்வண்ணம்அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருகிறது. இருப்பினும் அனைவருக்கும் கல்வி என்ற திட்டம் இன்றுவரை சாத்தியப்படவில்லை. இன்று உருவாகியுள்ள தனியார் கல்வி நிறுவனங்களால் கல்வி வியாபாரமாகிவிட்டது என்பது நிதர்சனமான உண்மை. அதனால் வசதி படைத்தவர்களுக்கு எளிதான கல்வி எளியவர்களுக்கு எட்டாக் கனியாகி விட்டது. பெண்களுக்கு கல்வி என்ற விழிப்புணர்வு நம் மக்களிடையே குறைந்து காணப்படுகிறது. அதிகம் கல்வி கற்ற பெண்ணுக்கு ஏற்ப மணமகன் கிடைப்பது சிரமமாக இருப்பதால் படிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை.

மேலும் காலங்காலமாக இருந்துவரும் ஆணாதிக்கப் போக்கினால் பெண்கள் அடக்கி வைக்கப்படுகின்றனர். அதனால் அவர்களிடம் ஆக்கபூர்வமான திறமைகள் இருந்தும் வெளிப்படுத்தத் தயங்குகிறார்கள். பெண்கள் எந்த வேலையைச் செய்ய முற்பட்டாலும் "பெட்டைக் கோழி கூவி விடியுமா?", "பெண் புத்தி பின் புத்தி" என்று கேலி பேசி அவர்களை இளக்காரமாகப் பார்க்கின்றனர். பெண்களின் வாழ்வியல் நடைமுறைகள் மாறிவரும் இந்தக் காலகட்டத்தில் நம் கலாசாரத்தைச் சிதைக்காமல் "பழையனும் கழிதலும் புதியன புகுதலும்" என்ற வாக்குக்கேற்ப பெண் களின் அடிமைத்தனத்தில் இருந்து சமூக மாறுதல்களை ஏற்படுத்துவதற்கு பெண் கல்வி அவசியமானதாகும்.

உலகம் விஞ்ஞான வளர்ச்சியில் உன்னதமான உயரத்தை எட்டிப் பிடித்திருக்கிறது. அறிவியல் அகிலத்தையே ஆட்டிப் படைக்கிறது. ஆனால் பெண்கள் என்று வரும்போது அவர்கள் சம உரிமையை மறுக்கும் ஆணாதிக்கப் போக்கும் நம் சமுதாயத்தில் சற்று அதிகமாகவே காணப்படுகிறது. இந்தப் போக்கு முன்பை விட சற்றுக் குறைந்தாலும் இன்றும் பெண்களுக்கு சம உரிமை மறுக்கப்பட்டே வருகிறது. பெண் சிறுவயதில் பெற்றோருக்கும் மணம் முடித்த பின் கணவருக்கும் முதுமையில் பிள்ளைகளுக்கும் பயந்தும் பணிந்தும் வாழ வேண்டும். இன்றும் பெண் சிசுக் கொலை, வரதட்சணைக் கொடுமை, பாலியல் வன்கொடுமை என்று எத்தனை தாக்குதல்கள் பெண்ணின் மீது இடம் பெறுகின்றன. இத்தகைய அரக்கர்களின் பிடியில் இருந்த விடுபட கல்வி ஒன்றே தீர்வென்பதை பெண்கள் உணர வேண்டும்.

இந்த சமுதாயத்தில் மேலோட்டமாகப் பார்த்தால் பெண்கள் சமஉரிமை பெற்றது போன்று தோன்றும். ஆனால் அந்த மாயத்தோற்றத்தின் பிடியில் பல கசப்பான உண்மைகள் ஒளிந்து இருக்கின்றன. பெண் குழந்தை கடன், ஆண் குழந்தை வரவு என்ற பார்வை மேலோங்கிக் காணப்படுகிறது. பெண்களுக்கு சமஉரிமை வேண்டும் என்பதற்கே ஆயிரம் தடைகள். இவற்றையெல்லாம் மீறி ஏட்டைத் தொட அனுமதியின்றி அடிப்படையிலே முடக்கப்பட்ட பெண்கள் இன்று பட்டம் பெற்று சட்டங்கள் இயற்றும் வல்லுனர்களாய் மாறிவிட்ட நிலையைக் கண்கூடாகப் பார்க்கும்போது மிகவும் பெருமையாக இருக்கிறது. ஏட்டுப் படிப்பு மட்டும் இல்லாமல் பெண்கள் சுயதொழில் செய்வதற்கான பயிற்சிகளும் பாடத்திட்டத்தோடு சேர்த்து வழங்கினால் அவை அவர்கள் வாழ்வில் முன்னேற உறுதுணையாக இருக்கும்.

ஆணுக்கு அளிக்கும் கல்வி அவன் ஒருவனுக்கு. பெண்ணுக்கு அளிக்கும் கல்வி ஒரு குடும்பத்துக்கு என்பதை உணர்ந்து பெண் சமுதாயம் மேம்பட இந்த சமுதாயம் வழிவகை செய்ய வேண்டும். ஆண்களைப்போல பெண்களும் எந்தத் துறையிலும் தாழ்ந்தவர்கள் அல்ல என முழு மனதுடன் நம்பினால் மட்டுமே பெண்கள் அதிக வெற்றிகளைப் பெற முடியும்.

குடும்ப அளவில் பொருளாதாரத்தைச் சுமக்கும் பெண்களில் பலரும் இரட்டைக் குதிரைச் சவாரி செய்யும் நிலையில் உள்ளனர். வீட்டுப்பணி, அலுவலகப் பணி இரண்டையும் திறம்படச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தில் பலருக்கு உண்டு. ஆண், பெண் இருவருக்கும் குடும்பப் பொறுப்பில் சமபங்கு இருக்கிறது என்பதை எந்த மட்டத்தில் இருக்கும் ஆண்களும் புரிந்துகொள்வதில்லை. ஏதோ குடும்பம் என்றால் அது முழுக்க முழுக்க பெண்களின் பொறுப்பு என்ற தவறான எண்ணம் மக்களுக்கு இருக்கிறது. இது ஒரு புறமிருக்க கல்வியும் பொருளாதாரமும் கிடைக்கப்பெற்ற ஒரு சில பெண்கள் மமதை கொண்டு கலாசாரத்துக்குப் பொருந்தாத வகையில் அநாகரிகமாக நடந்து கொள்கின்றனர். ஆரோக்கியமற்ற இந்தப் போக்கை மாற்றிக்கொண்டு பெண்கள் பரிசுத்தமான சிந்தனைகளை வளர்த்து சீராக நடந்துகொள்ள வேண்டும். பொறுமை பெண்ணுக்கு இயல்பான குணம். விட்டுக்கொடுத்தல் பெண்ணுக்கு சுலபமான கலை. அரவணைத்து அணைத்துச் செல்லல் தாய்மையின் குணம். பெண்ணின் தனிச்சிறப்பு. இந்தக் குணங்களைக் கடைப்பிடிக்கும் படித்த பெண்கள் சமூகத்தின் தூண்களாகவே விளங்குவார்கள்.

சமுதாயத்தில் முன்னேற முட்டுக்கட்டையாக இருக்கும் சீர்கேடுகளைக் களைந்து சீரான பாதையில் சிரமமின்றி நடைபோடத் தடையாய் இருக்கும் கற்களையும் முட்களையும் அகற்றுவோம். இருளில் மூழ்கியிருக்கும் சமுதாயத்தை வெளிச்சத்துக்குக் கொண்டுவர "பெண் கல்வி" என்ற விளக்கை ஏற்றுவோம்.

# என் இரண்டாம் பக்கம்

என் இரண்டாம் பக்கம்
தாயின் அரவணைப்பில்
தந்தையின் கரம் பிடித்து
கவலையின்றி...
திறந்து கிடந்த என் முதற்பக்கம்
மூடிய போது...
நான் அறிமுகமானேன்..
நான்விழித்தேன்வெளிச்சம்
என்னுள் பரவியது. நான்சிரித்தேன்
நட்சத்திரங்கள்கண்சிமிட்டின
நான்அழுதேன் அனுபவ பூக்கள்
மலர்ந்து மணம் பரப்பின
நான்உருவாக்கினேன்
என் சிறிய உலகை நான்அழித்தேன்
என் அறியாமையை
நான்வீழ்ந்தேன்அதனால் எழுந்தேன்
நான்பெற்றேன் அதனால் இழந்தேன்
இழப்பில்இருப்பின்
அருமையை உணர்ந்தேன்
நான் திறந்தேன் வேதனை வெளியில்
போனது. இதோ என் இரண்டாவது பக்கம்
சற்றே படபடக்கிறது மூடிக்கொள்ளப்
பார்க்கிறது...முடிவுரை
ஆரம்பம்! முடிவில்லா கதையில்
சுவாரஸ்யமேது? முதற்பக்கத்தின்
முன்னுரை மனதில் இனிக்க மூன்றாம் பக்க
முடிவுரை படிக்கும் ஆவலில்
நான் என் இரண்டாம் பக்கத்தில்...

இனியவள்



# நிரந்தர வீடுகள் வழங்காததால் அல்லற்படும் 86 குடும்பங்கள்

## வவுனியா மெனிக்பாம் பகுதியில்

வவுனியா, ஜூலை 7
வவுனியா மாவட்டம் வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மெனிக்பாம் பகுதியில் வசிக்கும் 86 குடும்பங்கள் நிரந்தர வீடுகள் இல்லாததால் கடுமையான சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன.
தற்போது இந்தக் குடும்பங்கள் தற்காலிகக் கொட்டில்களில் வசித்து வருகின்றன.
போர் முடிவடைந்து ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்த நிலையிலும் தமக்கு நிரந்தர வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லையென இந்தக் குடும்பங்கள் கவலை தெரிவித்துள்ளன.

**போர் முடிவடைந்து ஐந்து ஆண்டுகள் நிறைவடைந்த நிலையிலும் தமக்கு நிரந்தர வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லையென இந்தக் குடும்பங்கள் கவலை தெரிவித்துள்ளன.**

ஆனால் நூற்றுக்கணக்கான முஸ்லிம் குடும்பங்களுக்கு இந்தப் பகுதியில் நிரந்தர வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டுள்ள போதிலும் தாம் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருவதாக இந்தக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.
இது தொடர்பாகத் தாம் பிரதேச செயலரிடமும், கிராம சேவையாளரிடமும் முறையிட்ட போதிலும் எந்தவிதமான பயனும் கிட்டவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.
அடுத்த கட்ட வீட்டுத் திட்டத்திலாவது தமக்கு வீடுகளை வழங்கவேண்டுமென இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-415)

# முட்பற்றைகள் நிறைந்துள்ள முள்ளியவளை மயானம்

## அங்கு வருவோர் பெரும் சிரமம்

முள்ளியவளையில் அமைந்துள்ள நாவற்காடு மயானம் அடிப்படை வசதிகளற்ற நிலையில் காணப்படுவதுடன் முட்புதர்கள் சூழ்ந்தும் இருப்பதால். இதனைப் பயன்படுத்துபவர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
மேலும், மயானத்துக்குச் செல்லும் வீதி புனரமைக்கப்படாததால் உடல்களைத் தகனம் செய்வதற்கென எடுத்துச் செல்பவர்கள் இடர்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.
மேலும் முட்பற்றைகள் நிறைந்தும், நீர் பெறுவதற்கான கிணற்று வசதி இல்லாத நிலையும் இங்கு காணப்படுகின்றது. இதனால் குறிப்பிட்ட ஒரு குறுகிய இடத்தில் மட்டுமே கிரியைகளை மேற்கொள்ள முடியுமென்பதுடன் நீரை வெகு தூரத்திலிருந்து கொண்டு செல்ல வேண்டிய அவல நிலையும் ஏற்பட்டுள்ளது.
அத்துடன் வீதி புனரமைக்கப்படாததால் மிக நீண்ட தூரம் சுற்றி வர வேண்டியுள்ளது.
எனவே பொதுமக்களின் சிரமங்களைத் தவிர்க்கும் பொருட்டு குறித்த வீதியைப் புனரமைப்பதுடன் நீர் வசதியையும் ஏற்படுத்தி மயானத்தைச் சுற்றி வேலியிட்டு உதவ வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)

# கழுதைகளின் தொல்லையால் மக்களுக்கு அசௌகரியம்

மன்னார்,ஜூலை 7
மன்னார் மாவட்டத்தில் கழுதைகளின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுவதால் வீதியில் செல்பவர்கள் அசௌகரியங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும் இவற்றினால் விபத்துக்கள் ஏற்படும் சாத்தியமும் அதிகரித்துக் காணப்படுகின்றது.
இந்தக் கழுதைகள் வாழ்விடங்களுக்குச் சென்று பெரும் சிரமத்துடன் சேமித்து வைத்திருக்கும் குடிதண்ணீரை அசுத்தம் செய்து வருவதாகவும் தெரி விக்கப்படுகிறது.
கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட புள்ளி விவரங்களின் பிரகாரம் மன்னாரில் 3 ஆயிரம் கழுதைகள் அநாதரவாகத் திரிவதாகத் தெரிய வந்தது.
கடந்த காலங்களில் கழுதைகளின் இடையூறு மற்றும் தொல்லைகளால் இருவர் உயிரிழந்துள்ளமைகுறிப்பிடத்தக்கது.



கழுதைகளால் பொதுமக்களுக்கு ஏற்படும் தொல்லைகளைத் தவிர்ப்பதற்கு அதிகாரிகள் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென இங்கு பலதரப்பினராலும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (க-415)

# இன நல்லுறவை மேம்படுத்துமுகமாக சிரமதானம்



நாட்டில் சமாதானத்தையும், ஒற்றுமையையும் ஓங்கி ஒலிக்கச்செய்யுமுகமாக சர்வமதத் தலைவர்கள் ஆசியுடன் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வவுனியா வெளிக்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில், வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியம் சிரமதானப் பணியை ஏற்பாடு செய்திருந்தது.
காலை 9.30 மணிக்கு ஆரம்பமான நிகழ்வில் இந்து மதகுரு ராஜ்மோகன் சர்மா, பௌத்தமதகுரு ஆனந்ததேரர், இஸ்லாமிய மதகுரு தையும்மௌலவி, கிறிஸ்தவ மதகுரு ஜெபச்செல்வன், மக்கள் ஒன்றியத் தலைவர் தேசமான்ய சு.குமாரசாமி, பொலிஸ்,பொதுமக்கள் தொடர்பு அதிகாரி வெல்கம்பாய, பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர் க.தியாகராசா, பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். சிரமதானப் பணி கள் ஒன்றியச் செயலாளர் கு.சஜித்குமார் தலைமையில் நடைபெற்றன. (ஓ-402)

# புனரமைப்பின்றி காணப்படும் வீதிகள்

வவுனியா மகாறம்பைக் குளம் பகுதியில் உள்ள வீதிகள் நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமையால் அந்தப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
சிறிராமபுரம், மகாறம்பைக்குளம், கருப்பனிச்சங்குளம், காத்தார் சின்னக்குளம், மதினா நகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பயன்படுத்தும் வீதிகளோ மோசமானநிலையில் காணப்படுவதால் மக்கள் கடுமையானபோக்குவரத்து இடர்களை எதிர்கொள்கின்றனர்.
இங்கு திருஞானசம்பந்தர் மகா வித்தியாலயம், மதினா நகர் வித்தியாலயம், மகாறம்பைக்குளம், அ.த.க. பாடசாலை, பூந்தோட்ட மகாவித்தியாலயம், காந்தார் சின்னக்குளம்பாடசாலை கருப்பனிச்சங்குளம் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களும், இந்த பகுதி மக்களும் மழைகாலங்களில் பல்வேறு இடர்பாடுகளை எதிர் கொண்டு வருகின்றனர். (க-402)

# கழிவுகளால் நாறியது வவுனியா- மன்னார் வீதி

வவுனியா, ஜூலை 7
வவுனியாவில் நீண்ட நாள்களாகத் தேங்கிக் கிடந்த குப்பைகள் மற்றும் இறந்த மிருகங்களின் கழிவுகளை ஏற்றிச் சென்ற வாகனத்திலிருந்து சிந்தி வீசப்பட்ட கழிவுகளால் கடந்த வெள்ளிக்கிழமை வவுனியாவில் மன்னார் வீதி துர்நாற்றம் எடுத்தது.
பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வவுனியா நகர சபையினர் கடந்த மூன்று நாள்களாகப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.
இதனால் வவுனியாவில் பல்வேறு இடங்களில் குப்பைகளும் மிருகங்களின் இறந்த கழிவுகளும் தேங்கிக் கிடந்தன. அவை நேற்றுமுன்தினம் வவுனியா நகரசபையின் வாகனத்தில் ஏற்றப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டன. இவ்வாறு கழிவுகள் ஏற்றப்பட்டு வாகனமொன்றில் இறந்த மாடுகளின் கழிவுகளும் ஏற்றப்பட்டுள்ளன. இவற்றின் பகுதிகள் வேப்பங்குளம், நெளுக்குளம், பம்மைமடு ஆகிய பகுதிகளிலுள்ள வீதிகளில் மன்னார் வீதியில் சிந்தியதால் வீதியெங்கும் துர்நாற்றம் எடுத்தது. இதனால் பாடசாலை மாணவர்கள், வர்த்தகர்கள் மற்றும் வவுனியா பொது வைத்தியசாலைக்கு மன்னார் வீதியால் சென்ற நோயாளிகள் உட்பட பலரும் சுகாதார ரீதியான பிரச்சினை களை எதிர்கொண்டனர். வீதிகளில் கழிவுகள் சிந்தாத வகையில் ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-402)



கழிவுகள் ஏற்றிச் சென்ற வாகனத்திலிருந்து சிதறிய கழிவுகள்

# மன்னாரில் உச்ச விலையில் விற்கப்படும் தென்பகுதி மரக்கறிகள்

## வறட்சியால் உள்ளூர் உற்பத்தி பாதிப்பு; பச்சைமிளகாய் ரூ.900; இஞ்சி ரூ.1000

மன்னார்,ஜூலை 7
மன்னார்ப் பகுதியில் பச்சை மிளகாய் மற்றும் இஞ்சி ஆகியவற்றின் விலை அதிகரித்துள்ளதோடு மரக்கறி வகைகளின் விலையும் சற்று அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.
தற்போது மன்னார் சந்தைகளில் ஒரு கிலோ பச்சை மிளகாய் 800 ரூபா முதல் 900 ரூபா வரையும்.ஒரு கிலோ இஞ்சி 900 ரூபா முதல் 1000 ரூபா வரையும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.
அதேவேளை மரக்கறி வகைகளின் விலை சற்று அதிகரித்துள்ள நிலையில் ஒரு கிலோ கறி மிளகாய் 300 ரூபாவுக்கும், ஒரு கிலோ கரட் 180 ரூபாவுக்கும், ஒரு கிலோ உருளைக்கிழங்கு 140 ரூபாவுக்கும், ஒரு கிலோ தக்காளி 200 ரூபாவுக்கும் தற்போது மன்னார் சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.
மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் உள்ளூர் உற்பத்திநடவடிக்கைகள் குறைவடைந்த நிலையில் உள்ளதாகவும் குறிப்பாக நீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் உள்ளூர் உற்பத்திச் செய்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை இருப்பதாக உள்ளூர் உற்பத்தியாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.



கோப்புப் படம்

இதனால் பச்சை மிளகாய், கறி மிளகாய், பயிற்றங்காய், பெரிய வெங்காயம் உள்ளிட்ட பல் வேறு மரக்கறி வகைகள் தென் பகுதியில் இருந்து தருவிக்கப்படுகின்றன.
இதனால் தற்போது தென் பகுதியில் இயற்கை இடர் காரணமாக மரக்கறி வகைகளின் விலை அதிகரித்துள்ளமையினால் அதனை கொள்வனவு செய்து மன்னாரில் கூடிய விலைக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மன்னார் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.
எனவே மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் உள்ளூர் மரக்கறி உற்பத்தி நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையிலும், குறித்த உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை உரிய வகையில் உரிய விலைக்கு சந்தைப்படுத்துவதன் மூலம் மன்னாரில் மரக்கறி வகைகளின் விலையில் சற்று மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என உள்ளூர் உற்பத்தியளர்களும், வியாபாரிகளும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (ஓ-56)

# வாள் வெட்டுச் சம்பவம்; நீதிவான் நேரில் விசாரணை

## மருத்துவமனை வளாகத்தில் இரத்த கறைகள்

தென்மராட்சி, ஜூலை 7
சாவகச்சேரி ஆதார மருத்துவமனை வளாகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு வாள் வெட்டுக்கு இலக்காகி இளைஞர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் ச.கணபதிப்பிள்ளை நேற்று ஞாயிறு காலை சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டார்.

கச்சாய் அம்மன் கோயிலில் இடம்பெற்ற இசை நிகழ்வு பார்க்கச் சென்ற இளைஞருக்கும், அல்லாரை இளைஞர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறி வாள் வெட்டில் முடிந்தது. காயமடைந்த இருவரை ஓட்டோவில் ஏற்றி வந்து மருத்துவமனையில் அனுமதித்து விட்டு மற்றைய ஓட்டோவை எதிர்பார்த்து மருத்துவமனை வாசலுக்குச் சென்ற வேளையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் குறித்த இளைஞனின் தலையில் வாளால் வெட்டி விட்டு மருத்துவமனை முன்பாகச் சென்று அங்கு கடமையில் இருந்தவர்களை பயமுறுத்தும் வகையில் வாளை உயர்த்திக் காட்டி விட்டு தப்பியோடியுள்ளனர்.



மோட்டார் சைக்கிள் இலக்கத்தைப் பார்வையிடச் சென்ற மருத்துவமனைப் பொலிஸ் உத்தியோகத்தரையும், பாதுகாப்பு உத்தியோகத்தரையும் அச்சுறுத்தும்வகையில்வாளை காட்டி விட்டுச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வெடி பொருள்கள் அகற்றும் நிறுவனத்தில் பணியாற்றும் மீசாலையைச் சேர்ந்த உதயகுமார் அன்பழகன் (வயது-23) என்பவரே உயிரிழந்தவராவார். அவரது சடலம் யாழ். போதனா மருத்துவமனையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை காயமடைந்த இளைஞனின் வீட்டுக்குச் சென்ற குடும்பஸ்தர் அங்குள்ள பொருள்களை அடித்து சேதப்படுத்தி நகை மற்றும் பணம் ஆகியவற்றை அபகரித்துச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9-131)

# நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பாதீனியம் ஒழிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 7
நல்லூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி பகுதிகளில் இன்றுதொடக்கம் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை பாதீனிய ஒழிப்பு நடவடிக்கைகளை நல்லூர் பிரதேச செயலகம் முன்னெடுக்கவுள்ளது.

விளைத்திறன் கொண்ட செயற்பாடாக பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையிலும், கிராம அலுவலர் பிரிவுகளில் கிராம அலுவலர்களைக் கொண்ட குழுக்கள் மூலமும் பாதீனிய ஒழிப்புத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. பொதுமக்கள், பொது அமைப்புக்களின் உதவியுடன் இதனை மேற்கொள்ளவுள்ளதால் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

இன்று திங்கட்கிழமை விளையாட்டு மைதானம், வீதியோரங்கள், சேமக்காலை, மயானம் பொது மண்டபங்களிலும்-

நாளை செவ்வாய்க்கிழமை அரச கட்டடங்களிலும் நாளை மறுதினம் புதன்கிழமை பாடசாலைகளிலும், வியாழக்கிழமை தனியார் வீடுகள் மற்றும் வெற்றுக் காணிகளிலும் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தனியார் கல்வி நிலையங்கள் ஆலயங்களிலும் பாதீனிய ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (வ-7)

# அல்லாரையில் வாள்வெட்டு 8 பேர் காயம்

தென்மராட்சி, ஜூலை 7
மீசாலை அல்லாரைப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் எட்டுப் பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டு, மூவர் யாழ்.போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். ஏனைய 5 பேர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த அல்லாரையைச் சேர்ந்த நவரத்தினம் குகனேசன் (வயது-24) மீசாலையைச் சேர்ந்த கணேசமூர்த்தி சுரேஷ் (வயது-24) மற்றும் மேலும் ஒருவரும் யாழ்.போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். (அவர்களில் ஒருவர் அண்மையில் படையில் இணைந்து தற்போது விடுமுறையில் வந்து நின்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.)

மேலும், சாவகச்சேரி மடத்தடி மேற்கைச் சேர்ந்த றெஜி பரந்தாமன் (வயது-30), அல்லாரை தெற்கைச் சேர்ந்த குமாரதாஸ் பிரசன்னா (வயது-20), கணேசபிள்ளை சுகிர்தன் (வயது-26), கச்சாய் தெற்கைச் சேர்ந்த ஸ்கந்தராசா நிஷாந்தன் (வயது-24), மீசாலையைச் சேர்ந்த ஞானேந்திரன் குபேரன் (வயது-20) ஆகியோர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை -
அவர்கள் தங்கியுள்ள விடுதிக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இதேவேளை - குறித்த சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் மூவரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர். (வ-9)

# பாஷையூர் சூரியபுரத்தில் சேதமுற்ற வீடுகளை புனரமைக்க உதவியில்லை

## 30 வருடங்கள் கடந்தும் அந்த மக்களுக்கு உறுதிகளும் இல்லை

கொழும்புத்துறை, ஜூலை 7
பாஷையூர், சூரியபுரம் பகுதியில் போரால் சேதமடைந்த குடியேற்றத்திட்ட வீடுகளைப் புனரமைக்க எந்தவித உதவிகளும் வழங்கப்படவில்லை. அத்துடன் 30 வருடங்களுக்கு மேலாக குடியமர்ந்திருந்த இந்தப் பகுதி மக்களுக்கான காணி உறுதிகளும் இதுவரை வழங்கப்படவில்லை என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கொழும்புத்துறை சவேரியார் குருமடத்துக்கு எதிராக கடற்கரையோரமாக அமைக்கப்பட்ட 5 வீடுகளைக் கொண்ட சூரியபுரம் குடியேற்றத்திட்ட வீடுகள் அனைத்தும் சேதமடைந்து காணப்படுகின்றன. இவை வீடமைப்பு அதிகார சபையினால் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளாகும்.

இந்தப் பகுதிக்கும் அதனை அண்டிய புனிதபுரம் பகுதி குடியிருப்புக் காணிகளுக்கும் உறுதிகள் வழங்கப்படாமையால்வீட்டுத்திட்ட உதவிகளைப் பெற முடியாதுள்ளதாகவும் மக்கள் ஆதங்கப்படுகின்றனர். (ஒ-135)



# தாகம் தணிக்க இளநீர் குவியல்



யாழ்ப்பாணத்தில் கடும் வெப்பமான காலநிலை நிலவி வருவதை அடுத்து மக்கள் தாகத்தை தணிப்பதற்கு செவ்விளநீர் விற்பனை செய்யப்படும் இடங்களை நாடிச் செல்கின்றனர். செவ்விளநீர் 50 ரூபா முதல் 70 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது. (ஒ-135)

# இரண்டாம் கட்ட ஆசிரிய பயிற்சி ஜூலை 15 இல்

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில்

அச்சுவேலி, ஜூலை 7
ஆசிரியை பயிற்சிக் கலாசாலையில் 2013/2014 ஆம் கல்வி ஆண்டுக்கான இரண்டாம் கட்ட ஆசிரியர் பயிற்சி எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது. கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெறுவதற்கு 640 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் இட நெருக்கடி மற்றும்வளவசதிக்குறைவுகளைக் கருத்தில் கொண்டு சில பயிற்சி நெறிகள் வேறு தமிழ் மொழி மூல ஆசிரியர் கலாசாலைகளுக்கு மாற்றப்படவுள்ளன.

பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு பயிற்சி நடைபெறும் ஆசிரிய கலாசாலை உள்ளிட்ட விவரங்களோடு தொடர்பான அழைப்புக் கடிதங்கள் கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்வி நிர்வாக பிரிவால் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

ஆசிரியர் பயிற்சி பெறுவதற்கான ஆசிரியர் சேவைக் காலம் மூன்று மாதங்களாக குறைக்கப்பட்டு கோரப்பட்ட விண்ணப்பத்தின் பிரகாரம் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு 640 பேர் விண்ணப்பித்துள்ளனர். அவர்களில் 600 பேர் வரையில் வன்னிப் பெருநிலப் பரப்பில் உள்ள பாடசாலைகளில் கடமை புரிபவர்களாகும்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்தவர்களில் ஆரம்பக்கல்வி பயிற்சிக்கு 285 பேரும், உடற் கல்வி ஆசிரியர் பயிற்சி நெறிக்கு 145 பேரும், ஆங்கில பயிற்சிநெறிக்கு 52 பேரும் அடங்குவர். மொத்தமாக 640 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

அதேநேரம் நாடளாவிய ரீதியில் உள்ள ஏனைய ஆசிரியர் கலாசாலைகளுக்கு தலா 15 இற்கு குறைவான எண்ணிக்கையானோர் விண்ணப்பித்துள்ளனர்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை வரலாற்றில் ஆகக் கூடிய எண்ணிக்கையானோர் இந்தமுறை விண்ணப்பித்துள்ளனர். கோப்பாய் கலாசாலையில் உள்ள இடவசதி மற்றும் வளவசதிகளை கருத்தில்கொண்டு 450 பேர் வரையில் பயிற்சிக்கு அனுமதிக்கப்படலாம் என்று கூறப்படுகின்றது.

இதேவேளை-
கடந்த முதலாம் திகதி கல்வி அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலில் ஆசிரியர் கலாசாலைகளின் வளவசதிகள் ஆளணி வசதி மற்றும் பயிற்சி ஆசிரியர் களை அனுமதிப்பதற்கான எண்ணிக்கை அளவு தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது. (வ-11)

# நிரந்தரக் கட்டடம் அமைப்பதில் இழுபறி

## சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி உப பணிமனைக்கு

கைதடி, ஜூலை 7
சாவகச்சேரி பிரதேச சபையின் கீழ் இயங்கும் கைதடி உப பணிமனையின் நிரந்தரக் கட்டடம் அமைப்பதில் இழுபறி நிலை காணப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த உப பணிமனைக் கட்டடம் கடந்த பல வருடங்களாக பாவனைக்கு உதவாத நிலையில் இருந்தமையால் கைதடி தென்கிழக்குப் பகுதியிலுள்ள தனியார் வீடொன்றில் உப பணிமனையின் செயற்பாடுகள் நடைபெற்று வந்தன.

சாவகச்சேரி பிரதேச சபை இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்படுமிடத்து தென்மராட்சி மேற்குக்கான தலைமைப் பணிமனையாக இது அமையலாம் என்ற காரணத்தால், கைதடிச் சந்தியில் பொதுச் சந்தைக்கு அருகிலுள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் புதிய கட்டடத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஆனால், பிரதேச சபையின் சில உறுப்பினர்களின் மாற்றுக் கருத்தால் இந்தப் பணிமனைக்கான புதிய கட்டடத்தை அமைப்பதில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் சொந்தமாக இரண்டு காணிகள் இருந்தும் வாடகைப் பணம் செலுத்தியே பணிமனை இயங்கி வருவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டினர்.

எனவே, இந்த விடயத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு மற்றும் உள்ளூராட்சித் திணைக்களம் இணைந்து நடவடிக்கை எடுத்து மேற்படி பிரதேச சபையின் உப பணிமனைக் கட்டடத்தை கைதடிச் சந்தியிலுள்ள பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் அமைத்துத் தருமாறு கேட்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நாவற்குழி, தச்சன்தோப்பு மற்றும் கைதடியைச் சேர்ந்த ஏனைய மக்கள் இலகுவாக பிரதேச சபையுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-288)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வலுவான ஜனநாயகத்தை நோக்கி நாடு நடைபோட...

யானைவரும் பின்னே மணி ஓசைவரும் முன்னே, என்பதற்கிணங்க இந்த வருடக் கடைசியில் அல்லது அடுத்த வருட ஆரம்பத்தில் நடைபெறக்கூடும் என்று எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக ஊவா மாகாண சபைத் தேர்தலை நடத்தி நாட்டின் அரசியல் நிலைமையை நாடிபிடித்து பார்க்க அரசு தீர்மானித்திருக்கிறது.

முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் அளுத்கம, பேருவளை தர்கா நகர் ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற இன வன்முறைகள் காரணமாக முஸ்லிம் மக்களின் ஆதரவு குறைந்துவிடாமல் இருக்க பல்வேறு முயற்சிகளில் அரசு தரப்பினர் ஈடுபட்டு வருகின்றனர். மற்றபடி விலைவாசிகள் எகிறிப் பாய்ந்தால் என்ன, ஜெனிவா மனித உரிமை விசாரணைகள் விறு விறுப்படைந்தால் என்ன, அரசுத் தலைவர்களுக்கு கவலையில்லை. முஸ்லிம்களுக்கு நேர்ந்த சம்பவம் மிகச் சிறிய விடயம் அதை ஊதிப் பெருப்பித்து உலகுக்கு காட்டி அரசுக்கு அபகீர்த்தி ஏற்படுத்திவிட்டார்கள் என்பதுபோல் அவர்கள் பேசி வருகிறார்கள்.

இதற்கிடையில் எந்த நேரமும் அறிவிக்கப்படலாம் என்று கருதப்படும் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதற்கும் பல்வேறு கட்சிகளும் தயாராகி வருவதுபோல் தெரிகிறது. எதுவானாலும் தம்மை அசைக்க முடியாது. மீண்டும் வெற்றி பெறுவார் என்றே தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கருதுகிறார். மூன்றாவது தடவையும் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுவதற்கு வசதியாக 18 ஆவது அரசமைப்புத் திருத்தத்தையும் அவர் நிறைவேற்றி வைத்துக் கொண்டிருக்கிறார்.

இந்த நிலையில் எதிர்க்கட்சிகள் சில ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுவதற்கு பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற்கு யோசித்து வருகின்றன. ஆனால் இதுவரை போட்டிக்கு யாரை நிறுத்துவது என்பதில் கருத்தொற்றுமை ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

வெகு பிந்திய செய்திகளின்படி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அம்மையாரை பொது வேட்பாளராக போட்டியிட வைக்க எதிர்க்கட்சித் தலைவர்கள் சிலர் முயற்சிப்பதாகவும் அம்மையாரும் அதற்கு இசைவது போல் கருத்து வெளியிட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

பொதுவில் ஐ.தே.கவிலிருந்து அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஏற்கெனவே போட்டியிடுவதற்கான தமது ஆசையை வெளியிட்டிருந்தார். அந்தக் கட்சியின் பிரமுகரும், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் புதல்வருமான சஜித் பிரேமதாசவுக்கும் அந்த ஆசை உண்டு.

அந்தக் கட்சியின் தலைமைத்துவ சபையின் தலைவர் கரு ஜயசூரியாவும் போட்டியிடத் தகுதியானவர் என்று கருதப்படலாம். ஆனால் இவர்கள் எவராலும் வெற்றிபெறும் அளவுக்கு செல்வாக்கு உள்ளவர்களா என்பது கேள்விக்குறி. எனவேதான் பொதுவேட்பாளர் பற்றிய சிந்தனை அந்தக் கட்சியிலுள்ளவர்கள் மத்தியிலேயே துளிர் விட்டிருக்கிறது. அண்மையில் கொழும்பில் நடைபெற்ற அமெரிக்க சுதந்திர தின விழாவில் கலந்துகொண்ட சந்திரிகா அம்மையாரை எதிர்க்கட்சிகளை குறிப்பாக ஐ.தே.கவைச் சேர்ந்த ரவி கருணாநாயக்க, மங்கள சமரவீர, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் வேறும் சிலர் தனியாக சந்தித்துப் பேசியுள்ளார்கள். அம்மையார் கருத்து வெளியிட்டபோது பொது வேலைத் திட்டம் ஒன்று பற்றி குறிப்பிட்டதாக செய்தி கசிந்துள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதாகக் கூறி பதவிக்கு வந்துவிட்டு அந்த அதிகாரங்களையே பயன்படுத்திக் கொண்டு பதவியில் இருந்தவர் சந்திரிகா அம்மையார். அதையேதான் மஹிந்த ராஜபக்ஷவும் இப்பொழுது ஒருபடி மேலே சென்று செய்து கொண்டிருக்கிறார். எதுவானாலும் இன்றைய சூழ்நிலைகளை ஆராய்ந்து பார்க்கையில் பொது வேட்பாளர் ஒருவர் எதிர்க்கட்சிகளின் சார்பில் நிறுத்தப்படுவாரானால் நிச்சயம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பெரும் சவாலாகவே அமையும் என்று கூறத் தேவையில்லை.

அப்படியான ஒருவர் இப்போதைய நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை அடியோடு மாற்றுவது, அரசமைப்பின் 18 திருத்தத்தை ஒழித்து 17 ஆவது திருத்தத்தை மீண்டும் உயிர்ப்பிப்பது– இப்போது கிடப்பில் கிடக்கும் சாட்சிகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் சட்டத்தை நிறைவேற்றுவது போன்ற வாக்குறுதிகளை முன்வைப்பவராய் இருக்க வேண்டும். வடக்கு கிழக்கு மக்களைப் பொறுத்தவரை நீண்ட நெடுங்காலமாக தீர்த்து வைக்கப்படாமல் கிடக்கும் தேசியப் பிரச்சினைக்கு பொது வேட்பாளரின் திட்டம் என்ன என்பதையும் அவர்கள் அறிய விரும்புவார்கள். அது மட்டுமல்ல அளிக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றாது போனால் குறித்தகாலத்துக்குள் பதவி துறக்கவும் ஆயத்தமாய் இருக்க வேண்டும்.

மொத்தத்தில் இந்த நாட்டை வலுவானதொரு ஜனநாயக நாடாக முன்னேற்றிச் செல்லும் தற்துணிவும் அரசியல் ஞானமும் கொண்டவராய் அவர் இருக்க வேண்டும் என்பது முக்கியம்.

# அகதி முகாம் வாழ்வும் ஆஸி. படகுப் பயணமும்

**ஆஸ்திரேலியாவின் யூரேக்கா ஸ்ரீட் இணையத்தளத்திலிருந்து**



திங்கள் காலையன்று தமிழ்ப் புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றிக்கொண்டு கிறிஸ்மஸ் தீவில் இரண்டு படகுகள் கரையொதுங்கின. தற்போது இந்தப் படகில் பயணித்த இலங்கையர்களை ஆஸ்திரேலிய அரசு எவ்வித பாதுகாப்பும் வழங்காது இலங்கைக் கடற்படையிடம் ஒப்படைக்கவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தப் படகுகளில் ஒன்றில் இலங்கையைச் சொந்த இடமாகக் கொண்ட 153 தமிழர்கள் பயணித்துள்ளனர். இவர்களுள் 37 சிறார்களும் அடங்குவர். இந்தச் சிறார்களில் மூன்று மாதக் குழந்தையும் உள்ளது. இந்தக் குழந்தை மிகவும் நோய்வாய்ப்பட்டுள்ளது. 22 மீற்றர் நீளமான இந்தப் படகு இரண்டு வாரங்கள்வரை கடலில் நின்றுள்ளது. நாங்கள் அகதிகள். நாங்கள் இலங்கையிலிருந்து வருகிறோம். நாங்கள் இந்தியாவில் தங்கியிருந்தோம். எங்களால் அங்கு வாழ முடியவில்லை. இதனாலேயே நாங்கள் ஆஸ்திரேலியாவுக்கான எமது பயணத்தை ஆரம்பித்தோம் என அந்தப் படகிலிருந்து தமிழ்ப் புகலிடக் கோரிக்கையாளர் ஒருவர் தெரிவித்தார்.

**எங்களால் அங்கு வாழ முடியவில்லை. இதனாலேயே நாங்கள் ஆஸ்திரேலியாவுக்கான எமது பயணத்தை ஆரம்பித்தோம் என அந்தப் படகிலிருந்து தமிழ்ப் புகலிடக் கோரிக்கையாளர் ஒருவர் தெரிவித்தார்.**

இந்தத் தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் இலங்கையில் உள்நாட்டுப் போர் தீவிரம் பெற்றிருந்த 1983-2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையி லிருந்து இந்தியாவுக்குத் தப்பிச் சென்றவர்களாவர். இலங்கையில் கடத்தல்கள், சித்திரவதைகள், காணாமற் போதல்கள் போன்றன தொடர்வதாக ஐ.நா. வல்லுநர் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் தொடர்ந்த உள்நாட்டுப் போரில் 100,000 இற்கும் மேற்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். ஒரு மில்லியன் வரையான மக்கள் இடம்பெயர்ந்தனர். தமிழர்கள் நாள்தோறும் விமானத் தாக்குதல்கள் மற்றும் மீறல்களுக்கு உட்படுத்தப்பட்டதால் இந்தியாவுக்குத் தப்பிச்சென்றனர்.

இந்தியா 1951இல் வரையப்பட்ட அகதிகள் சாசனத்தில் கையெழுத்திடவில்லை. இந்தியாவில் அகதிகள் சுதந்திரமாக நடமாடுவதற்கான உரிமையைக் கொண்டிருக்கவில்லை. இந்தியாவுக்குள் நுழைவிசைவின்றி சட்ட விரோதமாக நுழையும் அனைத்து அந்நியர்களும் இந்தியாவின் 1946ஆம் ஆண்டு வெளிநாட்டவர் சட்டம் மற்றும் 1955ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தின் கீழும் கைதுசெய்யப்படுவர். ஐ.நா. அகதிகளுக்கான உயர் ஆணையகத்தின் சான்றிதழானது இந்தியாவில் அகதிகள் தடுத்து வைக்கப்படுவதிலிருந்து பாதுகாப்பு வழங்கவில்லை.

இந்தியாவின் தமிழ்நாட்டிலுள்ள 115 தொடக்கம் 130 வரையான அகதி முகாம்களில் 100,000 இற்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் வாழ்கின்றனர். இந்த அகதிகளில் சிலர் கிடுகால் வேயப்பட்ட கூரைகளைக் கொண்ட குடிசைகளிலும் ஏனையோர் சிமெந்தால் கட்டப்பட்ட சிறிய வீட்டுத் தொகுதிகளிலும் வாழ்வதாக உதவிப் பணியாளர்கள் கூறுகின்றனர். இங்கு போதியளவு மலசலகூட வசதியோ, குளியலறை வசதியோ அல்லது போதியளவு குடிதண்ணீர் வசதியோ காணப்படவில்லை. இங்கு குப்பைகளைச் சேகரிப்பதற்கான வசதியோ, மருத்துவ வசதிகளோ மேற்கொள்ளப்படவில்லை. மின்சாரம் சில பகுதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் வழமையாக காலை ஆறு தொடக்கம் மாலை ஆறு மணிவரையே மின்சாரம் வழங்கப்படுகிறது. சில முகாம்களில் மின்சார வசதி செய்து கொடுக்கப்படவில்லை. திருவனந்தபுரத்தில் உள்ள அகதி முகாமில் உள்ள ஆறு வீடுகள் அண்மையில் ஏற்பட்ட பருவப் பெயர்ச்சி மழையால் சேதமடைந்தன. இதில் சிறுமி ஒருவர் இறக்க நேரிட்டது. இங்கு இரண்டு வகையான முகாம்கள் காணப்படுகின்றன. பொதுவான முகாம்கள், சிறப்பு முகாம்கள் என்பனவே அவையாகும். பொதுவான அல்லது சாதாரண முகாம்களிலுள்ள மக்கள் வெளியில் செல்ல முடியும். ஆனால் இவர்கள் மூன்று விதமான காவல் துறையின் அனுமதிப் படிவத்தைப் பெற்றிருக்க வேண்டும். பாதுகாப்புப் படையினரால் இவர்கள் கண்காணிக்கப்படுகின்றன. போக்குவரத்தில் சில மட்டுப்படுத்தல்கள் இங்கு உள்ளன. அகதி முகாம்களில் பணியாற்றுவதற்கு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஐ.நா. அகதிகளுக்கான உயர் ஆணையரகம்கூட இந்த முகாம்களுக்குள் பிரவேசிக்க முடியாது. சாதாரண முகாம்களில் வாழ்வோர் பாதுகாப்பு அதிகாரிகளால் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படுவதாக அனைத்துலக மன்னிப்புச் சபையின் விசாரணையில் தெரியவந்துள்ளது. கும்மிடிப்பூண்டி முகாமிலிருந்து இரும்புத் தொழிற்சாலைக்குப் பணிபுரியச் செல்வோர் அங்கிருந்து இரும்புகளைக் களவாடிக்கொண்டு வந்து தம்மிடம் தர வேண்டும் என தமிழ்நாட்டு காவல் துறையின் பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவான கியுப் பிரிவு காவல்துறையினர் பலவந்தப்படுத்துவதாக அங்குள்ள அகதி ஒருவர் அனைத்துலக மன்னிப்புச் சபையிடம் தெரிவித்துள்ளார். இதே போன்று 2008 மற்றும் 2011ஆம் ஆண்டு காலப் பகுதியில் வங்கிகளில் கொள்ளையடிக்குமாறு அகதிகள் பலவந்தப்படுத்தப் பட்டதாக அனைத்துலக மன்னிப்புச் சபையின் அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது. இவ்வாறான குற்றங்களைப் புரியும் அகதிகள் கைதுசெய்யப்பட்டால் அவர்கள் 'சிறப்பு முகாம்களுக்கு' மாற்றப்படுவர்.

போரின் பின்னர் இலங்கைக்குத் திரும்பிய அகதிகள் பலர் தமது சொந்த நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ளதை உணர்ந்துள்ளனர். தமிழர் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றவாதம் இடம்பெறுவதாக தமிழ் அரச சார்பற்ற நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. எனது சகோதரன் தனது நிலத்தைப் பார்ப்பதற்காகச் சென்றபோது எமது சொந்தக் கிராமத்தின் கிட்டத்தட்ட 100 சதவீதமான நிலங்கள் தற்போதும் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பின் கீழுள்ளதைக் கண்டார் என இந்தியாவிலுள்ள தமிழ் அகதி ஒருவர் அனைத்துலக மன்னிப்புச் சபையிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போர் முடிவடைந்து பல ஆண்டுகளாகியும், காவல்துறையின் தடுப்பிலுள்ள போதான சித்திரவதைகள் அதிகரிப்பதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இலங்கை ஒரு எதேச்சதிகாரப் போக்குடைய ஒரு நாடாக மாறி வருவதாக 2013இல் ஐ.நா. மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் நவிப்பிள்ளை சுட்டிக் காட்டியிருந்தார். தமிழ் மக்கள் தொடர்ந்தும் பாலியல் வன்முறை கள், சித்திரவதைகள், கொலை, தடுத்துவைப்பு மற்றும் பலவந்தமாகக் காணாமற் போதல்கள் ஆகிய ஆபத்துக்களைச் சந்திக்கின்றனர் என சித்திரவதைகள் தொடர்பான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் யுவான் மென்டெஸ் சுட்டிக் காட்டியுள்ளார்.

மார்ச் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் தமிழர் பகுதிகளில் இலங்கை அதிகாரிகளின் தலையீடுகள் அதிகரித்துள்ளன. இங்கு கைதுசெய்தல்கள் அதிகரித்துள்ளன. கொலைகளும் இடம் பெற்றுள்ளன. சுதந்திரமான நடமாட்டம் மறுக்கப்பட்டுள்ளது. இலங்கையைப் பொறுத்தளவில் தற்போது இனப் படுகொலைக்கான ஆபத்து மத்திமத்திலிருந்து உச்சம் வரை அதிகரித்துள்ளது எனவும் மீண்டும் இலங்கையில் மோதல் உருவானால் இனப்படுகொலை உட்பட பெரிய வன்முறைகள் வெடிக்கும் எனவும் Sentinel Project மதிப்பீடு செய்துள்ளது.

ஆஸ்திரேலியாவில் தஞ்சம் புகும் இலங்கைத் தமிழ்ப் புகலிடக் கோரிக்கையாளர்கள் கடந்த 12 மாதங்களாக ஆஸ்திரேலியாவால் மீண்டும் இலங்கைக்கு நாடுகடத்தப்படுவதாக இலங்கையின் மனித உரிமைச் சட்டவாளர் லக்சன் டயஸ் தெரிவித்துள்ளார். இவ்வாறு பலவந்தமாக நாடு கடத்தப்படும் இலங்கைத் தமிழர்கள் அவர்களது சொந்த நாட்டில் விசாரணை செய்யப்பட்டு, தாக்கப்பட்டு, சித்திரவதைகளுக்கு உள்ளாவதுடன், மீண்டும் இவர்கள் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்ல முடியாத நிலை காணப்படுவதாகவும் லக்சன் டயஸ் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவிலிருந்து நாடு கடத்தப் பட்ட இலங்கைத் தமிழர்கள் இருவர் இலங்கைக் காவல்துறையினர் தம்மை ஆஸ்திரேலிய சமஷ்டி நிர்வாக காவல்துறை அதிகாரியின் முன் தாக்கியதாக வாக்குமூலம் வழங்கியதாக 2011இல் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. இந்தியாவில் அடக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்டு, தமது சொந்த நாடான இலங்கையில் இனப்படுகொலை ஆபத்தை முகம்கொடுப்பதால் தற்போது தாம் வேறு நாடுகளுக்குச் செல்ல முடியாது ஆஸ்திரேலியாவில் தஞ்சம் புகுந்துள்ளதாக இலங்கைத் தமிழ்ப் புகலிடக் கோரிக்கையாளர்கள் கூறுகின்றனர். அகதிகளுக்கு நிரந்தரப் பாதுகாப்பு நுழைவுவிசைவுகளை வழங்காது மறுப்பதானது வலிதற்றதாகும் என ஆஸ்திரேலிய உச்ச நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

பி.ஏ.அந்தோனி மார்க்



# கூட்டுறவு நாட்டுயர்வு

## இன்று சர்வதேச கூட்டுறவுத் தினம்

**கூட்டுறவு இயக்கமானது சமூக, பொருளாதார நலன்களை மையமாகக் கொண்டு சமுதாய அபிவிருத்தியை மேம்படுத்துதல் என்ற நோக்கில் செயற்படும், ஓர் அமைப்பாகவுள்ளதை அவதானிக்க முடியும். இந்த நோக்கத்தை அங்கத்தவர்கள் பரஸ்பர நல்லெண்ணத்துடன் செயற்படுத்தும்போது இலக்கை பூரணப்படுத்த முடியும். மனிதனின் வாழ்வுக்குத் தேவையான அனைத்தையும் நிறை வேற்றுவதற்கு கூட்டுறவு இயக்கம் துணை புரிந்து வருகிறது.**

உலகமெங்கும் முதலாளித்துவ அச்சுறுத்தல்களினால் கோடிக் கணக்கான மக்கள் வடித்த கண்ணீரில்தான் கூட்டுறவுஇயக்கம் முளைவிட்டு எழுந்தது. இன்று உலகெங்கும் கூட்டுறவு இயக்கம் நன்கு திட்டமிட்டு, ஒருங்கமைத்து உருவாக்கப்பட்ட மாபெரும் பொருளாதார, சமூக கலாசார மக்கள் இயக்கமாக வியாபித்துள்ளது. கூட்டுறவு நாட்டுயர்வு என்பார்கள். ஒற்றுமையே பலம் என்பார்கள். ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு என்பார்கள். இது கிராமங்களில் நிலவும் ஓர் எண்ணக் கருவாகும்.

ஐக்கிய நாடுகள் சபை 2012 ஆம் ஆண்டை சர்வதேச கூட்டுறவு அபிவிருத்தி ஆண்டாக பிரகடனப்படுத்தியிருந்தது. இதனால் 2012 ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டன. 2012ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரையில் தாய்லாந்தின் பாங்கொக் நகரில் கூட்டுறவு அமைப்புக்களின் 9 ஆவது மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் சர்வதேச கூட்டுறவு ஆண்டு தொடர்பான கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இலங்கையில் 8.5 மில்லியனுக்கு அதிகமான கூட்டுறவு உறுப்பினர்கள் அதன் நன்மைகள் அனுபவித்து வருகிறார்கள். இலங்கையில் கூட்டுறவு முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு 128 ஆண்டுகள் கடந்துள்ளன. ஆனால் முற்காலத்தைப் போன்று அல்ல தற்கால நிலைமைகள் மாறுபட்டுள்ளன. ஒப்பீட்டளவில் இன்றைய நிலைமை வீழ்ச்சியடைந்துள்ளது எனலாம்.



இன்று திறந்த சந்தை அமைப்பு (Open Market ) இருப்பதனால் யாரும் எந்தப் பொருளையும் எங்கும் வாங்க முடியும். இதனால் கூட்டுறவுச் சங்க ஸ்தாபனங்களுக்கு முன்பு இருந்த தனி உரிமை(Monopoly) இன்று இல்லை.

கூட்டுறவு அமைப்புகளைப் பதிவு செய்தல்

சட்ட திட்டங்களுக்கு அமைய கூட்டுறவு அமைப்பானது பதிவு செய்யப்படல் வேண்டும். இந்த நோக்கத்துக்கு அமைய பலநாடுகளில் விசேட கூட்டுறவு அமைப்புச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ் ஓர் சிரேஷ்ட சிவில் உத்தியோகத்தரை வழமையாகப் பதிவாளராக அல்லது கூட்டுறவு ஆணையாளராக நியமித்து அவர் மூலம் கூட்டுறவு அமைப்புகளைப் பதிவு செய்யும் அதிகாரம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒரு கூட்டுறவு அமைப்பானது சொந்தமாக உபசட்டங்களை (By Laws) இயற்றி கூட்டுறவு இயக்கங்களைக் கட்டுப்படுத்திவரும் இந்தச் சட்டங்கள் கூட்டுறவு அமைப்புவிதிகளுக்கு இணங்க இருக்கவேண்டும். உதாரணமாக உப விதிகளின் படி ஒரு வருடத்துக்கு ஒரு தடவை பொதுக்கூட்டம் கூட்டப்படவேண்டும். இந்தக் கூட்டத்தில் ஒவ்வொருவருக்கும் வாக்குரிமை உண்டு. மேலுமாக இந்த உபவிதிகளில், கூட்டுறவு அமைப்பின் நோக்கங்கள், தகுதிகள், அங்கத்தவர்கள் யார்? எவ்வாறு மேலதிக இலாபங்கள் வெளிக்காட்டப்படல் வேண்டும் என்பன தீர்மானிக்கப்பட்டு எழுதப்பட்டு இருக்கும் பதிவானது கூட்டுறவு சட்ட அந்தஸ்தையும் மற்றும் ஒப்பந்த வேலைகள் சொந்த அங்கத்தவர்களுடனோ அல்லது ஏனையோருடன் சேர்ந்து செய்வதற்கு சந்தர்ப்பம் அளிக்கிறது. பதிவு செய்யாவிட்டால் அங்கத்தவர்களுக்கு பாதுகாப்பில்லை, வங்கிகளில் கடன்பெற முடியாது. கூட்டுறவு அமைப்பினுள் பிரச்சினைகள் வரும்போது அதனை விவாதத்துக்கு விட்டு ஒரு சுமுகமான தீர்வை எட்டுவதால் நன்மை கிடைக்கும்.

கூட்டுறவு இயக்கமானது சமூக, பொருளாதார நலன்களை மையமாகக் கொண்டு சமுதாய அபிவிருத்தியை மேம்படுத்துதல் என்ற நோக்கில் செயற்படும், ஓர் அமைப்பாகவுள்ளதை அவதானிக்க முடியும். இந்த நோக்கத்தை அங்கத்தவர்கள் பரஸ்பர நல்லெண்ணத்துடன் செயற்படுத்தும்போது இலக்கை பூரணப்படுத்த முடியும். மனிதனின் வாழ்வுக்குத் தேவையான அனைத்தையும் நிறைவேற்றுவதற்கு கூட்டுறவு இயக்கம் துணை புரிந்து வருகிறது. சமுதாய ஏற்றத்தாழ்வுகள், சமூக அநீதிகள், அடக்குமுறைகள் போன்றவற்றை நீக்கி சமூக மேம்பாட்டுக்கான சமூக நிறுவனமாக உருவாக்க கூட்டுறவு இலக்கம் வழிவகுப்பதோடு மாறிவருகின்றன. நவீன தொழில்நுட்பங்களோடு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் பேர் உதவிகளை புரிந்து வருகின்றது.

வர்க்கப் போராட்டங்களினால் விளைகின்ற பயன் தொழில்நுட்ப முன்னேற்றம் என்று அறிஞர் கால்மார்க்ஸ் கூறியுள்ளார். அது போன்று கூட்டுறவு இயக்கமானது தனிமனித போட்டி நிலையில் இருந்து கூட்டுழைப்பின் மூலம் தனித்துவம் என்ற நிலைக்கு மனித முயற்சியை நெறிப்படுத்துகின்றது. நவீன உலகின் போட்டி பொருளாதார நிலைகளினூடே கூட்டுறவு இயக்கத்தை மேம்படுத்துவதில் பல்வேறு இடர்பாடுகள்; சவால்கள் எதிர்நோக்கப்படுகின்றன. மாறிவரும் பொருளாதார சூழ்நிலையில் கூட்டுறவு இயக்கமானது தனது தனித்துவத்தை இழக்காமல் நவீன தகவல் தொழில்நுட்ப அறிவைப் பெற்று நாட்டின் கூட்டுறவுத்துறையில் வளர்ச்சிக்கு முழுப் பங்களிப்பையும் வழங்க வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தில் பங்கேற்கும் துறைகளான அரசதுறை, தனியார் துறை என்பனவற்றுடன் கூட்டுறவுத்துறையும் முக்கிய பங்கை ஆற்ற முடியும் என்று கூட்டுறவாளர்களின் எண்ணக் கருத்துக்கும் சிந்தனைக்கும் அமைய கூட்டுறவு இயக்கமானது அபரிமிதமான வெற்றியை அடைய முடியும்.

கூட்டுறவுக்கு சமூகவியலுக்கும் உள்ள தொடர்பு

கூட்டுறவின் பெறுமதிகளான ஐக்கியம், சமத்துவம், சகோதரத்துவம் ஒன்று கூடி உழைத்தல், தன்உதவி, பரஸ்பரஉதவி, ஒன்றாக சிந்தித்தல், பெரும்பான்மை அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்ளல், ஜனநாயக பாரம்பரியங்களை மேற்கொள்ளுதல் என்ற எல்லா விடயங்களுமே சமூகவியலின் உயர் விழுமிய நடத்தைகளுடன் சம்பந்தப்பட்டுள்ளன. மனிதன் தனித்து வாழமுடியாது என்பதுதான் சமூகவியல் கூறும் தாற்பரியமாகும். இதன் உண்மைத் தன்மையை கூட்டுறவுத் தத்துவங்கள் வெளிப்படுத்துகின்றன. கூட்டுறவும் சமூகவியலும் குழுக்களின் உருவாக்கம். அதன் நடவடிக்கைகள் என்பன பற்றி உணர்த்துகின்றன. இந்த வகையில் கூட்டுறவு அமைப்பின் செயற்பாடுகள் அனைத்துமே கூட்டுறவு குழுக்களின் செயற்பாடுகளில் தங்கி நிற்கின்றன. குழுக்களின் வேலைத்திட்டங்கள் வெற்றிக்கு முக்கிய அடிகோலாகும். கூடிய அங்கத்தவர்களைக் கொண்ட கூட்டுறவுச் சங்கங்கள் அதன் குழுக்களின் இயலுமையைப் பலப்படுத்துவதன் மூலம் பெரிய அபிவிருத்தியை அடைய முடியும். கூட்டுறவுச் சங்கங்களில் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளார் போன்றோர்கள் இருக்கிறார்கள். இவர்களின் தலைமைத்துவ வல்லமையை உயர்த்துவதனால் அதன்மூலம் குழுக்களை இயங்க வைத்து வெற்றிகளை அடைய வாய்ப்புண்டு.

இலங்கையை ஆசியாவின் அதிசயம் என்ற நிலைக்கு மாற்ற வேண்டுமாயிருந்தால் நாட்டில் உள்ள சகல கூட்டுறவு அமைப்புக்களையும் பலப்படுத்த வேண்டும். கிராமிய வங்கிகளையும் கூட்டுறவு வங்கிகளையும் ஊக்குவித்து மக்களுக்குத் தேவையான கடன்களை வழங்குவதன் மூலம் வறுமையை ஒழிக்க முடியும். பாடசாலைகளில் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுவதுடன் ஏற்கனவே நிறுவி உள்ள பாடசாலை கூட்டுறவுச் சங்கங்களை புனரமைக்க வேண்டும். கூட்டுறவுக் கல்வியை விரிவுபடுத்தி கணக்கு வைக்கும் பதிவுமுறைகள் கற்பித்தல் வேண்டும். கூட்டுறவு தொழில் முயற்சிகளை விரிவுபடுத்தி அபிவிருத்தி செய்தல் வேண்டும். கடந்த 30 வருடப் போரினால் பாதிக்கப்பட்டு பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்களுக்கு விசேட கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து வறுமையை ஒழிக்க முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். கிராமங்களில் கூட்டுறவு கொள்கைகளைப் போதித்து மறுமலர்ச்சியை ஏற்படுத்தி கிராமிய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து கூட்டுறவு இயக்கத்தை இலங்கையின் அபிவிருத்தி இயந்திரமாக மாற்ற வேண்டும்.

கூட்டுறவு நாட்டு உயர்வு!
வாழ்க கூட்டுறவு இயக்கம்!!
வளர்க கூட்டுறவுக் கல்வி!!!

---

## வாசகர் திருமுகம்

### தனியார் வீடுகளில் கிராம அலுவலரின் அலுவலகம் அமைந்திருத்தல் கூடாது

கிராம அலுவலர்களுக்கு தனியார் குடியிருக்கும் வீடுகள் தவிர்ந்த வேறு காரியாலய வசதிகள் சம்பந்தப்பட்டவர்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தற்போது ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் கிராம அலுவலர்களுக்கு மேலதிகமாக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் என இருவர் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவ தற்கு அரசினால் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் ஒரே காரியாலயத்தில் இருந்து மக்கள் தேவைகளை நிறைவேற்றுவதற்கு வசதியாக தனியொரு வீட்டை அல்லது பொது மண்டபத்தை ஏற்பாடு செய்யவேண்டும். குடியிருப்பாளர் ஒருவரின் வீட்டை இவர்கள் பாவிக்கும் போது அவரின் கைப்பொம்மையாக இந்த உத்தியோகத்தர்கள் செயற்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. இதேசமயம் சகல உத்தியோகத்தர்களுக்கும் குடியிருப்பாளர்கள் வீட்டை கொடுக்க முன்வருவதில்லை. இது தொடர்பில் குறிப்பாக கிராமப்புறங்களில் வீடுகளைப் பெறுவதில் உத்தியோகத்தர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே உரிய உத்தியோகத்தர்கள் மூவரும் ஒரே கூரையின் கீழ் தமது சேவையினை மக்களுக்கு வழங்கிட வசதியாக மேற்குறிப்பிட்டபடி பொது வீட்டை அல்லது அந்தப் பிர தேசங்களில் உள்ள பொது மண்டபங்களைப் பாவிக்க வசதியாக யாழ்.அரச அதிபர் ஒரு தீர்க்கமான முடிவை எடுத்து உரிய பிரதேச செயலகங்களுக்கு ஆலோசனை வழங்கு வதுடன் அதனைச் செயற்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

*நலன்விரும்பிகள், தென்மராட்சி.*

### மனதிலுள்ள ஊனத்தைக் களைவோம்

ஊனம் என்பது எமது உடலில் மட்டுமே உள்ளது. அது ஒவ்வொருவர் மனதிலும் உள்ளதென்பதைச் சிலர் தமது நடவடிக்கைகள் மூலமாகத் தெரிவிக்கின்றனர். ஊனமுற்றவர்களைக் கேலி செய்யும் சமூகம் இன்றும் இருக்கத்தான் செய்கின்றது.

அண்மையில் பேருந்து ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்தேன். அங்கே வாய் பேச முடியாத நான்கைந்து பேர் தங்கள் பாட்டுக்கு ஏதோ தங்கள் மொழியில் கதைத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் ஏனையோருக்கு எதுவித இடைஞ்சலும் செய்யவில்லை. தங்கள் இருக்கைகளில் அமர்ந்து கொண்டு ஏதோ கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் கதைப்பதைப் பொறுக்காத ஒரு சிலர் 'பஸ்ஸிலை எல்லாமே ஊமை போல' என்று அவர்களைக் கேலி செய்யும் வார்த்தைகளைப் பிரயோகித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு தமிழனை இன்னொரு தமிழனே கேலி செய்யும்போது வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் எவ்வாறு நடந்து கொள்வார்கள்? அவர்கள் ஊமையாகப் பிறந்தது அவர்கள் செய்த குற்றமா? அல்லது அவர்களை ஊமையாகப் படைத்தது அந்த இறைவன் செய்த குற்றமா? இது ஒருவருக்குமே தெரியப் போவதில்லை.

இன்று உடலில் குறையேதுமின்றித் திரியும் சிலர் நாளையே ஏதாவது விபத்தில் சிக்கித் தமது அங்கங்களை இழந்து ஊனமுற்றவர்களாக மாறிவிடக்கூடும். நாளைக்கு இவர்களைப் பார்த்து வேறு சிலர் கேலியாகவோ அல்லது அனுதாபத்துடனோ வார்த்தைகளை உதிர்க்க முடியும்.

ஆகவே நாம் ஏதோ ஒரு வகையில் ஊனமடைந்து காணப்படுபவர்களை ஒரு போதுமே கேலி செய்யக்கூடாது. மாறாக அவர்களிடம் அன்பு காட்டுவோம், அரவணைத்துச் செல்வோம்.

*இனியவள் புலோலி.*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: தந்தையாருடன் மனக்கசப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எதிரிகளின் தொல்லைகள், கடன்சுமைகள் அடங்கும். தாய் மாமனால் அனுகூலம் கிடைக்கும். தடைப்பட்டிருந்த திருமணம் நடைபெறும்.



**இடபம்**: வேலை செய்யும் இடத்தில் உயரதிகாரிகளின் பாராட்டுதல்கள் கிடைக்கும். கலைத்துறையினருக்கு பொருளும் புகழும் கூடும். அரசியலில் தொல்லைகள் விலகும். உங்கள் பக்கமுள்ள நியாயம் ஓங்கும். தந்தையாருடன் இருந்த மனக்கசப்புகள் நீங்கும்.



**மிதுனம்**: எதிர்கால முன்னேற்றத்தைக் கருதி சில முயற்சிகளை எடுப்பீர்கள். அந்த முயற்சிகள் யாவும் வெற்றிகளைத் தரும். பயணங்களால் பொருள்சேர்க்கை ஏற்படும். உற்சாகத்துடன் அனைத்து காரியங்களிலும் ஈடுபடுவீர்கள். தந்தையின் ஆதரவும் உண்டு.



**கடகம்**: வழக்கில் வெற்றி அல்லது நீண்ட நாள்களாக இழுபறியில் உள்ள பிரச்சினைகள் முடிவுக்கு வரும். உரிமை, அதிகாரம் கிடைக்கப் பெறுவீர்கள். அயலாருடன் இருக்கும் மனக்கசப்புகள் நீங்கி உற்சாகம் பிறக்கும். கலைத்துறையினருக்கு மிக சிறந்த காலம் இது.



**சிங்கம்**: சுயசார்பும் தன்னிறைவும் பெறுவீர்கள். தைரியம் உண்டாகும். நீண்ட நாள்களாக இருந்து வந்த பிரச்சினை நீங்கும். குடும்பத்தில் சிறு சிறு சிக்கல்கள் வந்து வந்து போகும். பயணம் தொடர்பான தொழில்களில் இலாபம் கிடைக்கும்.



**கன்னி**: துணிச்சலான சில முடிவுகளை எடுப்பதன்மூலம் நன்மைகளைத் தரும் நாளாக அமையும். திடீரென்று அவசர முடிவை எடுக்க வேண்டியிருக்கும். கோபத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் நட்பு, உறவினர்களிடம் சுமுகமான நிலை நீடிக்கும்.



**துலாம்**: தடைப்பட்ட பணவரத்து தடை நீங்கி கைக்கு வந்து சேரும். தொழிலில் இருந்த குழப்பம் நீங்கி தைரியம் உண்டாகும். தந்தை வழியில் இருந்து வந்த பிரச்சினைகள் சரியாகும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட கூடுதல் இலாபம் கிடைக்கப் பெறுவீர்கள்.



**விருச்சிகம்**:அனைத்தையும் திறமையாக சமாளித்து விடுவீர்கள். பூர்வீக சொத்துக்கள் மூலம் கிடைக்க வேண்டியவை இழுபறியாக இருக்கும். வெளிநாட்டுக்கு வேலை, கல்வி தொடர்பாக செல்ல எடுக்கும் முயற்சிகள் சாதகமான பலன் தரும். கடன் பிரச்சினை தீரும்.



**தனுசு**: மனக்குறைகள் நீங்கி மனதில் நம்பிக்கை உண்டாகும். பணவரத்தும் கூடும். கொடுத்த வாக்கை எப்பாடுபட்டாவது காப்பாற்றுவீர்கள். தடைப்பட்ட பணம் கைக்கு வந்து சேரும். எதிலும் தயக்கமோ, பயமோ இல்லாமல் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள்.



**மகரம்**: அவசர முடிவுகளை எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. விரும்பத்தகாத ஆசைகள் உண்டாகலாம். கவனமாக இருப்பது நல்லது. உத்தியோக மாற்றம் உண்டாகலாம். பூர்வீக சொத்துக்கள் மூலம் இலாபம் கிடைக்கும். தர்ம காரியங்களில் நாட்டம் அதிகரிக்கும்.



**கும்பம்**: அடுத்தவர் பிரச்சினைகளில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது. அயலில் இருப் பவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. நினைத்த காரியத்தை சாதிக்க எடுக்கும் முயற்சிகளில் தடை உண்டாகலாம். வெளிநாடு செல்வதில் எதிர்பாராத சிக்கல் ஏற்படலாம்.



**மீனம்**: வருமானம் அதிகரிக்கும். வசதிகள் பெருகும். உறவினர்களுடன் சுமுக நிலை காணப்படும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். நீண்ட நாள்களாக இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் கிடைக்கும்.

## நாளை

**ஆனி-24 செவ்வாய்க்கிழமை | 08.07.2014**

திதி: ஏகாதசி பி.இ.12.50 வரை
நட்சத்திரம்: விசாகம் மு.இ.11.17 வரை
சுபநேரம்: 10.28-11.58 வரை
இராகுகாலம்: 02.58-04.28 வரை
சயன ஏகாதசி விரதம்

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## அவதாரம்

இயேசு கடவுளே – சகுனக் கடவுள்; அவர் மனிதனாக அவதரித்தார். கடவுள் பல தடவை பல்வேறு உருவங்களில் தோன்றியுள்ளார். இவர்க்ளையே நீங்கள் வழிபட முடியும். கடவுளை அவரது தூய மெய்யான இயல்பில் வணங்க முடியாது. அத்தகைய கடவுளை வணங்குவது முட்டாள்தனமே. இயேசுவை, மனித உருக் கொண்ட தெய்வத்தையே நாம் வணங்க வேண்டும். உருவக் கடவுளை விட உயர்ந்த நிலையை நீங்கள் வணங்க முடியாது. இயேசு நாதர் வேறு, கடவுள் வேறு என்றெண்ணி வணங்குவதை விரைவில் விட்டுவிடுகின்ற அளவுக்கு நல்லது. ஜெஹோவாவையும் அழகான இயேசுவையும் நீங்கள் சிலையாகவோ சித்திரமாகவோ உற்பத்தி செய்வதைநினைத்துப்பாருங்கள். இயேசுவை விட உயர்ந்த ஒருகடவுளைநீங்கள் உருவாக்க முயலும்போது, உங்கள் முயற்சிகள் எல்லாம் பாழாகின்றன. கடவுளே கடவுளை வழிபட முடியும். கடவுளை வணங்கும் உரிமையோ தகுதியோ மனிதனுக்கு இல்லை. உருவம் படைத்த தோற்றங்களாக விளங்கும் கடவுள் நிலைக்கு அப்பாற்பட்ட கடவுளை வணங்கும் முயற்சி மனிதகுலத்துக்கே தீமை பயக்கும். உங்களுக்கு முக்தி வேண்டுமானால், இயேசுவுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளுங்கள். ஏனெனில், உங்கள் எண்ணத்தால் எண்ணும் எந்த கடவுளைவிடவும் மிகஉயர்ந்த நிலையில் இருப்பவர் இயேசு. இயேசு ஒரு மனிதர் என்று நினைத்தால், அவரை நீங் கள் வணங்க வேண்டாம், அவர் கடவுள் என்றஉண்மைஉங்களுக்குப் புலப்படும் போது, அவரை நீங்கள்வணங் கலாம். இயேசுவை ஒரு மனிதர் என்று சொல்பவர்கள் அவரைக் கடவுளாக வணங்கினால், அவர்கள் தெய்வ நிந்தனை என்ற குற்றம் புரிந்தவர்கள். அவரை மனிதராகவும் கடவுளாகவும் கொள்வது கூடாது. முழுவதும் மனிதராகக் கொள்ள வேண்டும். அல்லது முழுவதும் கடவுளாகக் கொள்ள வேண்டும். "மகனைப் பார்த்தவர் தந்தையை பார்த்தவரே" என்கிறது பைபிள் மகனைப் பார்க்காமல், தந்தையைக் காண உங்களால் முடியாது. காணலாம் என்பது பொருளற்ற வீண் பேச்சு; குழப்பம் மிகுந்த தெளிவில்லாத் தத்துவம்; பகற்கனவு. ஆன்ம வாழ்க்கையில் உங்களுக்கு ஒரு பற்றுக்கோடு வேண்டுமானால், இயேசுவின் உருவில் விளக்கமுற்று நிற்கும் கடவுளை நன்றாகப் பற்றிக் கொள்ளுங்கள்.

# மலர்ந்தது துர்நாற்றம் வீசும் உலகின் மிகப்பெரிய பூ

பிரான்ஸ் நாட்டில் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் உலகின் மிகப் பெரிய பூ பூத்துள்ளது.

பிரான்ஸின் நாண்டெஸ் நகரிலேயே டைட்டன்ஸ் பெனிஸ் என்ற இந்தப் பூ மலர்ந்து காட்சி தருகிறது.

ஆமார்போபலஸ் டைட்டானியம் என்ற தாவரவியல் பெயருடைய இந்தப் பூ பூத்த 24 - 48 மணி நேரத்தில் தளர்ந்துவிடும். இதனால் பூங்காவில் மக்கள் வரிசையில் நின்று பார்வையிடுகின்றனர்.

உலகின் மிகப்பெரிய பூ எனக் கருதப்படும் டைட்டன்ஸ் பெனிஸ் 3 மீற்றர் அளவுக்கு வளரும். ஆனால் தற்போது நாண்டெஸ் நகரில் உள்ளது 1.6 மீற்றர் அளவில் பூத்துள்ளது.



துர்நாற்றம் வீசும் இந்தப் பூவை இதுவரை 2000 இற்கும் மேற்பட்டோர் பார்வையிட்டுள்ளனர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | | | | | | | 1 |
| | 2 | | 5 | 1 | 9 | | 3 | |
| 1 | | 3 | 4 | | | 8 | | |
| 6 | | | 2 | | | 4 | 8 | |
| | 1 | 9 | | | | 3 | 6 | |
| | 4 | 8 | | | 3 | | | 2 |
| | | 5 | | | 7 | 6 | | 9 |
| | 9 | | 6 | 5 | 8 | | 7 | |
| 7 | | | | | | | 2 | 8 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 3 | 9 | 8 | 1 | 6 | 2 | 5 | 4 |
| 1 | 2 | 8 | 5 | 3 | 4 | 7 | 9 | 6 |
| 4 | 5 | 6 | 7 | 2 | 9 | 1 | 3 | 8 |
| 9 | 6 | 7 | 4 | 5 | 1 | 3 | 8 | 2 |
| 5 | 1 | 3 | 9 | 8 | 2 | 6 | 4 | 7 |
| 2 | 8 | 4 | 3 | 6 | 7 | 9 | 1 | 5 |
| 6 | 9 | 5 | 2 | 4 | 3 | 8 | 7 | 1 |
| 3 | 4 | 2 | 1 | 7 | 8 | 5 | 6 | 9 |
| 8 | 7 | 1 | 6 | 9 | 5 | 4 | 2 | 3 |

# இறுதியாட்டத்துக்கு புதுமடம் வைகறை

யாழ்ப்பாணம், ஜூலை 7

அரியாலை சரஸ்வதி சனசமூகநிலையத்தின் 95 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7மணிக்கு இடம் பெற்ற அரையிறுதி யாட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக அணியை எதிர்த்துப் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணி 6:0 என்ற பழங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (த-23)

# ஆவரங்கால் இந்து இளைஞர் கரப்பந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 7

முதல் முறையாகப் பாக்குநீரிணையை நீந்திக் கடந்த மு.நவரத்தினசாமி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காகத் தொண்டமானாறு வாழ் மக்கள் மின்னொளியில் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.


வெற்றிபெற்ற அணி வீரர்கள்

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. 5 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

தொடர்ந்து இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்துப் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

3 செற்களைக் கொண்ட மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கிக் கொண்டது. (த-23)

# படையினரின் ஏற்பாட்டில் எல்லே போட்டி ஆரம்பம்

வலி.வடக்கு, ஜூலை 7

யாழ்.மாவட்டப் படைகளின் கட்டளைத் தலைமையகத்தின் ஏற்பாட்டிலான ஆண்கள், பெண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டிகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பமாகின.

யாழ்ப்பாண மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமான இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா, யாழ்ப்பாண மாநகர் சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் உட்பட படைகளின் உயர்அதி காரிகள், பாடசாலைகளின் அதிபர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கண்டிய நடனத்துடன் விருந்தினர்கள் மைதானத்துக்கு அழைத்து வரப்பட்டதைத் தொடர்ந்து வீரர்களின் அணி வகுப்பும் இடம்பெற்றது. (த-86)

# கெருடாவில் விவேகானந்தா கரப்பந்தாட்டத்தில் வெற்றி

கரணவாய், ஜூலை 7

தொண்டமானாறு விளையாட்டுக்கழகம் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கெருடாவில் விவேகானந்தா விளையாட் டுக்கழகம் சம்பியனாகியது.

பாக்குநீரிணையை நீந்திக் கடந்த நவரத்தினசாமி ஞாபகார்த்தமாக தொண்டமானாறு விளையாட்டுக் கழகம் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தி வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் இரவு மின்னொளியில் இடம்பெற்ற உள்ளூர் அணிகளுக்கிடையிலான இறுதியாட்டத்தில் தொண்டமானாறு விளையாட்டுக்கழகமும் கெருடாவில் விவேகானந்தா விளையாட் டுக்கழகமும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் 25:19, 25:22, 25:01 என்ற புள்ளிகள் அடிப்படையில் விவேகானந்தா விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. (த-108)

# மன்னார் சென். மேரிஸை வீழ்த்தியது நவஜீவன்ஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 7

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 95 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தும் 'ஏ' பிரிவு அணிகளுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் லீக் முறையிலான ஆட்டங்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் இடம் பெற்றன.

முதலாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மன்னார்சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், ஜூலை 7

தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் றெயின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இன்று திங்கட்கிழமை பி.ப 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நியூட்டன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மாதகல் சென்.தோமஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ற-23)

* * *

யாழ்ப்பாணம், ஜீலை 7

பொற்பதி விளையாட்டுக் கழகம் நடத்தும் சிவகுரு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இன்று திங்கட்கிழமை மாலை 4மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ற-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 7

மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 49 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட அணிகளுக்கு இடையேநடத்தப்படும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இன்று திங்கட்கிழமை மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன.

இரவு 7மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து புத்தூர் தமிழ்மதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக 'பி' அணி மோதவுள்ளது.

இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக ஏ அணியை எதிர்த்து அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ற-23)

# கிளிநொச்சி லீக் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 7

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று கடந்த வியாழக்கிழமை உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து திருகோணமலை உதைபந்தாட்ட லீக் அணி மோதிக் கொண்டது.

இதில் கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# வென்றது நெடியகாடு



யாழ்ப்பாணம், ஜூலை 6

தும்பளை கருணையுள்ளம் விண் மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்கு பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் ரெஜின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணியின் விவரங்கள் வருமாறு;

நெடியகாடு விளையாட்டுக் கழக 'ஏ' அணிக்கும் இளந்தென்றல் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான் ஆட்டத்தில் நெடியகாடு விளையாட்டுக்கழக 'ஏ' அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# தடகளத்தில் அதிகளவானோர் பங்கேற்றதால் ஐந்தாம் இடத்தைப் பெற்றது முல்லைத்தீவு

## வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

கரணவாய், ஜூலை 7

அதிகளவானோர் தடகளப் போட்டிகளில் பங்குபற்றிய தாலேயே இம்முறை முல்லைத்தீவு கல்வி வலயம் வடமாகாணத்தில் ஐந்தாவது இடத்துக்கு முன்னேற முடிந்தது என முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த கால போர் அனர்த்தங்களால் பல்வேறு இடர்களைச் சந்தித்து வளங்கள் அழிக்கப்பட்ட நிலையிலும் எமது மாணவர்கள் தன்னம்பிக்கையுடனும், விடாமுயற்சியுடனும் பயிற்சிகளை மேற்கொண்டு இந்த வெற்றியை எமக்குத் தேடித் தந்துள்ளனர்.

கடந்த முறை வடமாகாண ரீதியாக 8 ஆவது இடத்தில் இருந்த நாம் தற்போது மூன்று இடங்கள் முன்னேறி 5ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளோம்.

தடகள விளையாட்டுக்களில் எமது மாணவர்கள் அதிகளவில் பங்குபற்றியமையும் இந்த வெற்றிக்கான காரணமாகும். வித்தியானந்தாக் கல்லூரி மாணவி யோ.நிதர்சனா 19 வயதுப் பிரிவில் சிறந்த வீராங்கனையாகவும், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ்.விதுர்ஷன் 21 வயதுப்பிரிவில் சிறந்த வீரனாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எமது வலயத்தைச் சேர்ந்த சுமார் 104 மாணவ, மாணவிகள் தேசிய மட்ட தடகளப் போட்டிகள் மற்றும் பெரு விளையாட்டுக்கள் என்பவற்றில் பங்குபற்றுவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**தடகள விளையாட்டுக்களில் எமது மாணவர்கள் அதிகளவில் பங்குபற்றியமையும் இந்த வெற்றிக்கான காரணமாகும்.**

அவர்கள் தேசிய மட்டப் போட்டிகளிலும் சிறந்த சாதனைகளைப் படைத்து எமது வலயத்துக்கும் மாகாணத்துக்கும் பெருமை சேர்ப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

இம்முறை தடகளப் போட்டிகளில் எமக்கு அதிக இடங்கள் கிடைத்தபோதும் பெரு விளையாட்டுக்களில் அதிக இடங்கள் கிடைக்கவில்லை. எதிர்காலத்தில் அவற்றிலும் கூடிய கவனம் செலுத்தி மாணவர்களுக்கு வேண்டிய பயிற்சிகளை வழங்கி மாகாண ரீதியில் அடுத்தடுத்த நிலைகளுக்கு முன்னேறுவோம்- என்றார். (த-108)

# முதலிடம் பிடிப்போம்




சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தரப்படுத்தலில் முதலாம் நிலையயை அடைவதை மனதில் நிறுத்தியே நாங்கள் போட்டிகளில் விளையாடி வருகின்றோம். அந்த இலக்கை அடையும் பொருட்டு சரியான வழிகளைப் பின்பற்றி சிறந்த நுட்பங்களைப் பயன்படுத்தி ஒவ்வொரு போட்டியாக எதிர்கொண்டு வருகின்றோம். இங்கிலாந்தில் கடும் சவால்களுக்கு மத்தியில் வெற்றியீட்டினோம். இது ஒரு மகத்தான ஆற்றல் வெளிப்பாடாகும் என இலங்கை அணித் தலைவர் ஏஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையில் நடைபெறவுள்ள றோயல் ஸ்டெக் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடரை முன்னிட்டு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்த வருடம் இதுவரை இல்ங்கை அணி சகல துறைகளிலும் பிரகாசித்து மூவகை கிரிக்கெட் தொடர்களிலும் வெற்றிநடைபோட்டு வருகின்றது. இதனைத் தொடரவேண்டும் என்பதில் வீரர்கள் அனைவரும் திடமனதுடன் உள்ளனர். தென்னாபிரிக்க அணியினரைப் பொறுத்த மட்டில் அவர்கள் திறமையாக விளையாடக் கூடியவர்கள். எனவே அவர்களிடமிருந்து சவால் எழும் என எதிர்பார்க்கின்றோம் என அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, 'கடந்த காலங்களில் நாங்கள் திறமையாக விளையாடவில்லை. பொதுவாக இலங்கையை அதன் சொந்த மண்ணில் வெற்றி கொள்வதென்பது கடினமானது. எனினும் நடப்பு கிரிக்கெட் தொடரில் திறமையை வெளிப்படுத்த உறுதி பூண்டுள்ளோம் என தென்னாபிரிக்காவின் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் அணித் தலைவர் ஏ.பி. டி வில்லியர்ஸ் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, 'நாங்கள் தொழில்சார் கிரிக்கெட் துறை சார்ந்தவர்கள் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். இங்கிலாந்தில் நம்பிக்கையுடனும் மன உறுதியுடனும் விளையாடினோம். வீரர்கள் மத்தியில் நிலவும் போராடும் குணம் தொடரப்படவேண்டும். அடுத்து வரும் போட்டிகளை ஒவ்வொன்றாக கவனத்தில் கொள்ளவேண்டும். கிரிக்கெட் போட்டிகளில் வெளிப்படுத்தி வரும் திறமைகளை தொடர்ந்து நிலைநிறுத்திக்கொள்வது அவசியம்.

இதனை உலகக் கிண்ணப் போட்டிகள் வரை முன்கொண்டு செல்லவேண்டும் என இலங்கை அணியின் பயிற்றுநர் மார்வன் அத்தப்பத்து தெரிவித்தார்.

இந்த நிதழ்வின்போது தென்னாபிரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான தொடரில் வெற்றி அணிக்கு வழங்கப்படவுள்ள அழகிய வெற்றிக் கிண்ணமும் இலங்கை அணியின் புதிய சீருடையும் அறிமுகப்படுத்தப்பட்டது. (தி)


நெய்மார்

# நெய்மருக்கு முதுகில் அடி

பிரேஸில் அணியின் நட்சத்திர வீரர் நெய்மர் முதுகில் ஏற்பட்ட காயம் காரணமாக அணியில் இருந்து விலகியுள்ளார்.

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில், காலிறுதிப் போட்டியில் கொலம்பியா அணியை 2:1 என்ற கோல் கணக்கில் பிரேஸில் அணி வீழ்த்தி அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது. பிரேஸில் அணியின் நட்சத்திர வீரர் நெய்மர் கொலம்பியா அணிக்கு எதிரான ஆட்டத்தின் இறுதி நேரத்தில் முதுகெலும்புப் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாகப் போட்டியிலிருந்து விலகியுள்ளார்.

ஆட்டம் முடிய சில நிமிடங்கள் இருந்தபோது கொலம்பிய வீரர் ஜியன் ஜூனை சாவால் நெய்மர் காயம் அடைந்தார். தலையை பிடித்து தள்ளி விட்டதால் தலைகுப்புற கீழே விழுந்தார். இதனால் அவருக்கு முதுகுப்பகுதியில் காயம் ஏற்பட்டது.

உடனடியாக ஸ்ரெச்சர் மூலம் மைதானத்தில் இருந்து அவர் கொண்டு செல்லப்பட்டார். மருத்துவ பரிசோதனையில் நெய்மருக்கு முதுகெலும்பில் இலேசான முறிவு ஏற்பட்டு இருப்பது தெரிய வந்தது.

அவர் தேறி வருவதற்கு இன்னும் சில வாரங்கள் செல்லும் என்பதால் ஜேர்மனிக்கு எதிரான அரையிறுதி ஆட்டத்தில் பங்கேற்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. நெய்மர் காயம் காரணமாக விலகியுள்ளது பிரேஸில் அணிக்கு பின்னடைவாகக் கருதப்படுகிறது. (த)

# கெவின் பீற்றர்சனின் ஆசை நிறைவேறுமா?


கெவின் பீற்றர்சன்

இங்கிலாந்து அணியில் மீண்டும் விளையாட ஆசையாக உள்ளது என்று கெவின் பீற்றர்சன் தனது டுவிட்டர் பக்கத்தில் கூறியுள்ளார். இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் கெவின் பீற்றர்சன் (34). இதுவரை 104 டெஸ்ட் (8181 ஓட்டங்கள்), 136 ஒரு நாள் (4440), 37 டுவெண்டி20 (1176) போட்டியில் விளையாடி உள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் தொடரில் பங்கேற்ற இங்கிலாந்து அணி 05 என இழந்தது. இதன் எதிரொலியாக, அணியிலிருந்து பீற்றர்சன் ஓரங்கட்டப்பட, இவராகவே ஓய்வை அறிவித்தார். லோர்ட்ஸில் நடக்கும் மெரில்போர்ன் கிரிக்கெட் அணிக்கு எதிரான கண்காட்சி போட்டியில் வோர்ன் தலைமையில் ரெஸ்ட் ஆப் இந்தியா சார்பில் பங்கேற்கவுள்ளார்.

இது குறித்து பீற்றர்சன் டுவிட்டரில், லோர்ட்ஸ் உடை மாற்றும் அறையில் எனக்கு இடம் இருப்பதை நினைக்கும் போது, ஆச்சரியமாக இருக்கிறது. பல ரசிகர்கள் முன்னிலையில், லோர்ட்ஸில் விளையாடும் வாய்ப்பு மீண்டும் கிடைக்கும் என எதிர்பார்க்கவில்லை என்றும் இங்கிலாந்து அணியில் மீண்டும் விளையாட விரும்புகிறேன், ஆனால் இதற்கு காலம்தான் பதில் சொல்லும் என்றும் தெரிவித்துள்ளார். (த)

# டெஸ்டுக்கு முக்கியத்துவம்

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை வெளியிட்டுள்ள 2015-2023 இற்கான எதிர்கால சுற்றுப் பயணத் திட்டங்களில் டெஸ்ட் போட்டிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளன.

இந்தக் காலப்பகுதியில் இங்கிலாந்துக்கு எதிராக 20 டெஸ்ட் போட்டிகளும், ஆஸ்திரேலியாவுக்கெதிராக 16 டெஸ்ட் போட்டி களும் தென்னாபிரிக்காவுக்கெதிராக 12 டெஸ்ட் போட்டிகளும் விளையாட இருதரப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளது.

வெளியிடப்பட்டுள்ள திட்டத்தின்படி குறிப்பிட்ட காலப்பகுதியில் இங்கிலாந்துக்கெதிராக 5 போட்டிகளைக் கொண்ட 4 டெஸ்ட் தொடர்களிலும், ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 4 போட்டிகள் கொண்ட 4 டெஸ்ட் தொடர்களிலும் தென்னாபிரிக்காவுக்கு எதிராக 3 டெஸ்ட் தொடர்களிலும் இலங்கை மற்றும் நியூஸிலாந்துக்கு எதிராக தலா இரண்டு டெஸ்ட் தொடர்களிலும் விளையாடத் தீர்மானித்துள்ளது.

அத்துடன் அரசின் அனுமதி கிடைக்கப்பெறின் பாகிஸ்தானுக்கெதிராக 6 டெஸ்ட் தொடர்களிலும் விளையாடியுள்ளது. (த)

# இன்ஷமாம் ஆதரவு

2015 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா - நியூஸிலாந்தில் நடக்கவுள்ள உலகக் கிண்ணப் போட்டி வரை மிஸ்பா உல்ஹக்கின் தலைமைப் பதவி நீடிப்புச் செய்தமைக்கு இன்ஷமாம் ஆதரவு தெரிவித்துள்ளார். 2015 இல் நடைபெறவுள்ள உலகக் கிண்ண போட்டிவரை மிஸ்பாவே அணித் தலைவர், என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்தது.


இன்ஷமாம்

இது தொடர்பாக அந்த அணியின் முன்னாள் வீரர் இன்ஷமாம் கருத்துத் தெரிவிக்கையில்:

வோகரை பயிற்சியாளர் பதவிக்கு மீள நியமித்தமையும், மிஸ்பாவை அணித் தலைமையில் நீடிப்புச் செய்தமையும் மிகவும் தெளிவான முடிவே. மிஸ்பா துடுப்பாட்ட வீரராகவும், அணித் தலைவராகவும் சிறப்பாகவே செயற்பட்டு வருகின்றார்.

அணியை பல சிக்கலான நிலைமைகளிலிருந்து மீட்டெடுத்தவர் என்றார்.

அத்துடன் வோகர் கடந்த [illegible]ங்களில் மிகச் [illegible] பணியை ஆற்றியதாகவும் இனி வரும் காலத்திலும் சிறப்பாகச் செயற்படுவார் என்றும் மிஸ்பா மற்றும் வோகரின் கூட்டு முயற்சியால் உலகக் கிண்ணப் போட்டியில் பாகிஸ்தான் சிறப்பாகச் செயற்படும் என்றும் கூறினார். (த)

# ஆவ. இந்து இளைஞர், நவஜீவன்ஸ் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன

யாழ்ப்பாணம், ஜூலை 7

அரியாலை சரஸ்வதி சன சமூக நிலையத்தின் 95 ஆவது ஆண்டு நிறைவை முன் னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தப்படும் 'ஏ' பிரிவு அணி களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் அரையிறு தியாட்டங்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றன.

முதலாவது அரையிறு தியாட்டத்தில் மன்னார் சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதியது.

5 செற்களைக் கொண்ட ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

இரண்டாவது அரையிறு தியாட்டத்தில் உடுப்பிட்டி நவ ஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது.

5 செற்களைக் கொண்ட அரையிறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது. (ற-23)



## தாச்சிப் போட்டி 20ஆம் திகதி



யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே வருடாந்தம் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டி எதிர் வரும் 20ஆம், 21 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது என யாழ் மாவட்ட தாச்சிச் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (ற-23)





## யாழ்ப்பாணம் சரவணை தேவபுரம்
# அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில்
## நூதன திரிதள பஞ்ச குண்ட பக்ஷ இராஜகோபுரம்
# மஹா கும்பாபிஷேகப் பெருவிழா (09.07.2014)

**காலம் - ஆனி மாதம்**
**25 ஆம் நாள் (09.07.2014)**
**புதன்கிழமை**




**நேரம்**
**காலை**
**05.57 மணி - 09.57 மணி**

கதிர்வேலவன், அடியார்களே !

இலங்கையின் வடபால் யாழ். குடாநாட்டின் மேற்கே நயினை ஸ்ரீ நாகபூசணி நாயகியை தன்னகத்தே கொண்ட சப்த தீவுகளின் இதயமாய் விளங்கும் வேலணைத் தீவின் நடு நாயகமாக முருகனின் நாமத்தையே பூண்ட சரவணை கிராமத்தின் மத்தியிலே தேவபுரம் பதிதனில் வீற்றிருந்து அருள்பாலித்து வினை தீர்க்கும் கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் கதை பேசும் சுவைகளும் சுமைதாங்கும் கணங்களும் கலை மிளிரும் தெய்வீகச் சிலைகளும் இணைந்த நூதன திரிதள இராஜகோபுர மஹா கும்பாபிஷேகப் பெருவிழா மங்களம் மிகு ஜெய வருசம் ஆனித்திங்கள் 25 ஆம் நாள் (09.07.2014) புதன்கிழமை காலை 8.57 மணிமுதல் 9.57 மணி வரையுள்ள சிம்ம லக்கின சுப முகூர்த்தத்தில் நடைபெற கதிர்வேலவனின் திருவருள் கைகூடி இருப்பதால் அடியார்கள் இக் கோபுர மகா கும்பாபிஷேகத்தில் கலந்து தரிசித்து " கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" சேர, இகபர சுகங்கள் பெற்று இன்புற்று வாழ்வீர்களாக

### கிரியா கால நிகழ்வுகள்

ஆனி மாதம் 23 ஆம் நாள் (07.07.2014)
மாலை 06.00 மணிக்கு
கணபதி வழிபாடு அனுஞ்ஞை, கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், வாஸ்த்து சாந்தி, மிருத்சங்கரணம், அக்சை சமர்ப்பணம், ரட்சாபந்தனம், கடஸ்தாபனம், யாகபூசை, பஞ்சாக்கினிவிபசரணம்

ஆனி மாதம் 24 ஆம் நாள் (08.07.2014) செவ்வாய்க்கிழமை
காலை 07 மணிக்கு
மகா கணபதி பூஜை, விசேட சாந்தி,அந்தர் யாகம், ஜாகப் பிரவேசம், யாக பூஜை, விசேட திரவிய ஹோமம்,வேத தோத்திர பாராயணம்.
மாலை
சக்தி கணபதி பூஜை, யாகபூஜை, சகஸ்த்திர நாம ஆகுதி, வேத தோத்திரம், திராவிட பாராயணம்.

ஆனி மாதம் 25 ஆம் நாள் (09.07.2014) புதன்கிழமை
காலை 06 மணிக்கு லக்சுமி கணபதி வழிபாடு.மகா பூர்ணாகுதி, தீபாராதனை, வேத தோத்திரம், ஆசீர்வசனம்,ராகதாள சமர்ப்பணம், திராவிட பாராயணம், அத்தர் பலி, பதிர் பலி, தாநாதிகள், வேத கோச மங்கள வாத்தியம் சகிதம் உற்சவ மூர்த்தி சகிதம் கும்பப் பிரதட்சணம்,மூலவர் அபிஷேகம் இராசகோபுர மஹா அபிஷேகம்
காலை 08.57 - 09.57 வரை உள்ள துவாதசி திதியும் அமிர்த சித்த யோகமும் அனுஷ நட்சத்திரமும் கூடிய சுபவேளையில் நடைபெறும்.

### குருமார் விவரம்

சர்வசாதகம்
வேதாகம பூஷணம்
பிரம்ம ஸ்ரீ சநாதனசர்மா
சாவகச்சேரி

பிரதிஸ்டா பிரதமகுரு
வாமதேவ சிவாச்சாரியார் ஆஞ்சநேயர் உபாசகர்
சிவஸ்ரீ இரத்தினசுந்தரேஸ்வரக் குருக்கள்
மருதனார்மடம்

ஆலய குரு
சிவஸ்ரீ. சிவநேசசர்மா

மூர்த்திபான குருமார்கள்
யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த
சிவாச்சாரியார் பெருமக்கள்
கலந்து சிறப்பிப்பார்கள்

அருளுரை
ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர
பரமாச்சாரிய சுவாமிகள்
நல்லை ஆதீனம்

கோபுர நிரமாணம்
சிற்பாசாரியார் கோபாலசிங்கம்
குழுவினர் (அராலியூர்)

**நண்பகல் 12 மகேஸ்வர பூஜை அன்னதானம்**

ஆலய பரிபாலனசபை சரவணை

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

இங்ஙனம்: உபயகாரர்
**சோமசுந்தரம் சரஸ்வதி குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### வ.கி.சுப்பிரமணியம்
(ஓய்வுபெற்ற லிகிதர்)

ஆஸ்பத்திரி வீதி, மூளாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வயிறு கிருஷ்ணர் சுப்பிரமணியம் நேற்று (06.07.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வயிறு கிருஷ்ணர்-பறுவதம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், தையல்முத்து, மீனாட்சி, காலஞ்சென்றவர்களான மகாலட்சுமி, வள்ளியம்மை, தெய்வானை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கோமளவல்லி, சியாமளா ரவீந்திரன், மகேந்திரன் மற்றும் வனமளா ஆகியோரின் அன்பு தந்தையும், காலஞ்சென்ற தவச்செல்வராசா மற்றும் நிர்மலாதேவி (கனடா), நாகராசா ஆகியோரின் மாமனாரும், ஹெல்முட், லாவண்யா, பிரசன்னா, நிர்மல்(கனடா), கோபிகா, தனராஜ், காலஞ்சென்ற தர்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும், அனீசா, அனீசன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மூளாயிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (07.07.2014) திங்கட்கிழமை மு.ப.10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய்பித்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி, மூளாய்.

தகவல்: சோ.நாகராசா
(மருமகன்) 077 185 3571

(49665) (4.6.3)

## மரண அறிவித்தல்



### கந்தையா சந்திரசேகரம்

விழிசிட்டி தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் பாலவோடை, உடுவில் தெற்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சந்திரசேகரம் நேற்று (06.07.2014) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - நவமணி தம்பதியரின் மருமகனும், குஞ்சுராணியின் அன்புக் கணவரும், முகுந்தன் (ஏ.பவர்.அன். கம்பனி), சத்தியவாணி (கனடா), குகஜீவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரஜீவி (கனடா), யின் பாசமிகு மாமனாரும், சோமஸ்கந்தமூர்த்தி (லண்டன்) அவர்களின் சகோதரனும், திலகராணி, ஸ்ரீகாந்தசெல்வம், யோகராணி, ஜெயராணி, இன்பதேவி, ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற தெய்வேந்திரராசா, பரமேஸ்வரன், தேவராசா, இராஜேஸ்வரி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.07.2014) திங்கட்கிழமை 11 மணியளிவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில் தெற்கு,
பாலவோடை

தகவல்:குடும்பத்தினர்.
077 2920163

### மஹா கும்பாபிஷேகம்

வட்டுக்கோட்டை, ஜூலை 7

வட்டுக்கோட்டை மேற்கு அருள் மிகு செந்தில் முருகையா ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் 9 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.38 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு நாளை 8 ஆம் திகதி இடம்பெறும்.

சிவஸ்ரீ ச.மு.பாஸ்கரக் குருக்கள், பிரம்மஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள், பிரம்மஸ்ரீ கு.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆகியோர் ஏனைய சிவாச்சாரியார்களின் உதவியுடன் கும்பாபிஷேக கிரியைகளை நடத்தி வைப்பார்கள். (க)

# சட்டவிரோத மாடு வெட்டுதலுக்கு கணேசபுரம் மக்கள் கடும் எதிர்ப்பு

கிளிநொச்சி, ஜூலை 7

கிளிநொச்சி கணேசபுரம் பகுதியில் சட்டவிரோதமாக மாடுகள் வெட்டப்படுவதால் சுற்றுச் சூழல் அசுத்தமடைவதுடன் சுவாச நோய்கள் ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கணேசபுரம் பகுதி மக்கள் கூறுகையில்-

கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன் வீதியில் கணேசபுரம் கண்ணகி அம்மன் ஆலயத்துக்குப் பின் வயலில் வைத்தே மாடுகள் அறுக்கப்படுகின்றன.

சட்டவிரோதமாக இரவு வேளைகளில் மாடுகளை அறுத்துவிட்டுக் கழிவுகளை வயலுக்குள் வீசிவிட்டுச் செல்கிறார்கள். இதனால் குறித்த பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசுவதுடன் காகங்கள் கூட்டமாக வருவதும் நாய்கள் அவ்விடத்திலுள்ள மாட்டின் கழிவுகளை இழுத்துச் செல்வதும் வழக்கமாகியுள்ளது.

இதனால் கணேசபுரம் பகுதியில் உள்ள கர்ப்பிணித் தாய்மார், சிறுவர்கள் சுவாச நோய்களுக்கு உள்ளாகும் நிலையும் உருவாகியுள்ளது.

கண்ணகி அம்மன் ஆலயச் சூழலையும் கவனத்தில் கொள்ளாது இவ்வாறு இறைச்சிக்காக மாடு அறுப்பது கவலைக்குரிய விடயமாகும். உரிய தரப்பினர் இதனைக் கவனத்தில் கொண்டு உடனடியாகத் தடைசெய்வதுடன் கணேசபுரம் மற்றும் கண்ணகி அம்மன் ஆலயச் சுற்றாடலைச் சுகாதாரமான முறையில் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் - என்றனர். (த-10)

## நெஞ்சக் கதவைக் கொஞ்சம்........

### குறைத்து மதிப்பிடப்படுகின்றதா?

தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்து அறுப்பது சாதனையல்ல, திருடிய மோட்டார் சைக்கிளில் வந்து அறுப்பது தான் சாதனை. நகைக்கடையில் நகைகள் வாங்குவது சாதனையல்ல, கொள்ளையடித்த நகைகளை வாங்குவது தான் சாதனை. சத்திர சிகிச்சைக்கு உட்படுபவருக்கு ஏழுவருட எப்ஆர்சிஏ படிப்பு மயக்க மருந்து கொடுப்பது சாதனையல்ல, திருடுவதற்காக வீட்டுக்காரருக்கு மயக்க மருந்து கொடுப்பது தான் சாதனை. இளைஞர்களுக்கு ஒரு தொகை நிதி வழங்கி சுய தொழிலுக்கு வழிகாட்டுவத் சாதனையல்ல, கோடியாக நிதியைக் கொட்டி, இருக்கும் இளைஞர்களையும் கஞ்சாப்புகையில் சஞ்சரிக்க வைத்து கோதாக வழிகாட்டுவதுதான் சாதனை.

பிரேதத்திலிருந்த சங்கிலியைத் திருடும்போது ஆவி, தீட்டு என்று பயப்படாதவர் பொலிஸ் நாய் வருகிறது என்றதும்தான் பணிந்தார். வர்த்தக நிறுவனத்தில் வெள்ளிக்கிழமைகளில் தர்மம் வாங்கும்போது ஊதுபத்தி புகைந்து கொண்டிருந்த மேசையிலிருந்ததையும் சேர்த்து வழிக்கும்போது தெய்வத்துக்குப் பயப்படாதவர் கண்காணிப்புக் கமரா காட்டியபோதுதான் பணிந்தார். ஆனாலும் பொலிஸ் நாய்க்கும் கண்காணிப்புக் கமராவுக்கும் தண்ணி காட்டுபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். தலையைச் சுவரில் இடித்துக் கொள்வதைத் தவிர இதற்கு வேறு வழி...

"குடாநாட்டில் குற்றங்கள் தொடர்கின்றன; பொலிஸாரின் நடவடிக்கையில் திருப்தியில்லை; பொது மக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகவுள்ளது" என்று மக்கள் ஆலோசனைக் குழுக்கள் தெரிவித்துள்ள நிலையில்; 'விழித்திருக்க விழி தோண்டுபவர்' மலிந்த சமூகத்தில், வல்லவர்களுக்கு வல்லவர்களாக வலம் வர வேண்டியவர்களது வல்லமை சமூகத்தில் குறைந்து மதிப்பிடப்பட்டுக் கொண்டிருக்கிறது. குற்றவாளிகளின் அதிகரிப்பும் குற்றச் செயல்களின் வியாபகமும் சமூக அமைதியைத் தூரத்தள்ளிவிடும்.

செல்வவேலாயுதம்


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்: 16.12.1931

மறைவு : 08.06.2014



கடந்த 08.06.2014 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

**அமரர் தங்கமணி இராசையா**

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (07.07.2014) திங்கட்கிழமை

மு.ப.10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(49494)(12.3.6)

குடும்பத்தினர்.
0212225196


# தங்கம்மா அப்பாக்குட்டியின் ஆறாவது ஆண்டு குருபூசை

தெல்லிப்பழை, ஜூலை 7

முன்னாள் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரான கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் ஆறாவது குருபூசை தினம் நாளை செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

காலை 9 மணியிலிருந்து 9.20 மணிவரை ஆலயத்தில் விசேட பூசை, அன்னாரின் நினைவாலயத்தில் வழிபாடு, உருவச்சிலை வழிபாடு என்பன இடம்பெறும்.

தொடர்ந்து அன்னபூரணி மண்டபத்தில் சிறப்பு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். வரவேற்புரையைத் தொடர்ந்து பிரார்த்தனை உரைகளை சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் நிகழ்த்துவார்கள்.

முற்பகல் 10.30 மணியளவில் தலைமையுரையைத் தொடர்ந்து மூத்த சிவாச்சாரியார்களைக் கௌரவிக்கும் நிகழ்வும், பதினோராம் திருமுறை வெளியீடும் இடம்பெறும். வெளியீட்டுரையை பேராசிரியர் தி.வேல்நம்பி நிகழ்த்துவார். நண்பகல் 12 மணியளவில் அன்னதானம் இடம்பெறும். (க)

## சாவகச்சேரியில் ஸ்கான் கிளினிக்

தென்மராட்சி, ஜூலை 7

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் ஸ்கான் கிளினிக் இன்று திங்கட்கிழமை நடைபெறும்.

யாழ்.போதனா மருத்துவமனை ஸ்கானிங் சிகிச்சை நிபுணர் வருகை தரவுள்ளதால் நோயாளர்களை வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

# செயலமர்வு

தென்மராட்சி, ஜூலை 7

தென்மராட்சி பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கான 'உளநலத்தின் முக்கியத்துவம்' தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு இன்று காலை 9 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

சமூக சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள செயலமர்வில் பிரதேச பொது அமைப்புகளின் பிரதிநிதிகளை - தலா ஐந்து பேரை கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

# பக்தர்கள் நலன் கருதி சந்நிதி ஆலய வீதி திருத்தம்

கரணவாய், ஜூலை 7

சந்நிதி முருகன் பெருந்திருவிழா ஆரம்பமாகவுள்ள நிலையில், பக்தர்களின் நலன் கருதி உடுப்பிட்டி - சந்நிதி வீதி தார் இட்டு செப்பனிடப்பட்டுள்ளது.

செல்வச்சந்நிதி முருகன் ஆலய பெருந்திருவிழா இந்த மாதம் 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பெருமளவானோர் வருகை தரவுள்ளனர்.

செல்வச்சந்நிதி ஆலயத்துக்குச் செல்லும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான உடுப்பிட்டி வீதி செப்பனிடப்படாது குன்றும் குழியுமாகவும், மேடு பள்ளமாகவும் காணப்பட்டது. இதனால் ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

அது மட்டுமல்லாது ஆலயத் திருவிழா ஆரம்பமானால் இந்த வீதி வழியாகப் பல பக்தர்கள் அங்கப் பிரதிஷ்டையிலும் ஈடுபடுவர். இதனால் அவர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்க்கும் முகமாக இந்த வீதி செப்பனிடப்பட்டுள்ளது. (வ-108)


## மரண அறிவித்தல்

### சிதம்பரம் கந்தசாமி (ஐயா)

(ஓய்வுபெற்ற ஊழியர், புகையிரதத் திணைக்களம்)



பராசக்தி வீதி, மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் உடுவில் வடக்கு செபமாலை மாதவீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரம் கந்தசாமி 06.07.2014 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரம்- நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லப்பிள்ளை-சின்னம்மா தம்பதிகளின் மருமகனும், பூரணத்தின் அன்புக்கணவரும், சின்னம்மாவின் (செல்லம்) அன்புச் சகோதரனும், சிவதர்சினி, சிவதர்சன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் சிவனேசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2014) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

செபமாலை மாதா வீதி,
உடுவில்.

(49662)
(4.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.


## கிராம அலுவலர்கள் நியமனம்

வரணி, ஜூலை 7

வரணிப் பிரதேசத்தின் மூன்று கிராம அலுவலர் பிரிவுகளுக்கு அண்மையில் புதிதாக நியமனம் பெற்ற அலுவலர்கள் கடந்த 11ஆம் திகதி தொடக்கம் தென்மராட்சி பிரதேச செயலகத்தால் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் பிரகாரம் மாசேரி கிராம அலுவலர் பிரிவுக்கு எஸ். அகல்யாவும், இடைக்குறிச்சி கிராம அலுவலர் பிரிவுக்கு என்.விஜிதாவும், வரணி இயற்றாலை கிராம அலுவலர் பிரிவுக்கு ஆர்.ஜெய்சப்திகாவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதே சமயம் வரணி வடக்கு கிராம அலுவலர் பிரிவு தொடர்ந்தும் வெற்றிடமாக உள்ளதுடன் அங்கு பதில் கடமை ஆற்றுவதற்கு ஏ.பிரதீபன் நியமிக்கப்பட்டுள்ளார். (க-122)


## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியம் இராசா



சிறுப்பிட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் இராசா நேற்று (06.07.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா இராசாவின் (இளைப்பாறிய உதவிப்பொலிஸ் அத்தியட்சகர்) அன்பு மனைவியும், சத்தியசீலன் (கனடா), சத்தியதேவி (ஜேர்மனி), சத்தியரஞ்சனா, கலாவதனி, இரஞ்சிதகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், மேனகா (கனடா), முருகையா (ஜேர்மனி), ஜெயபாலன் (சமுர்த்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், துரைராஜா, இராசதுரை, செல்வராசா, செல்லத்துரை, நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அட்ஷயா, அபிரா, சிந்துஜன், தர்ஷகா, நிரோஜன், துளசிகன், டபோதினி, துளசிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2014) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் சிறுப்பிட்டி மேற்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கிந்துசிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

(49663)(7.6.3)

தகவல்: பிள்ளைகள்
தொ.பே: 021 491 8873
077 935 2735



## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

அமரர்

### தம்பன் பாலச்சந்திரன்

[பாலன்]

(காத்தவராயன் நாடகத்தில் சிவபெருமான் பாத்திரமேற்று நடித்த பிரபல கலைஞர்)



பிறப்பு
01.08.1955

இறப்பு
08.04.2014

கடந்த 08.04.2014 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (07.07.2014) திங்கட்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து இடம்பெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இராஜ கிராமம்,
காவெட்டி மேற்கு,
காவெட்டி. (45592)(7.6.3)

குடும்பத்தினர்

## பெண்கள் விடுதியில் தீ விபத்து

செங்கலடி, ஜூலை 7

மட்டக்களப்பு செங்கலடி சித்தாண்டி பகுதியிலுள்ள பெண்கள் விடுதியில் தீ பரவியுள்ளது.

வாயு சிலிண்டர் வெடித்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. தீயால் இரண்டு மாடிக் கட்டடம் முழுமையாக சேதம் அடைந்துள்ளது. எனினும் உயிர்சேதங்கள் எதுவும் இடம்பெறவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. தீ பரவிய போது விடுதியில் சுமார் 33 பெண்கள் இருந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. (ற)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**உயர் திரு. துரைசிங்கம் யோகராசா J.P**

Train - Agri S.L.P.S

அதிபர்

மு/தேராவில் தமிழ் வித்தியாலயம், விசுவமடு



பண்பும் ஆற்றலுமுடைய எங்கள் பள்ளி முதல்வர் திரு. து.யோகராசா அவர்கள் 2014.07.01 அன்று முல்லை மாவட்ட நீதிபதி திரு. மாணிக்கராசா கணேசராசா அவர்களின் முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்
மு/ தேராவில் தமிழ் வித்தியாலயம்

## மரண அறிவித்தல்



**திருமதி இராசையா லீலாவதி**

'ஸ்ரீமகால்' வதிரி, கரவெட்டியைச் சேர்ந்த திருமதி இராசையா லீலாவதி அவர்கள் நேற்று (06.07.2014) ஞாயிற்றுகிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆ.வ. மாணிக்கம் - ஆசைப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற வ.க. இராசையா ஆசிரியரின் அன்பு மனைவியும், இ. சதீஸ்வரன் (கனடா), திருமதி கலைவாணி ஜெயகாந்தன், இ. இந்திரபாலா (முதுவரி உத்தியோகத்தர்), இ. கௌரிபாலா (லண்டன்), இ. மயூரபாலா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், திருமதி சதீஸ்வரன் சுஜாதா, பே.ஜெயகாந்தன் (ஆசிரியர்), திருமதி இந்திரபாலா சுதர்சினி ஆகியோரின் பிரியமான மாமியாரும் மா. கெங்காதரன், மா.பாலேந்திரன் (ஆசிரியர்), மா. ஸ்ரீஸ்கந்தராசா (கனடா), திருமதி பூமணி தங்கவேல் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சாய்சுந்தரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2014) திங்கட்கிழமை மதியம் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்தில் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

ஸ்ரீமகால்
வதிரி

தகவல்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 02 - 11 - 1943 | 07 - 06 - 2014 |



**அமரர் நாகலிங்கம் பொன்னுத்துரை**

பண்பாலும் பாசத்தாலும் எமை அரவணைத்து
எம் உயர்வுக்கு உறுதுணையாய் நின்ற தெய்வமே !
தினங்கள் முப்பத்தொன்று சென்றதப்பா – என்றும்
உங்கள் நினைவோடு நாங்கள் இருப்போம் அப்பா....

அன்னாரின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி இன்று (07.07.2014) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் நாவலர் வீதியில் அமைந்துள்ள சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

35/8, சிவகுருநாதர் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
021 2226759

குடும்பத்தினர்.

## வறிய குடும்பங்களுக்கு ஐம்பது புதிய கிணறுகள்



அமைக்கப்படும் கிணறுகள்

மட்டக்களப்பு, ஜூலை 7


தெரிவு செய்யப்பட்ட வறிய குடும்பங்களுக்கு ஐம்பது கிணறுகளை அமைத்துக் கொடுக்கும் பணிகள் ஏறாவூ ரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஹிரா பவுண்டேசன் நிறுவனத்தினூடாக இந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்று தாஜுல் மில்லத் ஹிஸ் புல்லாஹ் மன்றத்தின் தலைவர் எம்.எஸ். றவுப் தெரிவித்துள்ளார்.

ஏறாவூர் நகர பிரதேச செய லாளர் பிரிவிலுள்ள சதாம் ஹூஸைன், ஸம்ஸம், ஐயன் கேணி, மிச் நகர ஆகிய கிராமங்களிலும், செங்கலடிப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஆறுமுகத்தான் குடியிருப்பு, மைலம்பாவெளி உள்ளிட்ட கிராமங்களிலும் இந்தக் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை காலமும் தமது வீட்டில் கிணறுகளை அமைத்துக் கொள்ள பொருளாதார வசதியில்லாதிருந்த தமிழ், முஸ்லிம் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு இந்தக் கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன. (ற)

## மண்முனை முத்துமாரி திருச்சடங்கு உற்சவம்



முத்துமாரியம்மன் ஆலயத்தின் தோற்றம்

மட்டக்களப்பு, ஜூலை 7

மட்டக்களப்பு, மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்திற்குட்பட்ட கோட்டைக்கல்லாறு அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த திருச்சடங்கு உற்சவம், இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 12 ஆம் திகதி கும்பம் சொரிதலுடன் நிறைவு பெறவுள்ளது என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

இன்று இரவு 9 மணிக்கு அம்பாள், ஆலய திருக்கதவு திறத்தலும், நள்ளிரவு 12 பூரண கும்பம் நிறுத்துதலும் நடைபெறவுள்ளன. நாளை நான்காம் வட்டார மக்களின் ஆதரவிலான திருச்சடங்கும், நாளை மறுதினம் ஐந்தாம் வட்டார மக்களின் திருச் சடங்கும், 8 ஆம் திகதி முத லாம் வட்டார மக்களின் திருச் சடங்கும், 9 ஆம் திகதி இரண்டாம் வட்டார மக்களின் ஆதரவிலான திருச்சடங்கும், 10 ஆம் திகதி மூன்றாம் வட்டார மக்களின் ஆதரவில் தீக்குளி மூட்டுதலும், தவநிலை திருச் சடங்கும் 11 ஆம் திகதி அதிகாலை ஐந்து மணிக்கு தீ மிதிப்பும் 7 மணிக்கு மடிப் பிச்சை எடுத்தலும், விநாயகப் பானை எழுந்தருளற் பண்ணுதலும் நடைபெற்று 12 ஆம் திகதி அதிகாலை சமுத் திரத்தில் திருக்கும்பம் சொரிதலுடன் வருடாந்ததிருச்சடங்கு நிறைவு பெறவுள்ளது. (ற)

**விற்பனைப் பிரதிநிதி தேவை**

21- 30 வயதுக்குட்பட்ட துடிப்பான இளைஞர்கள் தேவை. தகுதி உடையவர்கள் கீழ் காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தகுந்த ஊதியம் வழங்கப்படும்.
தொடர்பு:- 021 2240514

**வீடு வாடகைக்கு**

அச்சுவேலி பத்தமேனி பஸ் நிலையத்துக்கு முன் ஒழுங்கையில் சகல வசதிகளும் கொண்ட வீடு (சுற்று மதில்) உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 077 6736888

## மரண அறிவித்தல்



**சுபாகரன் பத்மநாதன்**

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுபாகரன் பத்மநாதன் நேற்று (06.07.2014) ஞாயிற்றுகிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் விஜியலக்மி தம்பதியரின் அன்பு மகனும், நளினியின் (அரச சட்டத்தரணி) அன்புக் கணவரும், துளசிகாவின் பாசமிகு தந்தையும், கந்தசாமி- பத்மினிதேவி தம்பதியரின் அன்பு மருமகனும்,ஸ்ரீகரன் (கட்டார்), ரஜினி (சுவிஸ்) ஆகியோரின் சகோதரனும், சற்குணதேவி, ஜெயகாந்தன், சிவலக்மன், ஜானகி, அகிலன், சுகந்தன், விமலன், துசியந்தி, யமுனா ஆகியோரின் மைத்துனரும், கௌசிகா, கேசவன் ஆகியோரின் சித்தப்பாவும், ஜெனனி, சாயினி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

35/10பலாலி வீதி,
5 ஆம் ஒழுங்கை
கந்தர்மடம்

தகவல்:
மனைவி
குடும்பத்தினர்.

## நீங்காத நினைவுகளில்...

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
| --- | --- |
| 1970 - 06 - 22 | 2014 - 06 - 06 |



**கந்தசாமி - சேதுரட்ணம்**

தாய்க்குத் தலைமகனாய்
தரணியில் வந்துதித்து
சோதரர் அன்புடனே
சொந்தங்கள் பல சேர்த்த
உத்தமனே! அன்று
உன் செய்தி கேட்டு
வெடித்தது எம் நெஞ்சம்
சோகமுண்டானாலும்
கொஞ்சமும் சோர்ந்திடாது
இன்பமுடன் எம்மோடிருந்த
இனியவனே - இன்று எம்மருகில் நீயில்லை புலம்புகின்றோம் நாமிங்கு
என்றும் உன் ஆத்மா சாந்திக்காய் வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!
என்றும் உன் நினைவுகளில்.....

அம்மா, சகோதரர்கள், மக்கள்,மருமக்கள், மைத்துனர்கள், மைத்துனிகள்

## மரண அறிவித்தல்



**செல்லப்பா குமாரசாமி**

(முன்னாள் இ.போ.ச. ஊழியர், பண்ணையார்)

அராலி மத்தி வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா குமாரசாமி நேற்றுமுன்தினம் (05.07.2014) சனிக்கிழமை அராலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா- வள்ளியம்மை தம்பதியரின் புதல்வரும் பொன்னுத்துரை - அன்னலட்சுமி தம்பதியரின் மருமகனும், கமலாம்பிகையின் அன்புக் கணவரும், மகிபால் (கனடா), சுசிசன் (கனடா), பிரநீதா (கனடா), லலீசன் (கனடா), நர்மதா (கனடா), நிரோசன் (கனடா), ஆகியோரின் தந்தையாரும், ஜாலினி ,ரூபினி, விஜயகுமார், சாந்தி, பகிதரன், ஐசா ஆகியோரின் மாமனாரும்,ஈஸ்வர்,மாயா,தன்வர், ரோகினி, தரணி, கௌசிகன், கௌதிகா, ஸ்ரீமன், லவீனா, ஹரீஸ், ராகுல், ஜேடா ஆகியோரின் பேரனும் கனகம்மா, சுப்பிரமணியம், கனகரத்தினம், விசுவநாதர், முத்துக்குரசாமி, சிவப்பிரகாசம், மகாலிங்கம், சிவசுந்தரம் ஆகியோரின் சகோதரரும், சண்முகநாதன், ஞானாம்பிகை, சரோஜினி தேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.07.2014) செவ்வாய் கிழமை காலை 9.30 கிரியைகள் மணிக்கு நடைபெற்று பூனாவோடை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**சபாரத்தினம் அங்குசபாலன்** (நயினாதீவு)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், அமெரிக்கா, நியூயோர்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் அங்குசபாலன் நேற்று (06.07.2014) ஞாயிற்றுக் கிழமை அமெரிக்காவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும்.

இருபாலை வீதி,
நெசவுசாலை ஒழுங்கை
கோண்டாவில்.

தகவல்:
ச.சடாட்சரன் (ஜெகன்)
சகோதரர்

## தொடர்ச்சிகள்

### இன்று

அவர் சந்தித்து நாட்டின் தற்போதைய நிலவரங்கள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளார். இந்தச் சந்திப்பின் போது இலங்கையின் இனப் பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வை எட்டுவதற்கு ஆளும், எதிர்க்கட்சியினரை இணைத்துப் பேச்சு நடத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ரமபோஷ வேண்டுகோள் விடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை ரமபோஷ சந்திக்கவுள்ளார். கூட்டமைப்பினரை அவர் இன்று சந்திப்பார் எனத் தகவல் வெளியாகியிருந்த போதும், ஜனாதிபதியுடன் பேச்சு நடத்திய பின்னர் நாளை காலையே இரா.சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை ரமபோஷ சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இந்தச் சந்திப்பு நாளை செவ்வாய்க்கிழமை காலை 7.15 மணியளவில் கொழும்பு - தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெறும் என்று கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது வடக்கு - கிழக்கில் தொடரும் இராணுவ ஆக்கிரமிப்பு, கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வடக்கு மாகாண சபையை முடக்கும் வகையில் அரசு மேற்கொள்ளும் செயற்பாடுகள், வடக்கு - கிழக்கில் முழுமையாக இடம்பெறாத மீள் குடியமர்வு மற்றும் தமிழர் எதிர்பார்க்கும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு உட்படப் பல விடயங்களை ரமபோஷவுக்கு கூட்டமைப்பு எடுத்துரைக்கும் என்றும் சம்பந்தன் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, கூட்டமைப்பினரை நாளை சந்திக்கவுள்ள ரமபோஷ அன்று பகலே யாழ்ப்பாணத்துக்கு பயணமாகவுள்ளார். அங்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி ஆகியோரைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

அதேவேளை, யாழ். பயணத்தின் பின்னர் கொழும்பில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் ஆகியோரையும் ரமபோஷ சந்தித்துப் பேசுவார் என்றும் கூறப்படுகின்றது.

(ற)

### விசாரணை

ஜஹாங்கீர், பாகிஸ்தானைச் சேர்ந்தவராவார். "இந்த விசாரணை விவகாரத்தில் பாகிஸ்தான் அரசு செல்வாக்குச் செலுத்துமா?" என கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று அவரிடம் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

"ஒரு நிபுணர் என்ற வகையில் நான் சுதந்திரமானவள். எப்போதும் அவ்வாறு தான் இருக்கிறேன். எனது நாட்டு அரசு இந்த விவகாரம் குறித்து இதுவரை என்னிடம் பேசவில்லை. எந்த அரசோ, நிறுவனமோ என் மீது தலையீடு செய்ய முடியாது."- என்று அவர் தெரிவித்துள்ளார்.

(ற)

### வடக்கு

அதன் காரணமாக வடக்குக்கான ரயில் சேவைகள் அநுராதபுரத்திலிருந்து வவுனியா வரையான ரயில் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. அவற்றைச் சீராக்கும் முயற்சிகள் தற்போது ஆரம்பமாகியுள்ளது என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

(ற)

### சர்வதேச

ளார்.

மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கக் கூடிய வகையிலான விசாரணைப் பொறிமுறைமை ஒன்றின் அவசியம் எழுந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ள அவர், போரின் பின்னரான சவால்கள் மற்றும் அழுத்தங்களை ஐக்கிய நாடுகள் அமைப்பு தெளிவாக புரிந்து கொண்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான சந்தர்ப்பங்க ளில் சர்வதேச நாடுகளுடன் இலங்கை ஆக்கபூர்வமான முறையில் இணைந்து செயற்பட வேண்டியது மிகவும் அவசியமாகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(ற)

### பீரிஸ்

இருநாட்டு மீனவர் பிரச்சினை தொடர்பில் விரிவாக ஆராயப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபடுவதும், அதன் காரணமாகக் கைது செய்யப் படுவதும் பின்னர் விடுவிக்கப் படுவதும் தொடர்கதையாகியுள்ளன. இருநாட்டு மீனவர் பிரநிதிகளுக்கு இடையே நடை பெற்ற பேச்சுக்களிலும் எதுவித முன்னேற்றகரமாக முடிவுகளும் எட்டப்படவில்லை.

இந்த நிலையிலேயே அமைச்சர் பீரிஸ் நேரடியாக புதுடில்லி சென்று இந்த விடயம் குறித்து ஆராயவுள்ளார் என்று கூறப்படுகின்றது.

(ற-14)

### இராணுவத்தின்

குழு முன்பாக நேற்றுச் சாட்சியமளித்த முல்லைத்தீவு மக்கள் தெரிவித்துள்ளனர்.

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற் கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வுகள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று இரண்டாவது நாளாகவும் இடம்பெற்றது.

சாட்சியமளித்த சாட்சிகளிடம் ஆணைக்குழுவின் தலை வர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம, "நீங்கள் எப்போது இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்றீர்கள், அவ் வாறு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்லும் போது உங்களை யாராவது தடுத்தார்களா?, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்லும் போது ஷெல் தாக்குதல் இடம்பெற்றதா?, யார் ஷெல் தாக்குதலை மேற்கொண்டது?, ஷெல் தாக்குதல்களில் மக்கள் கொல்லப்பட்டனரா?, அதனை நீங்கள் நேரடியாகப் பார்த்தீர்களா?" என்று கேள்வியெழுப்பினார்.

ஆணைக்குழுவின் இந்தக் கேள்விகளுக்கு பதிலளித்த காணாமற் போனோரின் உறவுகள், "இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிக்குள் செல்லும் போது எங்களை யாரும் தடுக்கவில்லை, நாம் சுதந்திரமாகவே சென்றோம். அவ்வாறு செல்லும்போது ஷெல் தாக்குதல்களும், துப்பாக்கி ஓசைகளும் கேட்டன. இராணுவத்தினரின் பக்கதிலிருந்தே மக்கள் மீது ஷெல்கள் ஏவப்பட்டன. அதில் பல ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட் டனர். அவர்களது சடலங்கள் வீதிகளில் சிதறுண்டு கிடந்தன. அவற்றை நேரில் பார்த்து அதனைக் கடந்தே இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்றோம்"- என்று தெரிவித்த னர்.

(ற-5)

### ஓர் அரசின்

குழுவின் அமர்வுகள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று இரண்டாவது நாளாகவும் நடைபெற்றது. இதன் போது சாட்சியமளித்த வசந்தன் ரெஜுனா என்பவரே இவ்வாறு சாட்சியமளித்தார்.

ஆணைக்குழுவினர் யார் காணாமற் போனது என்று கேள்வியைக் கேட்டதும், எனது கணவர் காணாமற்போக வில்லை. அவரை நான் இராணுவத்தினரிடம் ஒப்படைத்தேன். அவர்கள் இன்றுவரையில் எனக்கு எந்தப் பதிலும் சொல்லவில்லை.

எப்போது ஒப்படைத்தீர்கள் என்று ஆணைக்குழுவினர் மீண்டும் கேள்வியெழுப்ப, மே 17 ஆம் திகதி 2009 ஆம் ஆண்டு பி.ப 1.30 மணியளவில் வட்டுவாகல் இராணுவச் சோதனைச் சாவடியில் ஒப்படைத்தேன். இறுதிக் கட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு நாம் வரும் போது, இராணுவத்தினர் தொடர்ச்சியாக ஒலிபெருக்கியில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்தவர்களை சரணடையுமாறு சொல்லிக்கொண்டிருந்தனர். அதற்கமையவே நான் எனது கணவரை இராணுவத்தினரிடம் கையளித்தேன்.

நீங்கள் கையளித்த இராணுவத்தினரின் பெயர் தெரியுமா என்று ஆணைக்குழுவினர் கேள்வியெழுப்பினர். நான் கையளித்த இராணுவத்தினரின் பெயர் தெரியாது. அங்கு நிறைய இராணுவத்தினர் அவர்களின் சீருடையில் நின்றனர். அவர்களிடம் கையளித்த பின்னர், எனது கணவருடன் நின்ற ஆண்கள் நிறையப் பேரை இராணுவத்தினரின் பேருந்தில் ஏற்றினர். அதனை நேரில் கண்டேன்.

நீங்கள் உங்கள் கணவரை எங்கு கொண்டு செல்கின்றீர்கள் என்று கேட்கவில்லையா? என்று ஆணைக்குழுவினர் கேட்க, அவர்கள் விசாரித்துப் போட்டு விடுவதாக மாத்திரம் தெரிவித்தனர். எங்கு கொண்டு செல்கின்றனர் என்று சொல்லவில்லை.

நீங்கள் கையளித்த இராணுவத்தினரிடம் என்ன விசாரணை என்று கேட்கவில்லையா என்று ஆணைக்குழுவினர் மீளவும் கேட்க, அப்போதைய சூழலில் இராணுவத்தினரிடம் எதையும் கேட்கும் நிலைமை இல்லை. நாம் திருப்பிக் கேட்க முடியாது.

நான் பொறுப்பான அரசின் இராணுவத்தினரிடமே எனது கணவரை ஒப்படைத்தேன். மனிதாபிமானமுள்ள அர சாக இருந்தால், நான் எப்படி எனது கணவரை இராணுவத்தினரிடம் ஒப்படைத்தேனோ அதே போன்று உயிருடன் எனக்குத் திருப்பித்தர வேண் டும் என்று கோரினார். இதற்கு ஆணைக்குழுவினர் பதிலளிக்கவில்லை.

இதன் பின்னர், உங்கள் பகுதிகளில் இராணுவத்தினர் இருக்கின்றனரா என்று ஆணைக்குழுவினர் கேட்டனர். அதற்கு இருக்கின்றனர் என்று பதிலளிக்க, இராணுவத்தினர் இருப்பது உங்களுக்கு பாதுகாப்பு என்று உணர்கின்றீர்களா என்று ஆணைக்குழுவினர் மீளவும் கேட்க, எனக்கு எனது அப்பாவும், அம்மாவும்தான் பாதுகாப்பு என்று பதிலளித்தார்.

(ற-5)

### செட்டிக்குளத்தில்

மாறு காணி அமைச்சின் மேலதிக செயலாளரினால் செட்டிகுளம் பிரதேச செயலகத்திடம் கோரிக்கை விடப்பட்டிருந்தது. இந்தக் காணிகள் தனியாருக்கு சொந்தமானவையாகும். அதில் அருவி ஆற்றின் கீழ் விவசாயம் செய்கை பண்ணப்பட்ட 600 ஏக்கர் வயல் நிலமும் அடங்குகின்றது.

தற்போது இந்தக் காணிகளுக்குள் நுழைய முடியாது எனவும் இது இராணுவத்தினரின் காணி எனவும் அறிவிப்புப் பலகை நடப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கடுமையாகப் பாதிப்படைந்துள்ளனர். மக்களின் காணியை சுவீகரிக்க ஒரு போதும் அனுமதிக்க கூடாது என அப் பகுதி பொது அமைப்புக்கள் கோரிக்கைவிட்டன.

இது தொடர்பில் அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் இடம்பெற்ற நீண்ட விவாதங்களின் முடிவில் இந்தக் காணியை இராணுவத் தேவைக்கு வழங்க முடியாது எனவும் அதனை மக்கள் பாவனைக்கு அனுமதி வழங்கவேண்டும் எனவும் முடிவெடுக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், நுனைஸ்பாறுக், முத்தலிப் பாறுக், வடமாகாணசபை உறுப்பினர்களான ம.தியாகராஜா, ஜெயதிலக, வடமாகாண சுகாதார அமைச்சின் பிரத்தியேக செயலாளர், செட்டிகுளம் பிரதேச செயலாளர் கமலதாசன், செட்டிகுளம் பிரதேச சபை உப தவிசாளர் சந்திரமோகன், பிரதேசசபை உறுப்பினர் சிவம், கிராம அலுவலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(ஐ-402)

### சந்தேகமாக

இடத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் நின்ற நபரையே தாம் கைது செய்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

குடத்தனையை சேர்ந்த 45 வயதுடைய குறித்த நபர் ஏற்கனவே வழக்கு ஒன்றுடன் சம்பந்தப்பட்டு சிறை வாசம் இருந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவரை கடந்த 4ஆம் திகதி பருத்தித்துறை நீதிவான் கஜநிதிபாலன் முன்னிலையில் முன்னிலைப்படுத்திய போது சந்தேக நபரை எதிர் வரும் 11 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ- 109)

### ஜனாதிபதி

மாதம் 21 ஆம் திகதி டுவிட்டர் மூலம் ஜனாதிபதி அறிவித்திருந்தார். இதனையடுத்து, மேற்படி குழுவை நியமிப்பதற்குரிய பணிகள் கடந்த சில வாரங்களாக இடம்பெற்று வந்த நிலையிலேயே இவ்வாரம் பணிகள் நிறைவு பெற்று, குழு நியமனம் இடம்பெறவுள்ளது. இனமற்றும் மதரீதியான முரண்பாடுகள் ஏற்படுவதற்கு எவை பிரதான காரணங்களாக அமைகின்றன என்று ஆராய்ந்து அவற்றுக்குத் தீர்வுகாணும் வகையில் சிபாரிசுகளை முன்வைப் பதே இக்குழுவின் பிரதான பணியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### கட்டணம்

மீண்டும் இந்தியாவுடன் சேர்ப்பது ஒன்று தான் தீர்வாக இருக்கும் என்று முதலமைச்சர் ஜெயலலிதா தொடர்ந்து வலியுறுத்தி வரும் நிலையில் இராஜ தந்திர முறையில் இதற்கு தீர்வு காண வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஐ-14)

### விடுதலைப்

ஆனாலும் அவர்களைக் கண்டோம். போரின் பின்னர் அவர்களைக் காணவில்லை என்றும் காணாமற்போனோரின் உறவுகள் ஆணைக்குழுவின் முன்பாகத் தெரிவித்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக முறைப்பாடுகள் செய்தவர்களில் பெரும்பாலானவர்கள், இறுதிக் கட்டப் போர் இடம்பெற்ற காலப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் கட்டாய ஆள்சேர்பில் கொண்டு செல்லப்பட்டனர். இந்தக் கட்டாய ஆள்சேர்ப்புக்காக, தமிழீழ விடுதலைப் புலிகள் இளைஞர்களையும் - யுவதிகளையும் வீடு புகுந்தும் கடத்திச் சென்றனர் என்று தெரிவித்தனர்.

(ஐ-5)

### கடந்த

பேசி மூலம் தொடர்பு கொண்டு, தாம் பயங்கரவாத தடுப்புப் பிரிவில் இருந்து கதைப்பதாகத் தெரிவித்து, உடனடியாக கிளிநொச்சியில் விசாரணைக்கு வருமாறு தெரிவித்திருந்தனர். இதனை நேற்று முன்தினம் ஆணைக்குழு முன்பாகச் சாட்சியமளித்த ஒருவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலைமைகளினால், ஆணைக்குழுவின் முதல் நாள் அமர்வில் 61 பேர் அழைக்கப்பட்டிருந்த போதும் 25 பேர் சாட்சியமளித்திருந்தனர். நேற்றைய தினமும் 61 பேர் அழைக்கப்பட்டிருக்க 29 பேரே சாட்சியமளித்திருந்தனர். அத்துடன் முதல் நாளில் 152 புதிய விண்ணப்பங்களும், நேற்றைய தினம் 85 புதிய விண்ணப்பங்களும் பதிவாகியுள்ளன.

(ஐ-5)

### வடக்கு

வடமாகாணத்தில் 5 மாவட்டங்களையும் உள்ளீடக்கி சிறந்த தொழில் முயற்சியாளர்களுக்கு 18 இற்கும் மேற்பட்ட விருதுகள் வழங்கப்படவுள்ளன.

வடமாகாணத்தில்சிறந்ததொழில் முயற்சியாளர்களுக்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் சிறிய நடுத்தர மற்றும் பெரும் கைத்தொழில் துறைகளில் தொழில் முயற்சியாளர்களை இனம் கண்டு இந்த விருதுகள் வழங்கப்படவுள்ளன.

(ஐ-14)

### உயிரோடு

போதே அவர் காணாமற் போனார். கணவர் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதற்கு உரிய ஆதாரங்கள் வவுனியா வைத்தியசாலையினால் எமக்குத் தரப்பட்டது. அத்துடன் இராணுவத்தினரிடம் சரணடைந்து பதிவு செய்தமைக்கான ஆதாரங்களும் ஐ.சி.ஆர்.சியினால் எமக்கு வழங்கப்பட்டது.

இதன் பின்னர் 2010 ஆம் ஆண்டு 0717566537 என்ற தொலைபேசி இலக்கத்திலிருந்து தொடர்பு கொண்ட சதீஸ் என்பவர், எனது கணவர் தனது பாதுகாப்பில் இருப்பதாகத் தெரிவித்தார். இதன் பின்னர் நான் எனது கணவரைத் தேடி அலைந்த போது, 2012 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்த, பயங்கரவாத தடுப்புப் பிரிவைச் சேர்ந்த விஜய பண்டார என்பவர், எனது கணவர் இறந்து விட்டார் என்று இறப்புச்சான்றிதழையும் நஷ்ட ஈட்டுப் பணமாக ஒன்றரை லட்சத்தையும் கொண்டு வந்து, என்னை இறப்புச் சான்றிதழ் பத்திரத்தில் கையொப்பம் இடச் சொல்லி வற்புறுத்தினார்.

நான் மறுத்து விட்டேன். இதனை வெளியில் சொல்லக் கூடாது என்றார். நான் ஊடகங்களிடம் தெரிவிப்பேன் என்று சொன்னதும், என்னைக் கைது செய்து விடுவேன் என்று மிரட்டினார். இதன் பின்னரும், பயங்கரவாத தடுப்புப் பிரிவிலிருந்து ஒவ்வொரு மாதமும் விசாரணைக்கு வருமாறு அழைப்பார்கள். நான் ஒவ்வொரு முறையும் விசாரணைக்குச் சென்றேன். அப்போதும் எனது கணவரை அவர்கள் காண்பிக்கவில்லை. 2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம், கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் வைத்து பயங்கரவாத தடுப்புப் பிரிவைச் சேர்ந்த றிஸ்மி மற்றும் அசங்க இருவரும், எனது கணவர் தொடர்பில் முழு விவரங்களையும் தெரிவித்தனர். எனக்கும் எனது கணவருக்கும் மாத்திரம் தெரிந்த விடயங்களையும் அவர்கள் தெரிவித்தனர்.

இதன் பின்னர் கடந்த டிசெம்பர் மாதம், எனது கணவர் இல்லை என்றும் எனது கோப்பை முடித்து விட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். அதன் பின்னர் என்னை பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் விசாரணைக்காக அழைப்பதில்லை என்று தெரிவித்தார்.

(ஐ-5)

# பொதுபல சேனாவை தடை செய்ய வேண்டாம்

**வீரவன்ஸ தெரிவிப்பு**

பொதுபல சேனா அமைப்பை தடை செய்யக் கூடாது என்று அமைச்சரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணி நாடு முழுவதும் நடத்திய கருத்தரங்கில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பொதுபலசேனா தடை செய்யப்படுமானால், தவ்ஹீத் ஜமாத் போன்ற அமைப்புகளும் தடை செய்யப்பட வேண்டும். இந்த அமைப்புகளைத் தடை செய்யக் கூடாது. அப்படி தடை செய்தால், இந்த அமைப்புகள் பொய்யான வீரத்தைப் பெற்றுக் கொள்ளும். அதற்கு இடமளிக்கக் கூடாது என்றும் வீரவன்ஸ கூறியுள்ளார். (வ)



இணுவில் கந்தசுவாமி கோயில் மகாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நேற்று முன்தினம் ஆயிரக் கணக்கான அடியவர்கள் பாற்செம்புக் காவடிகள் எடுத்து தமது நேர்த்திகளை நிறைவேற்றினார்கள். மருதனார்மடம் சந்தியில் அமைந்துள்ள வைரவர் ஆலயத்தில் இருந்து இணுவில் கந்தசுவாமி கோயில் வரை இந்தக் காவடிப் பவனி இடம்பெற்றது. குழந்தைகள், சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகள், முதியவர்கள் எனப் பலரும் காவடி தூக்கி தமது நேர்த்திகளை நிறைவேற்றினர். அடியவர்கள் முன்னே இரண்டு யானைகள் செல்ல அதனைத் தொடர்ந்து இரண்டு குதிரைகளும் சென்றன. இதன் காரணமாக மருதனார்மடத்துக்கும் இணுவிலுக்கும் இடைப்பட்ட வீதியில் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டபோதும் சுன்னாகம் பொலிஸார் போக்குவரத்தைச் சீர்செய்வதில் ஈடுபட்டு இருந்தார்கள். (ஓ-86)

# புதிய நடைமுறையின் கீழ் ஓய்வூதியக் கொடுப்பனவு

வருட இறுதியில் சாத்தியமாகலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

அரச சேவை ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் சம்பந்தப்பட்டவர்களின் வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்படவுள்ளன. இதனால் ஓய்வூதியர் தமது விருப்பத்துக்கு ஏற்ற வேளையில் ஏ.ரி.எம். அட்டைகளைப் பயன்படுத்தியும் தமது ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான ஏற்பாடுகள் ஓய்வூதியத் திணைக்களத்தின் அறிவித்தலுக்கு அமைவாக பிரதேச செயலங்களில் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் மாதாந்தம் கொடுப்பனவுச் சீட்டுக்களின் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன.

புதிய நடைமுறையின் கீழ் கொடுப்பனவுச் சீட்டுக்கள் அனுப்பி வைக்கப்பட மாட்டாது. கொடுப்பனவுச் சீட்டு மூலம் ஓய்வூதியம் வழங்கப்படும் நடைமுறையில் கூட்டு வங்கிக் கணக்கும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. புதிய நடைமுறையில் ஒவ்வொருவரின் பெயரிலும் உள்ள தனிப்பட்ட வங்கிக் கணக்குக்கே கொடுப்பனவு வழங்கப்படும் இதற்கு வசதியாகக் கூட்டுவங்கிக் கணக்குகள் தவிர்க்கப்பட்டு, தனிப்பட்ட வங்கிக் கணக்குகள் ஆரம்பிக்கப்படுவதோடு சகல ஓய்வூதியரும் தமது வங்கிக் கணக்குப் புத்தகத்தின் கணக்கு இலக்கம் மற்றும் பெயர் விபரம் உள்ளடக்கிய பக்கத்தைப் போட்டோப் பிரதி எடுத்து அதனைப் பிரதேச செயலக ஓய்வூதியப் பிரிவில் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

புதிய நடைமுறையின் கீழ் இந்த வருட இறுதிப்பகுதியில் இருந்து ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்படவிருப்பதால் அதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-11)

## இரு நூல்களின் வெளியீட்டில்



யாழ்ப்பாணம், ஜூலை 7

மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணனின் 'கற்றலும் கற்றல் சூழலும்', 'உள் மனச் சித்திரம்' ஆகிய இரண்டு நூல்களின் வெளியீட்டுவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ். பல்கலைக் கழக முன்னாள் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா மங்கல விளக்கேற்றி நிகழ்வைத் தொடக்கி வைத்தார்.

சிறப்பு விருந்தினராகக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கலந்து கொண்டார்.

தலைமையுரையைத் தொடர்ந்து வாழ்த்துரையை கலாநிதி ஆறு.திருமுருகன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா ஆகியோர் வழங்கினர்.

கல்வி அமைச்சரிடமிருந்து நூலின் முதல் பிரதிகளை சர்வதேச லயன்ஸ் கழகத்தின் உப மாவட்ட ஆளுநர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா பெற்றுக் கொண்டார். அதைத் தொடர்ந்து விருந்தினர்கள் சிறப்புப் பிரதிகளை வழங்கினார்கள். நூல்களுக்கான அறிமுகம், ஆய்வுரைகளை யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜெ.இராசநாயகமும், கிளிநொச்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.மதிக்குமரனும், ஏற்புரையை நூலாசிரியர் முத்து இராதாகிருஷ்ணனும் வழங்கினர். (வ-7)

# மஹிந்த சிந்தனையின் மது ஒழிப்பு தென்பகுதியில் மட்டுமே நடைமுறை

## மட்டக்களப்பில் புதிதுபுதிதாய் மது விற்பனை நிலையங்கள் குற்றஞ்சாட்டுகின்றார் அரியநேத்திரன் எம்.பி.

மட்டக்களப்பு, ஜூலை 7

"மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும் வறுமை நிலைக்கும், மதுப் பாவனைக்கும் தொடர்பு உள்ளது. மதுப் பாவனையை ஒழிக்க வேண்டும் என்பதற்காக மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்திலும் மது பாவனைக்கு முற்றுப் புள்ளி என்று கூறப்பட்டுள்ளது.

ஆனால், தென் இலங்கையில் வழங்கப்படும் மது விற்பனை அனுமதிப்பத்திரங்கள், மட்டக்களப்பு மாவட்டத்துக்கு மாற்றப்பட்டு வருகின்றன.

அப்படியானால், மஹிந்த சிந்தனை என்பது மட்டக்களப்பில் மதுபான அதிகரிப்பும் தென்பகுதியில் மதுபாவனைக் குறைப்பும் என்று தெளிவாக புலனாகிறது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.அரியநேத்திரன்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"மது பாவனையை குறைத்து மட்டக்களப்பை காப்பாற்றுங்கள் என்ற தொனிப்பொருளில் மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாதர் சங்கங்கள் ஒன்றிணைந்து நடத்திய கவனவீர்ப்பு போராட்டமும் அவர்களால் வெளியிடப்பட்ட மட்டக்களப்பில் மதுப் பாவனை பற்றிய புள்ளிவிவரங்களும் முற்றிலும் உண்மையானவை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 54 மதுபானச்சாலைகளும் 31 மது பாவனை உணவகங்களும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. தற்போதும் தென்பகுதியில் உள்ள மதுபான அனுமதிப்பத்திரங்களை மட்டக்களப்புக்கு மாற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருவதை அறியக்கூடியதாக உள்ளது. அதற்கு அரசில் உள்ள சில அரசியல்வாதிகள் துணைபோகின்றனர் என்றும் அறிய முடிகிறது.

விடுதலைப்புலிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆளுகை செலுத்திய காலப்பகுதியில் படுவான்கரைப் பகுதியில் எந்த ஒரு மதுபானச்சாலைகளும் திறக்கப்படவில்லை. ஆனால் இன்று 10 இற்கும் மேற்பட்ட மதுபானச்சாலைகள் படுவான்கரை பிரதேசத்தில் திறக்கப்பட்டுள்ளன.

முள்ளிவாய்க்கால் போர் முடிவுற்று சமாதானம் ஏற்பட்டதாக அரசாங்கம் கூறும் 5 வருடங்களில் மதுபானச்சாலைகள் அதிகரிக்கப்பட்ட விடயம் சம்பந்தமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் பலமுறை நாடாளுமன்றத்திலும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களிலும் சுட்டிக்காட்டி வந்துள்ளோம் அதை எவரும் கவனத்தில் எடுக்கவில்லை.

மட்டக்களப்பு அரச அதிபர் தெரிவித்துள்ள புள்ளி விவரங்களின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு மாதத்திற்கு 200 மில்லியன் ரூபா மட்டக்களப்பு மாவட்ட மக்கள் செலவு செய்கின்றனர்.

தற்போதுள்ள 85 மது பாவனை நிலையங்களை குறைப்பதற்கான நடவடிக்கையை கட்சி அரசியல் பேதமின்றி சமூக நலனை முன்நிறுத்தி அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# மூவரின் விடுதலைக்கு பா.ஜனதா அரசும் எதிர்ப்பு?

சென்னை, ஜூலை.7

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலையாளிகள் விடுதலைக்கு பாரதீய ஜனதா அரசும் எதிர்ப்பு தெரிவிக்க முடிவு செய்துள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரது தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக உச்ச நீதி மன்று குறைத்து உத்தரவிட்டது.

அவர்கள் 20 ஆண்டுகளுக்கு மேல் சிறை தண்டனை அனுபவித்து விட்டதால் அவர்களையும் ஏற்கனவே தண்டனை அனுபவித்து வரும் நளினி, ராபர்ட்பயஸ், உள்ளிட்ட 4 பேர் என மொத்தம் 7 பேரையும் விடுதலை செய்ய தமிழக அரசு கடந்த பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி முடிவு செய்தது.

தமிழக அரசின் முடிவுக்கு முந்தைய காங்கிரஸ் அரசு எதிர்ப்புத் தெரிவித்து உச்ச நீதிமன்றில் பெப்ரவரி 20 ஆம் திகதி மனு தாக்கல் செய்தது. அதையடுத்து 7 பேர் விடுதலைக்கு உச்ச நீதிமன்று இடைக்ககாலத் தடை விதித்தது.

வழக்கை விசாரித்த அப்போதைய உச்ச நீதிமன்று தலைமை நீதிபதி பி.சதாசிவம் தான் ஓய்வு பெறுவதற்கு முன் தீர்ப்புக் கூறுவதாக இருந்தார். தேர்தலின் போது தீர்ப்புக் கூற எதிர்ப்புகிளம்பியதால் தலைமை நீதிபதி சதாசிவம் வழக்கை 5 நீதிபதிகள் அடங்கிய உச்ச நீதிமன்றின் அரசியல் சாசன பெஞ்ச் விசாரணைக்கு மாற்றி உத்தர விட்டார். 3 மாதத்துக்குள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்றும் உத்தரவில் கூறியிருந்தார்.

அதையடுத்து இந்த வழக்கு விசாரணை நாளை செவ்வாய்க்கிழமை உயர் நீதிமன்றின் அரசியல் சாசன அமர்வுக்கு முன் விசாரணைக்கு வருகிறது. அன்றைய தினம் தமிழக அரசு மற்றும் மத்திய அரசு சட்டத் தரணிகள் முன்னிலையாகி வாதாடவுள்ளார்.

தமிழக அரச சட்டத்தரணி ஏற்கனவே வாதாடுகையில் 7 பேரையும் விடுதலை செய்ய மாநில அரசுக்கு அதிகாரம் இருப்பதாக எடுத்துக் கூறினார். ஆனால் மத்திய அரசு சட்டத்தரணி, இது தீவிர வாதம் சம்மந்தப்பட்ட குற்றம்

**வழக்கை விசாரித்த அப்போதைய உச்ச நீதி மன்று தலைமை நீதிபதி பி.சதாசிவம் தான் ஓய்வு பெறுவதற்கு முன் தீர்ப்பு கூறுவதாக இருந்தார்**

எனவே 7 பேரையும் விடுவிக்கக் கூடாது என்று வாதாடினார்.

தற்போது மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு பா.ஜனதா அரசு அமைந்துள்ளது. ஆனாலும் 7 பேர் விடுதலையில் பா.ஜனதா அரசு பழைய காங்கிரசின் கொள்கையையே கடைப்பிடிக்கும் என்றும், 7 பேர் விடுதலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை வாதாடும் என்றும் கூறப்படுகிறது. (வ)

# கோப்பாய் ஆசிரிய கலாசாலை விடுதிகள் புனரமைக்க நிதி ஒதுக்கீடு

அச்சுவேலி, ஜூலை 7

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் மாணவர் விடுதி மற்றும் கட்டடங்களின் திருத்த வேலைகளுக்கு கல்வி அமைச்சு 55 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது. குறித்த நிதியைப் பயன்படுத்தி திருத்த வேலைகளை மேற்கொள்ளுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் மாணவர் விடுதி மற்றும் சமையல்கூடம் உள்ளிட்ட கட்டடத்தொகுதி நீண்டகாலமாக திருத்தி அமைக்கப்படாமல் உள்ளன.

மாணவர் விடுதி திருத்தி அமைக்கப்படாமையால் கலாசாலையில் பயிற்சி பெறும் ஆசிரிய மாணவர்கள் கலாசாலைக்கு வெளியே தனியார் வீடுகள் மற்றும் இடங்களில் தங்கி இருந்தே பயிற்சி பெறுகின்றனர்.

இதனால் பயிற்சி ஆசிரியர்கள் பயிற்சிக் காலத்தில் தங்குமிட வாடகையாக கணிசமான அளவு செலவு செய்வதோடு பல்வேறு விதமான சிரமங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

மாணவர் விடுதி மற்றும் கட்டடங்கள் திருத்தி அமைப்பதன் மூலம் எதிர்காலத்தில் கணிசமான அளவு பயிற்சி ஆசிரியர்கள் கலாசாலையில் தங்கி இருந்து பயிற்சிகளை வசதியான நிலையில் பெற முடியும் என்று தெரிவிக்கின்றனர். (வ-11)

# பொதுபலசேனா, ராவண பலயவை மீண்டும் சந்திக்கிறார் கோத்தபாய!

*வெள்ளியன்று நடைபெற்ற பேச்சில்*
*அளுத்கம சம்பவம் குறித்தும் ஆராய்வு*

கொழும்பு, ஜூலை 7

பொதுபலசேனா, ராவண பலய உள்ளிட்ட கடும் போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கடந்த வெள்ளியன்று பாதுகாப்பு அமைச்சுக்கு அழைத்து பேச்சு நடத்தியுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இவ்வமைப்புகளின் பிரதிநிதிகளை இரண்டாவது தடவையாகவும் இம்மாதம் சந்தித்துப் பேச்சுநடத்தவுள்ளார் என்று அறியமுடிகின்றது.

இந்தத் தகவலை நேற்று 'சுடர் ஒளி'யிடம் உறுதிப்படுத்திய ராவண பலய அமைப்பின் தலைவர் இத்தே கந்த சத்தாதிஸ்ஸ தேரர், இன்னும் இரண்டு வாரங்களில் அடுத்த சுற்றுப் பேச்சு இடம்பெறும் எனவும் குறிப் பிட்டார்.

அளுத்கம, பேருவளை, தர்காநகர் உட்பட நாட்டில் அண்மைக்காலங்களில் இடம்பெற்ற அசாதாரண சம்பவங்கள் தொடர்பில் இதன்போது கருத்துப் பரிமாற்றல்கள் இடம்பெற்றுள்ளன. அளுத்கம சம்பவம் தொடர்பில் தமது பக்க நியாயத்தைப் பாதுகாப்புச் செயலாளரிடம் பொதுபலசேனா முன்வைத் துள்ளது.

இதனையடுத்து கருத்து வெளியிட்டுள்ள பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முரண்பாடான சம்பவங்களுக்கு எவரும் இடமளிக்கக் கூடாது என்றும், அவ்வாறான சம்பவங்களின்போது அனைத்துத் தரப்பினருடனும் பேசி சுமுகமாகப் பிரச்சினைகளை முடிக்கவேண்டு மெனவும் கூறியுள்ளார் எனத் தெரியவருகின்றது.

அதேவேளை, பௌத்த அமைப்புகளுடனான சந்திப்பு முடிவடைந்த பின்னர் அடுத்த கட்டமாக இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களைச் சார்ந்த பிரதிநிதிகளையும் பாதுகாப்புச் செயலாளர் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். வெள்ளியன்று நடைபெற்ற சந்திப்பின்போது இது குறித்து அவர் கருத்து வெளியிட்டுள்ளார் என அறியமுடிகின்றது. சிஹல ராவய அமைப் பும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டுள்ளது.

# இளவயதுத் திருமணம் வாகரையில் அதிகரிப்பு

*விழிப்புணர்வு நடவடிக்கைக்கு ஏற்பாடு*

*மட்டக்களப்பு, ஜூலை 7*

*மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை பிரதேசத்திற்குட்பட்ட மாணவர்களில் அனேகமானோர் இளவயதில் திருமணம் செய்யும் வழக்கம் அதிகரித்துள்ளது என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மட்டக்களப்பு சிவில் குழுவின் செயற்குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.*

*இந்தக் குழுவின் கூட்டம் மேற்படி ஆணைக்குழுவின் மட்டக்களப்பு அலுவலகத்தில் பிராந்திய இணைப்பாளர் இரா. மனோகரன் தலைமையில் நடைபெற்றது.*

*மேலும் வேலை வாய்ப்புக்காக வெளிநாடு செல்லும் தாய்மார்களின் இள வயதுப் பிள்ளைகளும் சீரழிந்து வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.*

*இதனை அடுத்து வாகரை கரடியனாறு மகிழவட்டுவான் மகிழூர் பகுதி பாடசாலைகளில் விழிப்புணர்வு கூட்டங்களை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ற)*

# ஜெனிவாச் சமரைச் சமாளிக்க மார்ச்சில் ஜனாதிபதித் தேர்தல்!

*வியூகம் வகுக்கிறது அரசு*

கொழும்பு, ஜூலை 7

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஆண்டு மார்ச் மாதமளவில் நடைபெறலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. 2015 ஜனவரியில் தேர்தல் இடம்பெறலாம் என முன்னர் ஊகங்கள் வெளியாகியிருந்த நிலையில், தற்போது ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு வின் 28ஆவது அமர்வு நடைபெறவுள்ள அதேகாலப் பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த அரசு திட்டமிடுவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஐ.நாவின் விசாரணை அறிக்கை அக்காலப் பகுதியில் வெளியானால் தேர்தலில் வெற்றி பெறுவதன் மூலம் மக்கள் ஆதரவு தனக்குள்ளதாக ஜனாதிபதி காண்பிக்க முயல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், பரிசுத்த பாப்பரசரின் விஜயத்தைக் கருத்திற் கொண்டும் இது குறித்து சிந்திக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பாப்பரசர் ஜனவரி 15 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். எனினும், தேர்தல் அறிவிக்கப்பட்ட நாடொன்றிற்கு பாப்பரசர் விஜயம் மேற்கொள்வதில்லை என்ற நடைமுறையை வத்திக்கான் கடைப்பிடிக்கின்றது. இதைக் கருத்தில் கொண்டும் அரசு தேர்தலை ஜனவரியில் நடத்த விரும்பவில்லை.

# தீயால் இரு கடைகள் நாசம் ஏறாவூரில் வெள்ளியன்று சம்பவம்



*தீக்கிரையான மர அரிவு நிலையம்*

ஏறாவூர், ஜூலை 7

ஏறாவூர், பிரதான வீதியில் அமைந்துள்ள மர அரிவு நிலையமும் மரத்தளவாட விற்பனை நிலையமும் தீயினால் எரிந்து நாசமாகியுள்ளன. இந்த விபத்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்றுள்ளது.

மர அரிவு நிலையம் அமைந்துள்ள கடையின் பின் பகுதியிலிருந்தே தீ பரவி முன்னாலுள்ள மரத் தளவாட விற்பனை நிலையத்துக்கும் தீப் பிடித்து கடையின் கூரைப் பகுதி எரியத் தொடங்கியுள்ளது. அதன் பின்னரே பொது மக்கள் கண்டு தீயை அணைக்க முற்பட்டனர்.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பும் தனது கடைக்கு தீ வைக்க முயற்சி எடுக்கப்பட்டது என்றும், அது குறித்து ஏறாவூர் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது என்று மரத் தளபாட விற்பனை நிலையத்தின் உரிமையாளர் தெரிவித்துள்ளார். இந்த விபத்துக் குறித்து ஏறாவூர் பொலிஸ் நியைத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ற)




| | | |
|---|---|---|
| கொழும்பு — துபாய் | —19000 | O/W |
| கொழும்பு — சென்னை | —21900 | RTN |
| கொழும்பு — திருச்சி | —22400 | RTN |
| கொழும்பு — டோகா | —26000 | O/W |
| கொழும்பு — மலேசியா | —30000 | RTN |
| கொழும்பு — சிங்கபூர் | —30200 | RTN |
| கொழும்பு — லண்டன் | —44800 | O/W |
| கொழும்பு — பிரான்ஸ் | —45500 | O/W |
| கொழும்பு — ஜேர்மன் | —72300 | RTN |
| கொழும்பு — கனடா | —105700 | o/w |

வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்

#16,1/2,E.S.Fernando mawatta Colombo-06
#128,Brown Road, Jaffna

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்



**சின்னப்பு கந்தசாமி**

(ஓய்வுபெற்ற ஊழியர், இலங்கை மின்சாரசபை)

Dr. நடராஜா வீதி Dr. சுப்பிரமணியம் றோட், சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு கந்தசாமி கடந்த (04.07.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு- சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா -நாகம்மா தம்பதியரின் மருமகனும், தவநாயகியின் அன்பு கணவரும், தயாளசிவம் (சுவிஸ்), கௌரிநாயகி (ஜேர்மனி), தயாபரன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும்,கௌரீஸ்வரி, மகேந்திரா, தர்சினி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2014) திங்கட் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Dr. நடராஜா வீதி
Dr. சுப்பிரமணியம் றோட்,
சுன்னாகம்

தகவல்:
குடும்பத்தினர்.

DMI - ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
புவியியற் கருத்தரங்கு
A/L - 2014
N.பாபு BA-Geo-Spl
யூலை - 12, 13 ,14,15 ஆம் திகதிகளில்
*ஆரம்பம் – 12.07.2014
சனி - 12 மணி
*பிரதான விடயங்கள் ஆராயப்படும்
*அனுமதிகளை அலுவலகத்தில் பெறலாம்
*வெளி மாணவர்கள் பங்குபற்றலாம்

Dip in Mobile Repairing
அனைத்துவிதமான கையடக்க தொலைபேசிகளிலும் ஏற்படும் Hardware, Software பழுதுகள் அனைத்தினையும் பழுதுபார்ப்பது பற்றி 100% Practical ஆக கற்றுக்கொள்ளுங்கள்
INFOTECH COMPUTER EDUCATION
புதிய பிரிவு 12.07.2014 சனிக்கிழமை மாலை 4.00ற்கு ஆரம்பமாகின்றது
வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக்கொள்வதற்கான சிறந்த கற்கைநெறி
#3, Ramanathan Road, Kaladdy Junction, Jaffna.
T.P: 021-492-2813, 077 6138955.




ALLIANCE FRANÇAISE DE JAFFNA
THE ONLY OFFICIAL FRENCH LANGUAGE & CULTURAL CENTRE
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி af Alliance Française de Jaffna
கற்பதற்கு FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 1883 PARIS இல் நிறுவப்பட்டது. யாழில் 1976 முதல். 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், STANDARD PRONUNCIATION, அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS. பிரெஞ்சு மொழிபெயர்புகள், AUDIO-VISUAL AIDS, பிரமாண்டமான நூலகம்
பிரான்ஸ் செல்வோர் அனுமதிகளுக்கு முந்துங்கள்
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்
தனிநபர்களிடம் சென்று பணத்தையும் நேரத்தையும் இழக்காதீர்கள்.
கச்சேரி → ஆலயம் ✝ → AF / ஆரியகுளம் → ஸ்ரான்லிறோட்,றக்கா றோட் → AF

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.